# சிவஞான சித்தியார் ஆராய்ச்சி



ஆக்கியோர் :
சித்தாந்தப் பேராசிரியர்
ந. சிவகுருநாத பிள்ளை, தூத்துக்குடி.

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண்: ௩௦

உ

திருச்சிற்றம்பலம்

# சிவஞானசித்தியார் ஆராய்ச்சி

இது
திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்து இருபதாவது
குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாணதேசிக சுவாமிகள் அவர்கள்
ஆணையிட்டருளியவாறு
வெளியிடப்பெற்றது.

ஆக்கியோர்:
சித்தாந்தப் பேராசிரியர்
ந. சிவகுருநாத பிள்ளை
தூத்துக்குடி.

அப்பர் அச்சகம்
2/140, பிராட்வே, சென்னை 1.
1949

முதற் பதிப்பு டிசம்பர் : 1949

[உரிமை பதிவுசெய்யப்பட்டது]

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| அணிந்துரை | .... | v |
| முன்னுரை | .... | vii |
| ஆசிரியர் வரலாறு | .... | xiii |
| காப்பு | .... | 1 |
| சித்தாந்தச் சிறப்பு | .... | 2 |
| தோற்றுவாய் | .... | 3 |
| பாயிரம் | .... | 9 |
| அளவையியல் | .... | 11 |
| பிரமாணவியல் | | |
| முதற் சூத்திரம் | .... | 13 |
| இரண்டாஞ் சூத்திரம் | .... | 25 |
| மூன்றாஞ் சூத்திரம் | .... | 52 |
| இலக்கணவியல் | | |
| நான்காஞ் சூத்திரம் | .... | 54 |
| ஐந்தாஞ் சூத்திரம் | .... | 62 |
| ஆறாஞ் சூத்திரம் | .... | 66 |
| சாதனவியல் | | |
| ஏழாஞ் சூத்திரம் | .... | 70 |
| எட்டாஞ் சூத்திரம் | .... | 73 |
| ஒன்பதாஞ் சூத்திரம் | .... | 84 |
| பயனியல் | | |
| பத்தாஞ் சூத்திரம் | .... | 96 |
| பதினோராஞ் சூத்திரம் | .... | 101 |
| பன்னிரண்டாஞ் சூத்திரம் | .... | 111 |



ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
20-வது குரு மகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்.

சிவமயம்

# அணிந்துரை

மனிதன் மிகப் பழையகாலந் தொட்டே, தனது உயிர் அழிவ தில்லை யென்றும், அஃது ஒரு நிலையான வாழ்வையுடைய தென்றும் நம்பி, அவ்வாழ்விற்குத் தனது அறிவு ஆற்றல் அனுபவ நிலைகட் கேற்ப ஏதேனும் ஓர் ஏற்பாட்டைச் செய்துவந்திருக்கிறான். இது நியாண்டார்த்தல், (Neandarthal) பில்ட்ஸ்டவுன் (Piltsdown) முத லிய இடங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியால் விளங்கும். உலகில் பெரும்பான்மையோர் உயிர் கடவுளோடு தொடர்புடையதென்றும், உறுதி தருவது அத்தொடர்பேயென்றும் நம்பிவந்துள்ளனர். இதுபற்றிய ஆராய்ச்சியே சமயம் எனப்படும். இத்துறையில் ஏற்பட்ட பலவகைக் கருத்துக்களே பலவகைச் சம யங்களாயின. சமயங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது சைவசமயமே என்பது இந்நூலின் முடிபு. இம்முடிபை வலியுறுத்துவதற்கு மிகச் சிறந்த காரணங்கள் பல இந்நூலின்கண் ஆங்காங்கு மிளிர்கின்றன.

தத்துவ சாத்திரங்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவது சிவஞானசித்தியார். இதன் பரபக்கத்துள் ஏனைய சமயங்களின் முடிபுகள் பூர்வபக்ஷம் செய்யப்படுகின்றன. சுபக்கம் என்ற பகுதி யில் சைவசித்தாந்த நுட்பங்கள் விளக்கப்பெற்று, பரபக்ஷவாதிகள் கூறும் தடைகட்குத் தக்க விடைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இவற் றின் விரிவையெல்லாம் நன்கறிந்து தெளிதற்கு இச்சிறு ஆராய்ச்சி நூல் பெருந்துணையாக மிளிர்கின்றது. இதை எழுதிச் சைவ உலகத் திற்கு அளித்த பெருந்தகையார் "சித்தாந்தப் பேராசிரியர்" திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களேயாவர். இப்பெரியாரைத் தமிழ்நாடு நன்கறியும். சைவ உலகம் சிரமேற்கொள்ளும். தமது எழுபத்தேழாம் ஆண்டில் இப்பெரியார் இந்நூலை வெளியிடவந்துள்ளது, நூற்றுக் கணக்கான சைவப் புலவர்கள் தங்கள் கடமைகளை நன்குணர்ந்து பணிபுரிதற்கு வழிகாட்டும். சிவஞானசித்தியாரை அருணந்தி சிவாசாரியர் எத்தனை முறை பாடஞ்சொல்லி யிருப்பாரோ, அத்தனை முறை இப்பெரியாரும் பாடஞ்சொல்லியிருப்பார் என்பதில் ஐய

மில்லை. இவர் சொல்லிய பாடங்களால் சிவஞானம் பெற்ற ஆடவரும் மகளிரும் நூற்றுக்கணக்கானவர்கள். இவருடைய வாழ்க்கை தூத்துக்குடி நகருக்கு என்றும் பெருமிதம் அளிப்பது.

சிவஞானசித்தியார் சுபக்கத்தைச் [1]சிவஞான சுவாமிகள் உரையோடு அல்லது அறுவர் உரையோடு படிக்கத் தொடங்குபவர்களுக்குப் பொருள் எளிதில் விளங்குவதில்லை. இச்சிறுநூலைப் பயின்ற பிறகு பொருளின் நுட்பம் விளங்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாசிரியர் அவ்வளவு தெளிவாக எல்லா நுட்பங்களையும் நன்றாக விளக்கியுள்ளார். சாதாரண அறிவுடைய மக்கள் மனத்தில் நிகழக்கூடிய ஐயங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவைகளை அகற்றுவதற்குரிய காரணங்களையெல்லாம் இவ்வாசிரியர் முறையாக விரித்துரைப்பது இந்நூலின் சிறப்புக்கள் பலவற்றுள் போற்றுதற்குரிய தொன்றாகும். பரிபாஷைத் துறையில் அமைந்துள்ள சொற்களைப் பெரிதும் குறைத்து, எல்லோருக்கும் நன்கு விளங்கும் முறையில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. யான் அறிந்தமட்டில் சிவஞானசித்தியாருக்கு இதுவரையில் இத்தகைய விளக்கம் எழுதப்படவில்லை. பன்னிரு திருமுறைகளிலுள்ள சாத்திரக் கருத்துக்கள் பல இந்நூலின்கண் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. வள்ளுவர் வாய்மொழி சைவசித்தாந்தத்திற் கரண் செய்வதும் இந்நூலின் கொள்கையாகும். இவ்விருபதாம் நூற்றாண்டில் செய்யப்பட்டுள்ள அறிவியலாராய்ச்சி எவ்வாறு நமது சைவக்கொள்கைகட்கு அரண்செய்கின்றது என்பதையும் இவ்வாசிரியர் நேர்ந்தவழி விளக்கியுள்ளார்.

இவ்வாராய்ச்சிநூல் சைவ இளைஞர்கட்கும் சைவசித்தாந்த நுட்பங்களை யறிய விரும்புவோர் அனைவர்க்கும் பெரும்பயனளிக்குமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் திருவடிகளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

ம. பாலசுப்பிரமணியன், பி.ஏ,. பி,எல்.,

தலைவர், சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை.

---

1. திருவாவடுதுறை ஆதீன முனிவரர்.

# முன்னுரை

இன்றைய தமிழகத்துத் தமிழர் சமுதாயத்தில் அரசியல், கல்வி, பொருள்நிலை, வாணிகம், கைத்தொழில், சமூகநிலை முதலிய துறைகளில் மக்கட்கு ஓரளவு விழிப்பு உண்டாகியிருக்கிறது. அவ்வத்துறையிலும் அறிஞர் பலர் தோன்றி மக்கட்கு வேண்டும் அறிவுரைகளை அவ்வப்போது வழங்கிவருகின்றனர். தினத்தாள்களும், திங்கள் வெளியீடுகளும் பிறவும் இந்நெறியில் நன்கு உழைக்கின்றன. இந்த அறிஞர்களுடைய நோக்கம்முழுதும் மக்களிடையே ஒருமையுணர்வும் ஒத்த வாழ்க்கை நிலையும் உண்டாதல் வேண்டும் என்பதில் ஒன்றியிருக்கிறது. ஆயினும், ஒருமையுணர்வு பெறுவித்தற்குரிய முயற்சி மட்டில் ஊக்கந் தருவதாகக் காணப்படவில்லை. இதற்குக் குறை சமயக் காழ்ப்பற்ற உயர்ந்த சமய உணர்வு மக்களிடையே, அவருள்ளும் கற்றோரிடையே குறைந்திருப்பதே என்பது உணரப்படவில்லை. இறைவனாகிய முதல்வன் ஒருவன் உண்டு; உயிர்களாகிய நாம் உண்டு; நாம் நல்வாழ்வு வாழ்தற்கென்றமைந்த உலகுண்டு என்பதைத் தெளியவுணர்த்தி, இவ்வாழ்வு நம்மை அனாதியே பற்றி நிற்கும் இருள் நீக்கத்துக்கென்றே அமைக்கப்பட்டுள்ள தெனத் தேர்ந்து, இதனைப் பேரருள் கூர்ந்து வழங்கியருளிய முதல்வனை நன்றியறிதலுடன் வழிபட்டொழுகுதல் வேண்டுமென வுணர்த்தும் சிறந்த சமய உணர்வு மிகமிகக் குறைந்திருப்பது கூடாது. இச் சமய உணர்வு ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வேரூன்றி அவருடைய நினைவிலும் சொல்லிலும் செயலிலும் இரண்டறக் கலந்தொளிர அமையும் வாழ்வு ஒருமையுணர்வும் ஒத்த வாழ்வும் நிலைபெற அமையும் வாயிலாகும். இதனைப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நம் முன்னோர் கண்டறிந்தே நம் சைவ சமயத்தைக் கொண்டனர். சைவம், முதல்வனைச் சிவமெனவும், உயிர்களைப் பசு வெனவும், அறியாமையைச் செய்யும் இருளைப் பாசமெனவும் அறுதியிட்டுக் கூறும். அறியாமையாற் கட்டுண்டிருப்பது பற்றி உயிர்களைப் பசு வென்றும், அறியாமை நீங்குதற்காக உருப்பட்டு வந்திருக்கும் உடல், உலகு, நுகர் பொருள் முதலியவற்றைப் படைத்து அவற்றோடு உயிர்களைத் தொடர்புறுத்தி உய்திபெறச்

செய்வது பற்றிச் சிவத்தைப் பதி யென்றும் சைவம் கூறும். இவ்வாறு பதி பசு பாச மென்ற மூன்றையும் முடிந்த முடிபாக அறுதியிட்டுக்கூறுதலின் சைவம், சித்தாந்தம் எனவும் வழங்கப்பெறும்.

என்று முதல்வன் உண்டோ, என்று உயிர்கள் உண்டோ, என்று உலகு உண்டோ அன்றுமுதலே இச் சமயம் நிலவிவருதலின், ஏனைச் சமயம்போல இஃது இன்னரால் இன்னகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறமுடியாமல் தென்தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவருகிறது. இது பெரும்பாலும் சைவ சமயம் எனவே வழங்கப்பெறும். இச்சமயத்துக்கு வேண்டும் நூல்கள் தென்மொழி வடமொழி யிரண்டிலும் உண்டு. வடமொழியில் காமிகம் முதல் வாதுளம் ஈருக இருபத்தெட்டு ஆகமங்களும், மிருகேந்திரம் முதல் விசுவான்மகம் ஈருக இருநூற்றேழ் உபாகமங்களும் நூல்களாகும். இவற்றைச் சித்தாந்தமென்றும் வழங்குவர். இவற்றை மேற்கொண் டொழுகுவதுபற்றிச் சைவம், சித்தாந்த சைவம் என்றும் கூறப்படுவதுண்டு. வடமொழியிற் போலவே தென்மொழியாகிய தமிழிலும் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமுதல் திருத்தொண்டர் புராணமீருகவுள்ள பன்னிரண்டு திருமுறைகளும், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் ஈருகவுள்ள பதினுன்கு மெய்கண்ட சாத்திரங்களும் உள்ளன.

இனி, வடமொழியில் தத்துவப்பிரகாசிகைமுதல் இரத்தினத்திரயம் ஈருக எட்டுச் சார்புநூல்களும், பௌட்கரவிருத்தி, மிருகேந்திரவிருத்தி சிவாக்கிரபாடியம் முதலிய உரைநூல்களும் உள்ளன. தமிழ் மொழியில் ஞானமிர்தம், பண்டார சாத்திரம் முதலிய சார்புநூல்களும், சிவஞானமாபாடிய முதலிய உரைநூல்களும் உள்ளன.

புது வெள்ளம் புகுந்து பழைய இனிய நீர்நிலையைத் தூர்த்துக் கெடுத்தாற்போலப் புதுப்புதுக் கொள்கைகளும் நடை முறைகளும் புகுந்து மேற்கூறிய நூலாசிரியர்களால் அமைக்கப்பெற்ற சமய வாழ்வைச் சீர்குலைத்துச் சமயவுணர்வையும் கெடுத்தன. சென்ற பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் யாழ்ப்பாணம் நல்லூரில் தோன்றிய சைவத்திரு ஆறுமுக நாவலரவர்களும், சென்னைச் சூளையில் தோன்றிய சைவசித்தாந்த சண்டமாருத மெனச் சிறப்புப்பெற்ற சைவத்திரு சோமசுந்தர நாயகரவர்களும் அரும்பணி புரிந்து சைவ நூல் வெளியீடுகளாலும், சைவசித்தாந்த நூலுரையாலும் சொற்

பொழிவாலும் சைவசித்தாந்தத்தைப் பிறங்கச் செய்தார்கள். இவர்களில் திரு. சோமசுந்தர நாயகரவர்கள், சைவமென்ற பொதுப் பெயராலன்றிச் சைவசித்தாந்த மென்னும் சிறப்புப் பெயராலேயே நமது சைவம் வழங்கப் பெறுதல்வேண்டு மென்பதை வற்புறுத்தி வழங்கச் செய்தார்கள். யான் பதினான்கு வயதுடைய சிறுவனாயிருந்தபோது (கி. பி. 1887) சைவத்திரு. சோமசுந்தர நாயகரவர்கள் தூத்துக்குடிக்கு எழுந்தருளி, "பாசம் பசுபதி யாகும் இவைமூன்றும், பேசில் அனாதியென் றுந்தீபற, பெரியோர் சொல்வார்களென் றுந்தீபற" என்ற தாம் இயற்றிய சித்தாந்த உந்தியார்ச் செய்யுளை முன்னுரையாகக்கொண்டு அரும்பெருஞ் சொற்பொழி வொன்று ஆற்றினார்கள். சிவபிரான் திருவடிக்கண் சிறந்தொழுகும் பேரன்பர், தவம் பெருக்கும் திருநீறும் தாழ்வடமும் பொலிவுடையார், அவம் பெருக்கும் பரசமய மானவற்றின் அரந்தைகெடச், சிவம்நிறைக்கும் சித்தாந்தச் செந்நெறியோம்பும் பெரியார் ஆகிய அவர்கள் திருவுருவம் அடியேனது உள்ளக் கிழியின்கண் உருவுபெறவமைந்த உயிரோவியமாயிற்று. அவர்கள் திருவாக்கில் எழுந்த அமுதவொலி அடியேனது உயிரிற் கலந்தது.

அப்போது அடியேனது உள்ளத்திற் பதிந்த சைவவித்து, திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் பரசமயகோளரி சபாபதி நாவலரவர்கள், சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பி. ஏ. பி. எல். முதலியோருடைய சொற்பொழிவு கேட்கும் பேற்றாலும் என்னோடு உடனிருந்து சைவம் பயின்ற திரு: தெ.ச. சு. சுப்பிரமணியபிள்ளை, தே. பொ. அறம்வளர்த்தநாதபிள்ளை முதலிய பேறிஞர்களின் தோழமையாலும் துணைமையாலும் முளைத்து வளர்ந்து என்னையும் சைவ சித்தாந்தப் பணிபுரியும் திருவுடைய ஒருவனாக்கிற்று. இதன் பயனாகச், சென்ற நாற்பது ஆண்டுகளாகச் சைவசித்தாந்த நூல்களை அறிந்த அளவில் மாணவர்களுக்குக் கற்பித்து வருவேனாயினேன்.

இவ்வாறு கற்பித்து வருகையில், பயில்வோர்க்கு எய்தும் ஐய வகைகளும், அவற்றை அகற்றற்குரிய நெறிமுறைகளும், அவர்கட்கு முன் பின்னாக உரைக்கத் தகுவனவும் என் சிந்தனைக்குரிய பொருள்களாயின. இந்நிலையில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அற நிலையங்களுள் ஒன்றான தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் 1941-ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்த மெய்கண்ட சாத்திர மாநாட்டில், அப்போது கழக அமைச்சரா

யிருந்தவரும், எனது அருமை உடன்பிறந்தோருமான காலஞ்சென்ற சைவத்திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் விருப்பத்தின்படி அடியேன் சிவஞான சித்தியார் ஆராய்ச்சி யென்னும் இதனை எழுதிப் படித்தேன். அப்போது இருந்து கேட்ட அவையினர் பலர் இதனை ஒரு நூல் வடிவில் எழுதி வெளியிட்டு யாவரும் பயனடையச் செய்ய வேண்டுமென விரும்பினர். முதுமை மிகுதியால் உடலும் அறிவும் தளர்வுற்றிருப்பதால், நூல்வடிவில் செப்பம் செய்ய இயலவில்லை. இந்நிலையில், செந்தமிழ்ச் செல்வரும், சித்தாந்த கலாநிதியுமாகிய எனது ஆன்மார்த்த நண்பர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறை விரிவுரையாளர், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் என் வேண்டுகோட் கிணங்கி இதனை இவ்வடிவில் செப்பம் செய்து உதவியதுடன், அச்சுப் படிகளை ஒப்பு நோக்குதல், பிழை திருத்துதல் முதலிய எல்லாப் பொறுப்புக்களையும் தாமே ஏற்றுக்கொண்டதை யான் எடுத்தோதாமல் இருக்க முடியாது. அவர்கட்கு எல்லாநலன்களும் மல்க அருளுமாறு எந்தை திருஞான சம்பந்த சுவாமிகளின் திருவடிகளைப் பரவுகின்றேன்.

தாம் உடல்நலம் மிகக் குறைந்திருந்தும் எனது வேண்டுகோட் கிணங்கி, இவ் "ஆராய்ச்சி" நூலைப் பார்வையிட்டு அன்போடு அழகிய அணிந்துரை எழுதியுதவிய சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசத் தலைவர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L. அவர்கட்கும், என் மனக்கண்ணில் தோன்றிய ஸ்ரீ அருணந்திசிவாச் சாரியாரின் திருவுருவத்தைப் புறக்கண்ணிலும் தோன்றுமாறு வரைந்துதவிய தில்லை ஓவிய வல்லுநர் கோவிந்தராசன் அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இனி, இந்நூலை மிக விரைவாகவும் அழகாகவும் கழகத்துக்குரிய 'அப்பர் அச்சக'த்தில் அச்சிட்டுதவிய எனது அருமை யுடன்பிறந் தோரும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மேற்பார்வை நெறியாளருமாகிய திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கட்கும், திருவுருவப் படங்கள் எடுத்துதவிய திருத்துறையூர், திரு. கு. ஆறுமுகநயினர் அவர்கள் சிதம்பரம் திரு. ஆடூர். சு. கணபதி பிள்ளையவர்கள் முதலிய அன்பர் கட்கும் என் நன்றி யுரியதாகும்.

இந்நூலை ஆதீன வெளியீடாக வெளியிடத் திருவாணை பிறப் பித்துப் பொருளுதவி புரிந்தவர்களும் அடியேன்பால் மாறாக் கருணை

யுடையவர்களுமாகிய திருவாவடுதுறை ஆதீனத்து இருபதாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் அவர்களுடைய திருவடித் தாமரைகட்கு அடியேனுடைய தாழ்மையான வணக்கத்தைச் செலுத்தி நன்றியறிதலைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன்.

திருவாவடுதுறையாதீனத்து இருபதாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் "இன்றைய சைவவுலகு சிவஞானமும் சைவவொழுக்கமும் பெருகப் பெற்றுச் சைவப் பேரின்ப வாழ்வில் திளைத்து இன்புறவேண்டும்" என்ற அருள் நோக்கம் கொண்டு இதுபோலும் சைவநூல் வெளியீடுகளைச் செய்தருளுவதுபற்றி அவர்கட்குச் சைவ வுலகு பெரு நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. அன்றியும்,

கூடியவிரைவில் திருவாவடுதுறை ஆதீனத்து ஞானச் செல்வங்களாகிய சிவஞான மாபாடியம், சிவஞான சித்தியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களை அழகிய முறையில் வெளியிடற்குரிய ஏற்பாடுகளை நமது மகா சந்நிதான மவர்கள் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள் என்பதைச் சைவ வுலகிற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுமார் முந்நூறு பொருள்களைத் தன்னகத்துட் கொண்டதும், தருக்கம் இலக்கணம் என்னும் கண்ணிரண்டும் கொண்டு ஆராய்ந்து முடிபு காணப்பட்டதுமான ஒப்பற்ற ஆராய்ச்சி நூல் சிவஞான சித்தியாராகலின், அதன் பொருள்வளமுற்றும் இச்சிறுநூலில் அடங்குவது அன்று. ஆயினும், அந்த ஞானநூலாகிய சிவஞான சித்தியாரைப் பயிலவேண்டும் என்னும் மனவெழுச்சி இச்சிறு நூலைப் படிப்போர்க்குத் தோன்றுமெனின், சைவவுலகம் சிவஞானமும் சிவநெறி யொழுக்கமும் நிரம்பிச் சிவானந்தப் பெருவாழ்வில் திளைத்தல்வேண்டுமென்ற பேரருள் நிறைவால் இதனை வெளியிடத் திருவாணை பிறப்பித்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுள்ளம் களிகூரும். அடியேனுடைய நோக்கமும் பெறும் பயனும் அதுவேயாம் என்பதைச் சான்றோர்முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தூத்துக்குடி }
9-12-1949 }

ந. சிவகுருநாதன்.



சித்தாந்தப் பேராசிரியர்

ந. சிவகுருநாத பிள்ளை.

# ஆசிரியர் வரலாறு

[சித்தாந்த கலாநிதி, ஔவை. சு. துரைசாமி பிள்ளை, அண்ணாமலைநகர்.]

சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளையவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் பல விடங்களில் சித்தாந்த சைவச் சொற்பொழிவாற்றியும், தூத்துக் குடியிலும் பிறவிடங்களிலும் சித்தாந்த நூல்களைப் பாடஞ் சொல்லியும் சிவநெறியாகிய சைவசித்தாந்தத்துக்கு அரும்பணி புரிந்த திரு. பேராசிரியரவர்களின் சித்தாந்த சைவவாழ்வின் பயனாக இந்நூல் வெளிவருகின்றமையின், இதனைப் படித்துப் பயனுறும் நன்மக்கள், இதனை நல்கும் ஆசிரியருடைய வரலாற்றுக் குறிப்புக்களையறிய ஆர்வமுறுவர் என்பதுபற்றி அவரது வரலாறு ஈண்டுச் சுருக்கமாகத் தரப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் என்பது இன்றைய தமிழர்களுக்கு மிகப் பெரிதும் தெரிந்த நகரமாகும். தேசியகவி திரு. சுப்பிரமணிய பாரதியாரைத் தந்த சிறப்பு இந்நகருக்கு உண்டு. இந்நூலாசிரியர், 1873-ம் ஆண்டில் எட்டயபுரத்தில் அரண்மனைச் சித்த வைத்தியர் நமசிவாயம் பிள்ளையின் அருமை மகனாராவர். ஆசிரியருடைய தாயார் மகாலட்சுமியம்மை. பிறந்து எட்டு வயது நிரம்புமளவும் எட்டயபுரத்தில் இருந்தே நம் பேராசிரியர் தமிழ்க் கல்வியறிவு பெற்றார். பெற்றோர் சிவ பரம்பொருள்பால் பேரன்பும், சமயம் விசேடம் நிருவாணம் என்ற மூவகைத் தீக்கைப் பேறும், "உடையவர் பூசை" செய்யும் ஒழுகலாறும் உடையராதலின், சிவமணம் கமழும் அவர்தம் அன்பு வெள்ளத்தில் திளைத்தாடிய சிவகுருநாதருக்குச் சிவநெறியில் இயற்கையில் பேரன்பு தோன்றியிருந்தது.

பின்பு நம் பேராசிரியர், ஒட்டப்பிடாரம் என்னுமிடத்தில் அவரது அத்தான் திரு. அறம்வளர்த்தநாத பிள்ளை நடத்திவந்த ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி பயின்றார். அவரோடு உடனிருந்து உடன்பயின்றவர் "கப்பலோட்டிய தமிழ் வீரர்" எனப்படும் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களாவர். இவர்கள் இருவரும் பிரியா நண்பர்களென்பது நன்கறிந்த தொன்று.

1889 முதல் 1891 வரை, நம் பேராசிரியர், தூத்துக்குடியில் எஸ். ஏ. வி. பாடசாலையில் ஆசிரியராக இருந்து இளஞ்சிறார்க்குக்

கல்வி கற்பித்தும். திரு தெ. ச. சு. பிள்ளை முதலியோருடன் கூடிச் சிவப்பிரகாசம் முதலிய சைவசித்தாந்த நூல்களைத் தக்கோர் பலரிடத்திற் பாடம் கேட்டும் மேம்பட்டனர். 1892-ல் தூத்துக்குடியில் "சைவப்பிரகாசம் பிரஸ்" எனப்படும் அச்சகத்தை நிறுவி 1944 வரையில் அதன் மானேசராக இருந்து பின் ஓய்வுபெற்றுத் தூத்துக்குடியிலே இருந்து வருகிறார்கள். நம் பேராசிரியர் எஸ். ஏ. வி. பள்ளியில் ஆசிரியரானது முதலே தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் உறுப்பினராக இருந்து இயலும் பணிபுரிந்து வந்தார்கள். சென்னை இந்து லகுலேக சங்கத்தின் உறுப்பினராக இருந்தும் இயலும் பணி புரிந்து வந்தார்கள். சூளை, சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகரவர்களை ஆசிரியராகக்கொண்டு, பேராசிரியராய் விளங்கும் நம் சிவகுருநாதர், இடைக்காலத்தே 1907-ல் திரு வ. உ. சி. அவர்கட்குத் துணையாய்த் தேசியப் பணியும் புரிந்தவர்கள். அதன் பயனாக "ஓராண்டு நன்னடக்கை ஜாமீன்" வழங்கும் பேறுபெற்றார்கள்; திரு. வ. உ. சி. பேரில் நடந்த வழக்கை எதிர்த்து முன்னின்று சென்னை உயர்நீதி மன்றம் வரையில் நடத்திய தேசியவீரர் நம் பேராசிரியர் சிவகுருநாதர் என்பது நினைவுகூரத் தகுவதொன்று.

பின்பு, நம் பேராசிரியர், சைவசித்தாந்தச் செந்நெறியில் தம் கருத்தைச் செலுத்தி, அதனை மக்களிடையே பரப்புவது மக்கட்குத் தாம் செய்யக்கூடிய தேசியப் பணியாம் எனத் தேர்ந்து சைவசித்தாந்த நூல்களுள் சிவஞான போதம், சிவஞான பாடியம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலியவற்றைப் பலர்க்குப் பன்முறையும் பாடஞ்சொல்லி வந்தார்கள். சித்தாந்த நூல்களுள் சிறப்பாகக்கொண்டு பயிலப்படும் திருக்குறள் உரையுடன் முழுதும் பன்முறை பாடஞ் சொல்லப்பட்டது; "சிவஞான சித்தியார் உரைக்குச் சிவகுருநாதர் சிறந்த ஆசிரியர்" எனப்படுபவர்.

1936-ல் காஞ்சிபுரத்தில் நடந்த சைவசித்தாந்த மகா சமாச 31-ஆம் ஆண்டு விழாவிலும், பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்கத்து 27-ஆம் ஆண்டு விழாவிலும், 1938-ல் கொழும்புமாநகர் விவேகாநந்த சபையின் 25, 26-ஆம் ஆண்டு விழாக்களிலும், 1939-ல் காரைக்கால் சைவசித்தாந்த ஆசிரமத்து 5-ஆம் ஆண்டு விழாவிலும் தலைமை தாங்கிச் சைவசித்தாந்தப் பேருரை நிகழ்த்தினார்கள். தூத்துக்குடி சைவசித்தாந்த சபையில் சென்ற ஐம்பது ஆண்டுகளாக உறுப்பினராக இருந்துவரும் நம் பேராசிரியர், திருநெல்வேலி சைவசித்தாந்த

நூற்பதிப்புக் கழகத்தின் நிறைவேற்றுக் கழக உறுப்பினராகப் பத்தாண்டுகள் இருந்து பணிபுரிந்தவர்கள்.

சைவசித்தாந்தப் பொருளாக நம் பேராசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவுகளும், நிகழ்ந்த இடங்களும் தமிழகத்தில் மிகப்பலவாகும். திருநெல்வேலி காலஞ்சென்ற தாகில் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் பி. ஏ. தலைமையில் தூத்துக்குடியில் நிகழ்ந்த பேரவையினரால் 'சித்தாந்த ஆசிரியர்' என்ற பட்டமும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் "சித்தாந்தப் பேராசிரியர்" என்ற பட்டமும் ஆசிரியருக்கு வழங்கப்பெற்றுள்ளன.

இவ்வண்ணம் எட்டயபுரத்தில் தோன்றி, ஒட்டப்பிடாரத்தில் உயர்ந்து, தூத்துக்குடியில் மேன்மையுற்றுத் தமிழ் கூறும் நல்லுலகத்துச் சைவசித்தாந்தப் பேராசிரியராய்த் திகழும் நம் சிவகுருநாதர் தம் எண்பதாம் ஆண்டை எட்டி நிற்கும் இம் முதுமை நிலையில் சைவசித்தாந்தத் தனிவாழ்வின் பயனாகத் தாம் கண்டவற்றை வடித்து "சிவஞான சித்தியார் ஆராய்ச்சி" யென இச் சிறு நூல்வடிவில் தரும் பெருநன்றிக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடு உடையதாகின்றது.

நம் பேராசிரியர், தமது முகவுரையில் கூறுவது போலச் சிவஞான சித்தியாரில் உள்ள பொருள்களுட் பல இன்னும் விரித்துக் கூறவேண்டிய நிலையில் உள்ளன. அவற்றை இரண்டாம் பகுதியாக வரச் செய்வது சைவசித்தாந்தச் செந்நெறி வளர்க்கும் நிலையங்களின் கடமையாகும். மக்களுடைய வாழ்க்கை நோக்கமும் வாழ்க்கைத் திறமும் உயர்ந்தோங்கித் "திருநின்ற செம்மை" யுடையதாம் என்பது ஒருதலை.

இத் திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட பேராசிரியர் சிவகுருநாதனுர், சிவஞானசித்தி நெறிமுழுதும் விளக்கும் சிவகுருநாதனைப் பல்லாண்டு வாழ்கவெனத்

"தொல்லெயி லுடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலொ விலமே."

———



திருத்துறையூர் தவநெறியுடைய நாயனர்
ஆளுடைய நம்பிக்கு அருளிய திருக்காட்சி.



ஸ்ரீ. அருணந்திசிவாச்சாரிய சுவாமிகள் திருக்கோவில்

*திருத்துறையூர்.*




சிவஞானசித்தி ஆசிரியர் :

சந்தானகுரவர் ; சகலாகம பண்டிதர்

**ஸ்ரீ. அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள்**



சிவஞான மாபாடிய கர்த்தர்:

ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவரர்

திருவாவடுதுறை ஆதீனம்.

உ

திருச்சிற்றம்பலம்

# சிவஞானசித்தியார் ஆராய்ச்சி

## காப்பு

### திருஞானசம்பந்தர் துதி

உமைமுலைப்பால் அமுதுண்டு உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தமையணுகப் பெற்றருளும் தாவில்புகழ்ச் சம்பந்தர்
எமையுடையா ராதலினால் இணையடிகள் தலைக்கொண்டு
அமைவுடைய ஆராய்ச்சி அளிக்கின்றேன் அருள்நூற்கே.

### அருணந்தியடிகள் துதி

வெண்ணெய்நலூர் மெய்கண்டான் விளம்பியருள் போதத்தின்
உண்மையெலாம் விரித்துரைக்கும் சிவஞான சித்திக்கோர்
எண்மையுறு மாராய்ச்சி செய்துள்ளேன் எழிற்றுறையூர்
அண்ணலார் அருணந்தி அடிமலர்கள் தலைக்கொண்டே.

### சிவஞான முனிவர் துதி

அருந்தமிழும் ஆகமு மறியாத அடியேனும்
திருந்துமுய ராகமத்தின் முடிவாய சித்தாந்தம்
பொருந்துமுரை யாலுணரப் புரிந்தளும் துறைசைவளர்
பெருந்தவத்துச் சிவஞான முனிவரனும் பிரான்போற்றி.

## சித்தாந்தச் சிறப்பு

புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளைவதா யுடலுயிர்கண் ணருக்கன்
அறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்.

—சிவப்பிரகாசம், பாயிரம் எ.

# தோற்றுவாய்

*உந்தி களிறு உயர்போதம் சித்தியார்*
*பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தஅருட்*
*பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு*
*உண்மைநெறி சங்கற்ப முற்று.*

என்பது ஒரு பழைமையான வெண்பா. இதன்கண் பதினன்குநூல்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவற்றை மெய்கண்டசாத்திரங்கள் எனவும் சித்தாந்த சாத்திரங்கள் எனவும் சான்றோர் கூறுவர். இப்பதினன்க னுள் சிவஞான சித்தியாரும் ஒன்று. இதனைச் செய்த ஆசிரியர் அருணந்தி சிவாசாரியர் எனப்படுவர். சித்தாந்த சைவர்கள் அவரைச் சந்தான குரவருள் இரண்டாமவராகப் போற்றுவர். இவர் வடமொழியிலும், தென்மொழியிலும் துறைபோகக் கற்ற பெரியார்; சிவாகமங்களை அவற்றின் உபாகமங்களுடன் நன்கு கற்றுச் சிறந்து விளங்கினது கொண்டு, அந்நாளில் இவரைச் சான்றோர், **சகலாகம பண்டிதர்** என்ற சிறப்புப் பெயர் தந்து பாராட்டினர். சந்தான குரவருள் முதல்வரும் சிவஞானபோதம் அருளிச்செய்த சிவஞானச் செம்மலுமான **மெய்கண்டதேவர்**பால் இவர் திருவருள் உபதேசம் பெற்று அவர் மாணவருள் முதல்வராய் விளங்கினர்.

மெய்கண்டதேவர் இற்றைக்கு எழுநூறியாண்டுகட்கு முன்பு இருந்தவரென்பது யாவரும் தெளிய அறிந்த செய்தி.

அருணந்திசிவனர் அவர் காலத்து அவருடைய மாணவராதலால், இவர் காலமும் அதுவேயாகும். இவருடைய வூர் **திருத்துறையூர்** என்பது. இது, திருவதிகைக்கு வடக்கில் தென்பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதியில் உளது. விழுப்புரத்திலிருந்து திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம் வழியாக மாயூரம் செல்லும் இருப்புப்பாதையில் விழுப்புரத்தை யடுத்துள்ள புகைவண்டி நிலையமுமாகும்.

நம்பியாரூரர் தமக்குத் தவநெறி யருளுமாறு இறைவனை வேண்டிக் கொண்டது இத் துறையூரிலேதான். இது கொண்டே இவ்வூர் இறைவனை, "திருத்துறையூர்த் தவ நெறியாளுடையார்," என்று கல்வெட்டுக்[1] கூறுகிறது. இவ்வூரில் அருணந்திசிவனாரது இடமொன்று ஊரவரால் குறிக்கப்படுகிறது. அது தென்னாட்டுச் சைவ மடங்களுள் தலைசிறந்து விளங்கும் திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துக்கு உரியது. அங்குள்ள குருமூர்த்தத்திற்கு நாள் வழிபாடும், குருபூசை விழாவும் அவ்வாதீனத்தாரால் சிறப்புற நடந்து வருகின்றன.

சமய குரவருள் ஒருவராகிய மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையார் போல, அருணந்திசிவனார் அருளிய இச் சிவஞானசித்தியும் சிவஞானசித்தியார் என வழங்கிவருகிறது. மெய்கண்டதேவர் அருளிய சிவ ஞானபோதத்துக்கு உரைகூறு முகத்தால், இந்நூல், தீவிய தமிழ்நலங் கனிந்த விருத்தப் பாக்களால் இயன்றுள்ளது. சிவபோகசாரம் என்னும் நூலுடையார், "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதி போதும்"[2] எனவும், சிவானுபூதிச் செல்வரான தாயுமானார் "பாதி விருத்தத்தான் இப் பார்விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைத்தான் பணிவ தெந்நாளோ"[3] எனவும் பாராட்டி யிருப்பதுகொண்டே, இந்நூல் சித்தாந்த சைவர்களால் எத்துணை உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டுளது என்பது தெளிவாம். சிவஞானப் பேராகரமாக விளங்கிய சிவஞான யோகிகள், இதனை, "சிவாகமார்த்தங்களுக் கெல்லாம் உரையாணி"[4] எனப் போற்றியுரைத்திருப்பது நன் மக்கள் பலரும் இனிதறிந்த தொன்று.

சிவஞானசித்தியார் என்னும் இத் தமிழாகமம் பரபக்கம், சுபக்கம் என இருபகுதி கொண்டுளது. பரபக்

1. M. Ep. A. R. No. 421 of 1925.
2. சிவபோகசாரம். உரு. 3. தாயுமானவர் எந்நாள். குருமரபு. ரு.
4. சிவசமவாத வுரைமறுப்பு.

கத்துள் உலகாயதமும், பௌத்தப் பகுதிகளான சௌத்தி ராந்திகன் மதம், யோகாசாரன் மதம், மாத்தியமிகன் மதம், வைபாடிகன் மதங்களும், சமணரில், நிகண்டவாதி, ஆசீவகன் மதங்களும், பட்டாச்சாரியன், மாயாவாதம், சத்தப் பிரமவாதம், பாற்கரிய வாதம், நிரீச்சுர சாங்கியம், பாஞ்சராத்திரங்களும் எனப் பதின்மூன்று பரசமய வுண்மைகளும், சித்தாந்த நெறி நின்று அவற்றை மறுத் துரைக்கும் மறுதலைகளும் அடங்கியுள்ளன.

சித்தாந்த சைவமாகிய சுபக்கத்தைக் கூறலுற்ற ஆசிரியர், மிருகேந்திர முதலிய உபாகமங்களிற் போலத் தம் நூலுள், பரபக்கமாகப் பர சமயங்களையும் சுபக்கத் தோடு ஒப்பநோக்கி யுரைத்திருப்பது தென்னாட்டுச் சமய ஞானிகளின் நன்மனப் பண்புக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். இங்ஙனம் பரசமயங்களையும் ஒப்பு நோக்கி யாராயும் முறை முதற்கண் தென்னாட்டிற்குள் தோன் றியது என வடமொழிச் சர்வதரிசன சங்கிரகத்தை ஆங்கி லத்தில் மொழிபெயர்த்த கோவல் (Cowell) என்னும் மேனாட்டறிஞர் கூறுகின்றார். இல்வாற்றால் ஆதியில் சிவாக மங்கள் தென்னாடுடைய சிவபெருமானால் தென்னாட்டில் அருளப்பெற்றுப் பின், அவர் அருள்பெற்ற சிவமுனிவரர் களால் தோற்றுவிக்கப்பெற்றன எனச் சில ஆராய்ச்சி யாளர் கூறுவதும் வலியுறுகிறது.

இனி, இப் பரபக்கத்துட் கண்ட சமயங்களின் பொருள்கள் பல திருத்தம் பெறவேண்டியுள்ளன எனவும் இவற்றை ஆராய அருணந்திசிவனார் துணையாகக் கொண்ட முதனூல் இன்னது எனத் தெரிந்திலதெனவும்[1] ஆராய்ச்சி யாளர் ஆராய்ந்து கூறுகின்றனர். அதனால், பரபக்கப் பகுதி ஈண்டு ஆராயப்படவில்லை.

1. ஈண்டுக் கூறப்படும் "பரபக்கமானது சங்கராசாரியார் செய்த சருவதரிசன சங்கிரகத்தும், சருவமதோபந்நியாசத்தும், இராமநாதா சாரியர் பண்ணின பரமதநிராகரணத்தும், சருவான்மசம்பு சிவாசாரியார் பண்ணின சித்தாந்த தீபிகையினும், அகோர சிவாசாரி யர் பண்ணின சித்தாந்தார்த்த சமுசயத்தும் பார்த்து அவைகளின் கருத்தைப்பற்றிச் செய்ததென அறிக" என்று மறைஞானதேசிகர் கூறுவர்.

இனி, சுபக்கத்துள், சைவசித்தாந்த உண்மைகளுள் பரபக்கத்தாரால் தொடுக்கப்படும் தடைகள் எல்லாவற் றிற்கும் விடையும் தெளிவும் தந்து நிறுவப்படுகின்றன. சுபக்கம் பற்றிய ஆராய்ச்சியே ஈண்டு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

சிவஞானசித்தியார் என்ற இந்நூல் முற்றுமே ஓர் ஆராய்ச்சி நூலாகும். இதனை ஒருவாறு விளக்கிக் காட்டு வதே இவ் வாராய்ச்சி நூலின் நோக்கம்.

சிவஞானசித்தியாரின் சுபக்கப் பகுதி முந்நூற்று இருபத்தெட்டுத் திருவிருத்தங்களையுடையது. இதன் முதனூலான சிவஞானபோதம் போலவே, இதுவும் பன்னிரண்டு கூறுகள் கொண்டுளது. பொது, உண்மை யென அதிகாரம் இரண்டும், பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என இயல் நான்கும் இதன்கண் உள்ளன. ஒவ்வோர் இயலும் மும்மூன்று பாதங்களாக வகுக்கப் பெற்றிருக்கிறது. சூத்திரம் ஒவ்வொன்றும் பல கூறுக ளாக (அதிகரணங்களாக) வகுக்கப்பெற்று, அதன்கண் கூறப்படும் உண்மைகள் பலவும் தடைவிடைகளால் தூய்மை செய்து நிறுவப்பெற்றும் விளங்குகிறது.

இந்நூலுக்கு உரையெழுதினோர் பலராவர். அவருள் மறைஞானதேசிகர், சிவாக்கிரயோகியர், ஞானப்பிரகா சர், நிரம்பவழகியார், திருவாவடுதுறை ஆதினத்து மாதவச் சிவஞானயோகிகள், திருவாவடுதுறை ஆதீனம் 16-வது பட்டத்திலெழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் என்னும் அறுவர் இயற்றிய உரைகள் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சென்னைச் சிந்தாத்திரிப்பேட்டையிலிருந்த கொன்றைமாநகரம் சண்முகசுந்தர முதலியாரால் அச்சிடப்பெற்றன. அவை இப்போது கிடைப்பது அரிது. அவற்றைக் கிடைக்கு மாறு செய்வோரும் அரியராய்விட்டனர். இவ்வுரைகளை ஒரு சேரத்தொகுத்து அச்சிடுவது சமயவுலகிற்கும் சமய வரலாற்றாராய்ச்சி யுலகிற்கும் பெருந்துணையாகும்.

மேற்கூறிய அறுவர் உரைகளுள், திருவாவடுதுறை யாதீனத்து, ஆசிரியர் திராவிடமாபாடியகர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் அருளிய உரைமட்டும் யாழ்ப்பாணத்துப் புலவர் ஸ்ரீ த. கைலாசப்பிள்ளை அவர்களாலும் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசத்தாராலும் அச்சிடப் பெற்றுளது. யாழ்ப்பாணம் ஸ்ரீ திருவிளங்கம் அவர்கள் பெயராலும் ஓர் உரை வெளிவந்துள்ளது. ஸ்ரீ ஞானப்பிரகாசர் உரைக்குத் தமிழ்மொழிபெயர்ப்பும் அச்சேற்றப்பெற்றது.

திருவாவடுதுறை யாதீனத்து, 16-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அருளிய பதவுரையை மேற்படி ஆதீனத்து 17-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் திருவாணை பிறப்பித்தருளியபடி காஞ்சி, ஸ்ரீ நாகலிங்க முதலியார் அவர்கள் இரு பெரு நூல்களாக வெளியிட்டார்கள். அவற்றுள், ஒன்று மெய்கண்ட சாத்திரம் முழுவதும் உடையது. மற்றொன்று இப்பதவுரை மட்டும் உள்ளது. இவை கி. பி. 1897-ல் ஏவிளம்பி மேடரவி, துலாரவிகளில் வெளிவந்தவை. யாழ்ப்பாணம் வித்வான், திரு. சி. தாமோதரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் 16-வது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் அருளிய பதவுரையை வெளியிட்டார்கள். திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய பொழிப்புரைக்கு விளக்கம் திருவாவடுதுறை யாதீனத்துச் சைவப் பிரசாரகர், தூத்துக்குடி, ஸ்ரீ பொ. முத்தைய பிள்ளை அவர்கள் எழுதிய உரை 1914, 1926-ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டது. இவ்வைந்து பதிப்புக்களும் திருவாவடுதுறை யாதீனத்தின் பெரும் பொருளுதவியாலேயே வெளியிடப்பெற்றன.

---

திருவாவடுதுறை யாதீனத்திற்கே உரிய சித்தியார் பொழிப்புரையும் பதவுரையும் அடங்கிய அழகியதொரு

பதிப்பு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது.

மறைஞானதேசிகர் உரையில், அளவையியலிற் கண்ட கருத்துக்களை வற்புறுத்தும் பழைய மேற்கோட் செய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றால் பண்டை நாளில், தமிழில் அளவை நூல்கள் பல நிலவியிருந்தன வென்பது விளங்குகிறது. சிவாக்கிரயோகியர் உரை, வட சொற்கள் செறிந்து வடநூன் மேற்கோள்கள் மலிந்து மணிப்பிரவாளமாக இருக்கின்றது. ஆயினும், இவ்வுரை யின்கண் சிறந்த கருத்துக்களையும் சிவாகம மேற்கோள் களையும் இனிது காணலாம். நிரம்பவழகியார் உரை, தனித்த சிறப்பொன்றும் உடையதாகத் தெரிந்திலது; எனினும், முதனூற்கருத்துக்கள்பல தெளிய விளக்கி நிற்கிறதென்பது கருதத்தக்கது. திருவாவடுதுறை யாதீ னத்து ஆசிரியர் ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் அருளிய பொழிப்புரையே வடமொழி தென்மொழிகளிற் சிறந்து விளங்கும் பிரமாண நூன்மேற்கோள்களால் திகழ்ந்து, சிவஞானசித்தியார்க்குள்ள எல்லா வுரைகளிலும் மேம் பட்டுச் சொற்சுருக்கமும் பொருள் விளக்கமும் கொண்டு மிளிர்கின்றது. சீவகசிந்தாமணிக்கு நச்சினார்கினியார் கண் டிருக்கும் உரைபோலப் பொழிப்பும் விளக்கமும் கொண்டு கற்பார்க்குக் கற்குந்தோறும் கழிபேரின்பம் நல்கிச் சிறந்து நிற்கிறது. இவ்வுரையின்றேல், சிவஞான சித்தியா ரின் சீரிய கூரிய கருத்துக்கள் பல விளக்கம் பெறா. சுப்பிரமணிய தேசிகர் உரை, ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் எழுதிய பொழிப்புரையைப் பதவுரையாக்கி விளக்கிநிற்பதொன்று. ஞானப்பிரகாசர் உரை நுண்ணிய கருத்துக்கள் பல தன்கண் கொண்டு திகழ்வது; எனினும், இது சிவசமவாதத்தைத் தழுவியதென்பர்.

---

உ

## பாயிரம்

இந்நூலின் பாயிரம் ஐந்து செய்யுட்களையுடையது. மங்கல வாழ்த்தாகிய சிவபெருமான் துதி "அறு வகைச் சமயத்து ஓர்க்கும் அவ்வவர் பொருளாய்" எனத் தொடங்கும் திருவிருத்தமாகும். இதன்கண் மங்கல வாழ்த்துக்குரிய இலக்கணப்படி நூலின்கண் நுதலப்படும் பன்னிரு சூத்திரப்பொருள்களும் குறிப்பாய் அறியப் படுமாறு அமைந்திருக்கிறது. மெய்கண்டதேவர், அரு ணந்தி சிவனுரைத் தமக்கு மாணவராக ஆட்கொண்டருளிய போது, மாணவர் முடிமேல் தமது திருவடிவைத்துத் தீக்கை செய்தருளினர். அவ்வருட்செய்தி இனிது விளங்க, முன்னூற் சிறப்புரைக்கு மிடத்தே ஆசிரியர் திருவடி தீக்கை செய்தருளிய நலத்தை மிகவும் பாராட்டு கின்றார்.

"மறையினன் அயனன் மாலான் மனத்தினன் வாக்கான் மற்றும்
குறைவிலா அளவி னனுங் கூறொணா தாகி நின்ற
இறைவனார் கமல பாதம் இன்றியான் இயம்பும் ஆசை
நிறையினர் குணத்தோர்க் கெல்லாம் நகையினை நிறுத்து மன்றே."

என்னும் செய்யுள் சிவபரம்பொருளின் அறிவருந்திறத்தை எடுத்தோதி, அன்னதாயினும், அப்பரம்பொருள் உபா யத்தால் பெறற்குரியது என்பதை வற்புறுத்துகிறது. மறையினாலும் அயன் முதலியோராலும் அறிதற்கரிய தாயினும்,

"அருளினா லாக மத்தே யறியலாம் அளவி னாலும்
தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே

மருளெலா நீக்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியரோ டிருக்க லாமே."

என்னும் செய்யுள், சிவாகமங்களைக் கேட்டல், அளவைக ளால் கேட்டவற்றைச் சிந்தித்தல், சிந்தைக்கண் நாடத் தோன்றும் சிவஞானத்தால் மாசறத் தெளிதல் என்ற மூவகை யுபாயத்தால் சிவபரம்பொருள் அறியப்படு மென்று அறிவுறுத்துகிறது.

---

## அளவையியல்

இனி, ஆசிரியர் பரபக்கப் பகுதியில் முதற்கண் ஓதிய பாயிரத்துள், "இறைவனையும் இறைவனால் இயம்பும் நூலும் ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டும் செய்தி முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம்," என வரையறை செய்துகொண்டபடியே ஈண்டு அளவையின் இயல்பைப் பதினான்கு செய்யுளால் உரைக்கின்றார். ஈண்டுக் கூறும் அளவையாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும் உயிரின் அறியும்ஆற்றல் (ஆன்ம சிற்சத்தி) கொண்டு, காண்டல், கருதல், உரை என்னும் அளவைகளால் அறிவது. அளவை நூல்கள் வடமொழி தமிழ்மொழி என்ற இருமொழியினும் பலவுள வெனினும், வடமொழியில் மிக விரிவாகவுள்ளன. ஈண்டு முப் பொருளுண்மைகளை அளந்தறிதற்கு வேண்டும் அளவை களின் இயல்பை ஈரேழு செய்யுட்களால் இனிது விளங்கக் கூறியிருக்கின்றார்.

அவைகளின் வகைகளைக் கூறப் புகுந்த பிற ஆசிரியர் கள், காண்டல், கருதல், உரை, இன்மை, அருத்தாபத்தி, உவமை என அறுவகைப்படும் என்பர்; இவற்றோடு ஒழிபு, உண்மை, உலகுரை (ஐதீகம்), இயல்பு என்ற நான்கை யும் கூட்டிப் பத்து வகைப்படும் எனவும் கூறுவர். ஆறும் பத்துமாகக் கொள்ளப்பட்ட அளவைகள் யாவும் காண் டல், கருதல், உரை என்ற மூன்றன்கண் அடங்கும் என் பதுபற்றி, இவர் காண்டல் முதலிய மூன்றுமே கொண் டார். ஆறெனக்கொண்டவர் சைமினி; பத்தாகக் கொண்ட வர் வியாதனார், பௌட்கர முதலிய சிவாகமங்கள்[1] காண் டல் முதலிய மூன்றோடு அருத்தாபத்தியைக் கூட்டி நான்

1. பௌட். பிர. ச.

காகக் கொண்டனவாயினும், சுருங்க நோக்குமிடத்து அருத்தாபத்தியும் கருதலளவையில் அடங்குவதால் இவ்வாசிரியர் மூன்றுகக்கொண்டது குறிக்கத்தக்கது.

அளவையென்னும் சொல்லுக்குரிய வடசொல் பிரமாணம் என்பது. யாது பொருள்களை அளந்து அறிகின்றதோ, அதுவே பிரமாணம். அங்ஙனம் அறிவது ஆன்மாவின் ஞானசத்தி (உயிரது அறியுமாற்றல்) ஆகலின் அச்சத்தியே பிரமாணம் என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறது. அறிவு, இச்சை, செயல் என்ற ஆன்மசத்தி மூன்றனுள், அறிவு ஆன்மசிற்சத்தி யெனவும் ஞானசத்தியெனவும் கூறப்படும். இதுவே பிரமாணம். ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணத்தால் அறியப்படுவது பிரமேயமாம். பிரமேய ஞானம் பிரமிதி யெனவும், அதனைப் பெறுவதைப் பிரமாதா வெனவும் அளவை நூல்கள் கூறும். அவற்றை விரிந்த நூல்களில் காணலாம்.

இனி, காண்டல், கருதல், உரை என்பன வெல்லாம் ஆன்ம ஞானசத்திக்குச் சாதனமாயுள்ளனவாகும். இவ்வுண்மையை ஏனைத் தருக்க நூல்கள் விளங்கக் கூறவில்லை. இவ் வுண்மையை யுணர்ந்தே "உயிரினேடு உணர்வு"[1] அஃதாவது தன்னை நோக்கிநிற்கும் ஆன்மவறிவு விடயங்களை நோக்கி ஓடும் வழியே பிரமாணமாகின்றது எனக் கூறுகின்றார்.

ஐம்பொறிகளின் வாயிலாக விடயங்களை நேரே அறிவது காண்டல்; புகையானது தீயைவிட்டு நீங்காதிருப்பதுபோல யாண்டும் பொருளைவிட்டு நீங்காதிருக்கும் காரிய காரணங்களைக் கொண்டு காணப்படாது மறைவாக இருக்கும் பொருளை யறிவது கருதல். காண்டல் கருதல்களால் அறியமுடியாத பரலோக பாதாளலோக முதலிய

1. சிவ சித்தி. அளவை. சூ.

வற்றை அறிவிப்பது உரையளவை. காண்டல், வாயிற் காட்சி, மானதக் காட்சி, தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சி என நால்வகைப்படும். கருதல், தன்பொருட்டும் பிறர்பொருட்டும் என இருவகைத்தாம். உரை, மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலை யென முத்திறப்படும். இவற்றின் விளக்கமெல்லாம் அளவையியலில் விரியக் கூறப் பெறு கின்றன.

---

## பிரமாணவியல்

### முதற் சூத்திரம்

இனி, சிவஞானசித்தியாரில் முதற்கண் கூறப்படும் இயல் பிராமண இயல். இவ்வியலில் பதி, பசு, பாசம் எனப் படும் முப் பொருள்களது உண்மை உணர்த்தப்படுகிறது. பதிப்பொருள் ஒன்றே உளதாவது; ஏனைப் பசு பாசம் எனப்படும் இரு பொருள்களும் கயிற்றிற் காணப்படும் அரவுபோலவும், இப்பியில் தோன்றும் வெள்ளிபோலவும் கானலில் தோன்றும் நீர்போலவும் கற்பனையே யொழிய வேறில்லை யென்று கூறுவர் சிலர். வெற்றிலை, பாக்கு, சுண்ணம் என்ற மூன்றும் சேர்ந்தபொழுது புதிதாய்த் தோன்றும் சிவப்புநிறம் போல, ஐம்பூதங்களின் சேர்க்கை யால் உடலின்கண் அறிவு தோன்றுகிறதே யன்றி, அறி வுடைப் பொருளாகிய உயிர் என ஒன்று வேறாக இல்லை யென்பர் சிலர். வேறு சிலர், தேகமே உயிர் என்பர்; சிலர் ஐம்பொறிகளே உயிர் என்பர். இவ்வாறே பிராணவாயுவே உயிர், அந்தக்கரணங்களே உயிர் எனக் கூறுவர் சிலர் உயிரும் உலகமுமே உள்பொருள்கள்; பதிப்பொருள் என ஒன்று இல்லை என்பவரும் உண்டு. அதனால், முப்பொருள் களும் உள்ளனவே யென நிறுவவேண்டியது இன்றி யமையாதாகின்றது. அங்ஙனம் நிறுவப்படுவனவற்றுள்

முதற்கண் எடுத்துக்கொண்டது பதிப்பொருள் உண்மை. அம்முறைபற்றி, பதி உண்மை (கடவுள் உண்டு என்னும் உண்மை) பிரமாண இயலின் முதற்பாதமாகிய முதற்சூத்திரத்தால் உணர்த்தப்படுகிறது.[1]

ஒருவனே டொருத்தி ஒன்றென்
றுரைத்திடும் உலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான்முதல் ஈறு மாகி
மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே

என்பது முதற் சூத்திரம்; இதன் பொருள், "அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புடைய பிரபஞ்சம் தோன்றுதற்குரிய சற்காரிய முறையால் தோன்றிநிற்றலேயன்றி அழிதலும் உடையதாகையால், அது தன்னைத் தோற்றுவிப்பான் ஒரு வினைமுதலை அவாய்நிற்கும்; ஆகலான், அவ்வுலகம் ஒடுங்குதற்கு ஏதுவாய்நின்ற சங்கார காரணனே, அஃது ஒடுங்கிய பின்னும் அநாதி முத்த சித்துருவாய் நிலைபெற்று நின்று அநாதிபெத்த சித்துருவின் பொருட்டு மீளவும் அவ் வுலகத்தை முன்போல மருவுவிக்கும்; அதனால் அவனே உலகிற்கு முதற் கடவுள்," என்பதாம். முத்த சித்துரு என்றது பதிப்பொருளை; பெத்த சித்துரு என்றது பசுக்களாகிய உயிர்களை.

இச்செய்யுளின்கண் பொதுவாய் ஒரு கடவுள் வேண்டப்படும் என்பதனோ டமையாது, சிறப்புவகையால் அக்கடவுளர் இவரென்பதும், உலகம் ஏன் தோற்றுவிக்கப் படுகிறதென்பதும். எம் முறையில் தோற்றுவிக்கப்படு

---

1 இங்ஙனம் சூத்திரங்களில் கூறப்படும் உரைகளெல்லாம் சிவஞானசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டன.

கிறது என்பதும், தோற்றுவிக்கப்பட்ட உலகத்தை ஒடுக்கு தற்குரிய காரணம் இதுவென்பதும், ஒடுங்கிய பின்னரும் இது மீளவும் தோன்றுவானேன் என்பதும், இங்ஙனம் தோற்ற ஒடுக்கங்களைச் செய்யும் இறைவன் எத்தனை வடிவினனென்பதும் பிறவுமாகிய சிறந்த பொருள்கள் செறிந்துள்ளன. இக்கொள்கைகட்கு மாறுபட்ட சமயங்கள் பல இருத்தலால், அவ்வம் மதம்பற்றி யெழும் தடைகட்கு விடை கூறி உண்மையை நிலைநாட்டும்பொருட்டு, இச்செய்யுள் மூன்று கூறுகளாகப் பகுக்கப்பெற்று ஆராயப்படுகிறது. இவ்வாறே ஒவ்வொரு சூத்திரத்திலும் முதற்செய்யுள் பல பொருள்களை யுள்ளடக்கி நிற்கிறதென்பது நினைவுகொள்ளத்தக்கது.

ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலக மெல்லாம் வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே தருபவன் ஒருவன் வேண்டும்.

என்பது முதற்கூறு. இக்கூறு மூன்று உட்கூறுகளை யுடையது; (1) வந்து நின்று போவது (2) வருமுறை (3) தருபவன் ஒருவன் வேண்டும்.

வந்து நின்று போவதென்பது உலகத்துக்குத் தோற்றம், நிலைபேறு, இறுதியென்ற முத்தொழிலுமுண்டு என்று கூறுகிறது. இவ்வுலகத்தைப்பற்றி வேற்றுச் சமயத்தார் வேறு வேறு கூறுவர். உலகாயதர் உலகம் நிலைபேறுடையது, தோற்றமும் இறுதியும் ஆகிய தொழில் கிடையாது என்பர். முத்தொழிற்படுதலை ஒப்புக்கொண்டு, அஃது உலகிற்கு இயற்கையென்று உலகாயதருள் ஒரு சாரார் கூறுவர். இயற்கையன்று, செயற்கையே என்று கொண்டு, நான்கு பூதங்களுள் ஒவ்வொரு பூதம் வினை முதலாய் நின்று ஒவ்வொரு தொழிலை நிகழ்த்தும் என்பர்

வேறொரு சாரார். இங்ஙனமே பல சமயிகளின் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து உலகம் முத்தொழிற்படும் என்பது நிறுவப்பெறுகின்றது.

வருமுறை யென்னும் கூற்றின்கண், உலகம் இல் பொருளினின்றே தோன்றும் என்னும் சவுத்திராந்திகர் மதமும், இல்லதும் உள்ளதும் அல்லாததுமாகிய அநிர்வசனீயப் பொருள் தோன்றும் என்னும் மாத்தியமிகர் மதமும், உள்ளதும் இல்லாததுமாகியது தோன்றும் என்னும் சமணர் மதமும் மறுக்கப்படுகின்றன. முடிவில் உள்ளதாகிய காரணத்தினின்றே உள்ளதாகிய காரியம் தோன்றும் என்னும் சற்காரிய வாதம்* உணர்த்தப் பெறுகின்றது.

தருபவன் ஒருவன் வேண்டும் என்னும் கூற்றின் கண், உலகத்தின் தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தா என்பர் சிலர். உலகம் அழிந்தபின்பு காரணமான அணுக்கள் மீளவும் தாமே கூடிநின்று தாமே காரியப்படும் என்பர் வேறு சிலர். காலமும் அணுக்களும் அறிவில்லாத சடப்பொருள்கள்; ஆதலால், அவை கருத்தாவாதல் செல்லாது என மறுத்துப் பாரிசேட அளவையால் உலகைத் தோற்றுவிப்பான் ஓர் அறிவுடைக் கடவுள் வேண்டும் என்பது முடிந்தது முடித்தலாகச் சாதிக்கப் படுகின்றது. அது வருமாறு:

“ புத்திமற் காரி யத்தாற் பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றுல் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனுல் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே
வைத்திடும் அதனுல் எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்”

---

* சற்காரியம்: சத்து + காரியம் = சத்தாகிய உள்பொருளே காரியப்படும்.

என்பதாம்.[1] இதன் பொருள்; குடம் குயவனாற் செய்யப்படும் காரியமாதாற் போலப் பூத முதலிய பிரபஞ்சமெல்லாம் ஓர் அறிவுடைப் பொருளாற் செய்யப்படும் காரியமே; புருடன் அறிவுடைப் பொருளாயினும், அவன் அப்பூதாதியாகிய உடல் கருவி முதலியவற்றைப் பெற்றாலன்றி அறியமாட்டான்; மாயை, உடல் கருவி முதலியவற்றிற்கு முதற் காரணமாதலின், அஃது அறிவுடைப் பொருளாதல் இல்லை; ஆகவே, பாரிசேட அளவையால், இவ்விரண்டினும் வேறாய் மாயையினின்றும் பூத முதலிய பிரபஞ்சமெல்லாவற்றையும் தோற்றுவிப்பானொரு கடவுள் உளனாகல் வேண்டும் என்பது.

அன்றியும், ஒரு காரிய நிகழ்ச்சிக்கு முதல், துணை, நிமித்தம் என மூன்று காரணங்கள் இன்றியமையாது வேண்டப்படும். குடமாகிய காரியத்துக்கு மண்ணாகிய முதற் காரணமும், தண்டு சக்கரங்களாகிய துணைக்காரணமும், குயவனாகிய நிமித்த காரணமும், இக் காரணங்கள் தம்முள் வேறுதலும் கண்கூடாய் அறியப்படுவன. இங்ஙனமே உலகமாகிய காரியத்துக்கும் மூன்று காரணங்களும் வேண்டப்படும். இம்மூன்றனுள், நிமித்த காரணம் அறிவுடைப் பொருளாகவே இருத்தல்வேண்டும். இன்றேல், முதற்காரணத்தோடு துணைக்காரணங்களை யுய்த்துக் காரியப்படுத்தல் இயலாதாம். உலகமாகிய காரியத்துக்கு மாயை முதற் காரணமும், இறைவனுடையசத்தி முதலியவைகள் துணைக்காரணமும் இறைவனாகிய நிமித்த காரணமும் பெறப்படும். படவே, மேலே கூறப்பட்ட பாரிசேட அளவையாலும் காரண காரிய இயல்பினாலும் தருபவன் ஒருவன் வேண்டும் என்பது விளக்கப்பட்டதாம்.

---

1. சிவஞானசித்தி சுபக்கம் செய்யுள் கள.

இனி, வருமுறை என்பதனுற் பெறப்படும் சற்காரிய வாதம் ஆராயப்படுகின்றது. சற்காரிய வாதம், காரணமும் உள்ளது, காரியமும் உள்ளது எனக்கொள்வது. உலகிற்கு முதற் காரணமாவது, அவயவப் பகுதி (பிரிக்கப்படும் பகுதி)யில்லாத ஒருபொருளாய் ஒன்றற்கொன்று நுண்ணிதாகச் செல்லும் சூக்குமங்கட்கு முடிவான இடமாய் நிற்கும் மாயையாகும். மாய்தல் என்னும் சொல்லின் முதனிலையாகிய மாய் என்பதும், ஆதல் என்னும் சொல்லின் முதனிலையாகிய ஆ என்பதும் புணர வுளதாகும் மாயா (மாய்+ஆ) என்னும்சொல் மாயை என வழங்கும். மாய்தல் ஒடுங்குதல்; ஆதல் தோன்றுதல். மாயா என்றொரு வட சொல்லும் உண்டு; அது மா, யா எனப் பிரிந்துநின்று இப் பொருளே தரும் என மிருகேந்திராகமவுரை கூறுகிறது. இவ்விரு சொன்னிலைகளையும் அறியமாட்டாதார், சைவசித்தாந்தம் கூறும் மாயை என்பது மாயா என்னும் வடசொல்லின் திரிபு என்பர். அது தூய செந்தமிழ்ச்சொல் லாதலை அவர் தெளிய உணரவேண்டும். சிலர் அறியமாட்டாமைக்குக் காரணம், இரு மொழியினும் பொதுவான சில சொற்கள் தொன்றுதொட்டு இருந்து வருதலை மொழி நூல் வகையும் சொல் வரலாறும் கூறுதலை அறியாமையே. நிற்க, எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்கண்நின்று தோன்றுதற்கும் காரணமாயிருப்பது எதுவுமாகாது மாயை யென்று வழங்கப்படும். மாயையினின்றே உலகிற்குக் காரணமாகிய பூதங்களும் அவற்றிற்குக் காரணமான பூதாதி அகங்கார முதலியவைகளும் தோன்றும். மாயையினின்று தோன்றும் பொருள்களெல்லாம் காரியங்களாகும். மாயை உள்பொருளாயிருத்தலால் அதனினின்றும் தோன்றும் பொருள்களும் உள் பொருள்களேயாகும். இன்றைய பௌதிக ஆராய்ச்சியாள

ரும் "இல்லது வாராது, உள்ளது போகாது" என்பதனை யும், எல்லாப்பொருள்களும் ஒருபொருளினின்றேதோன்று கின்றன என்பதனையும் ஒப்புக்கொள்கின்றனர்.

**ஈறுமாகி அநாதி முத்த சித்துரு மன்னி நின்று மருவிடும்** என்பது முதற் சூத்திரச் செய்யுளின் இரண்டாங் கூறு. முன்பு உலகிற்கு நிமித்த காரணம் ஒன்று வேண்டும் என் பதும், அந் நிமித்த காரணம் அறிவுடைப் பொருளா யிருத்தல் வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன; இனி, இந்நிமித்த காரணனுவான் சங்கார காரணனே என்பது விளக்கப்பெறுகின்றது. படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்கட்கும் முறையே அயனும் அரியும் அரனும் கருத்தாவாவர் என்று பௌராணிக சமயம் கூறுகிறது. அதன்படியும் முத்தொழிற்கும் சுதந்தரமுடையவன் ஈறுசெய்யும் கருத்தாவான அரனே யாவன். அயன் அரி என்ற இருவரும் நல்வினை செய்த சிறப்பால் முதல்வனுகிய அரனுடைய அதிகார ஆற்றலை அவனது ஏவலாற் பெற்றுடையவர்களேயாவர். உலகம் தோன்றி நிற்றலேயன்றி ஒடுங்குதலுமுடையது என்பது பெறப்பட்டமையால், அங்ஙனம் ஒடுங்குங்காலத்தில் ஏனை யிருவரும் தத்தம் ஆற்றலோடே நிலைபெறுவா ராயின், உலகம் ஒடுங்குமாறு இல்லையாம். ஒடுக்கம் உண் மையின் அக்காலத்து அவரிருவரும் உளரல்லர் என்பது பெறப்படும். மேலும், அழித்தற் கடவுளாகிய அரன், அழித்தலைச் செய்யுமிடத்து, அயன் அரிகளை யொழித்து ஏனையவற்றையே அழிப்பன் என்பது கிடையாது; சங் காரக் கடவுளாகிய அரனை அழிக்குங் கடவுள் வேறே யில்லை என்பதும் பௌராணிக சமய வுண்மை. ஆகவே, சருவ சங்கார காலத்தில் எல்லாம் அழியுங்கால் அரன் ஒருவனே மிக்கு நிற்பன் என்பதே தெளிவாம்; ஆதலால்,

ஒடுங்கிய உலகங்கட்குப் பெரியதோர் ஆதாரமும் அவனே ஒடுங்கியவற்றை மீளத் தோற்றுவித்தற்கும் நிறுத்தற்கும் உரியவனும் அவனே என்பது உணரத்தக்கது.

இனி, அழித்தலாகிய தொழில் அருளுக்கு மறுதலையாகிய மறம் எனப் படாதோ எனின், மறுதலையாகாது; படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும் அவற்றோடு சைவ நூல்கள் கூறுவனவாகிய மறைத்தல், அருளல் என்னும் இருதொழில்களும் சேர உளவாகும் ஐந்தொழில்களும், முறையே உயிர்களின் நலம் குறித்து முதல்வனால் செய்யப்படுவனவாம். வினைப் பயன்களைத் துய்த்தலால் அவைகள் கழியப்பெறும். உயிர்கட்கு மலபரிபாகம் வரச் செய்தலும், கன்மம் கழியுமாறு அதனைத் துய்ப்பித்தலும், இடைவிடாது பிறத்தல் இறத்தல்களை எய்தும் உயிர்களை இளைப்பாற்றலும், கன்மவொப்புணர்வு வருவித்து, மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதி பயப்பன இந்த ஐந்தொழில்களுமேயாகும். ஆகவே, இவற்றை அருளுக்கு மறுதலையாகக் கருதுதற்கு இடமில்லை என்க.

இவ்வாறே, உலகத்தை ஒடுக்குதல், இடையறாப் பிறப்பிறப்புக்களால் உயிர்கள் எய்தும் இளைப்பை ஆற்றும் பொருட்டும், மீளத் தோற்றுவித்தல் அவ்வுயிர்கட்கு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டுமாம். இதனால் "ஈறுமாகி மருவிடும்" என்பது வலியுறுத்தப்படுகிறது.

இனி, இறைவனை "அநாதிமுத்த சித்துரு" என்பது, இறைவன் அநாதியே மலம் நீங்கிய உருவினையுடையன் என்பதை விளக்கிநிற்கின்றது. தொழில் செய்வார்க்கெல்லாம் வடிவம் இன்றியமையாது. அதனால் ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு வடிவம், அருவம்

அருவுருவம் உருவம் என்னும் மூன்று வடிவமுமாம். உருவம் என்பது ஒக்கும்; அருவத்தோடு இறைவன் எங்ஙனம் தொழில் செய்வன் என்று வினவலாம். உருவமில்லாத உயிர் உடலையியக்கித் தொழில் செய்யக் காண்கின்றோமன்றோ! அங்ஙனமே இறைவனும் அருவமாயிருந்தே எத்தொழிலையும் செய்வன் என அறிதல் வேண்டுமென்று பௌட்கரம்[1] கூறுவது நினைவுகூரத்தக்கது. இக்காலத்தே விஞ்ஞானக் கருவிகள் பலவற்றின் செயன்முறைகளைக் காணும் அறிஞர்கட்குத் தொழில் நிகழ்ச்சிக்குரிய வினைமுதல் உருவப் பொருளாயே இருத்தல் வேண்டுமெனும் ஆசங்கை யுண்டாகவே யுண்டாகாது.

இனி, வடிவங்களெல்லாம் மாயையினின்றும் உண்டாவனவன்றோ? இறைவனும் மாயாகாரியமான வடிவம் கொள்வானாயின், அவனும் சீவர்களுள் ஒருவனாமென்றன்றோ எண்ணப்படுவன் எனின், மாயையிற்போலவே ஞானத்திலும் வடிவம் உண்டு; இக்கால உயிராராய்ச்சியறிஞர், உயிர்கள் எண்ணும் எண்ணங்களும் நிறமுடைய வடிவத்தோடு நிலவுவதை நிழற்படம் பிடித்துக் காட்டுவதை அறிஞர் அறிவர். மயிலைப் புறத்தே சித்திரிப்போனது அறிவின்கண் அவ்வடிவம் முதலில் தோன்றுதல் பற்றிச் சாமானியரும் ஓரளவு உணர்தல் கூடும்.

இனி, உயிர்கள், தாம் செய்த இருவினைக்கீடாகப் பிறவியை அடைந்திருக்கின்றமையின், இன்ப துன்பங்களைத் துய்ப்பது குறித்து மாயாதேகத்தைப் பொருந்தியிருக்கின்றன. இறைவன் கொள்ளும் வடிவம் அன்னதன்று; அது, சீவர்களின் மாயாதேகத்தைக் கழிக்க வந்த கருணை வடிவமாதலால், அது ஞான வடிவமாகும். இதனை இந்நூலாசிரியர் விளக்கலுற்று,

1. பௌட். பதி. ௩௪

" மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
ஆய வாணவ மகன்ற அறிவொடு தொழிலே யார்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முதல் நண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்"[1]

என்று கூறுகின்றார். இதன் கருத்தை விளக்கப் போந்த சிவஞான யோகிகள், "அங்கிகளது ஏற்றத்தாழ்வால் அங்கங்களும் ஏற்றத்தாழ்வுடையன வன்றித் தம்முள் ஒப்பன வல்ல; அற்றேல், அவ்வேற்றத் தாழ்வுகள் என்னையெனில், கூறுதும்: யோகிகள் நம்மனோரைப்போலவே மலத்தைப் பற்றிக் கிடக்கும் பசுக்கள்; அதுவன்றியும், ஒன்றையே யறிதலும், ஒன்றையே செய்தலும் ஒன்றிலே முதன்மை யாதலுமாகிய அற்ப ஞானத் தொழின்முதலுடையராம்; முதல்வனுவான், அம்மலம் நீங்கிய அறிவின்கண் தங்கி நின்று உணர்த்துவோனாகிய பசுபதி; அதுவேயுமன்றி, எல்லா அறிவும் எல்லாத்தொழிலும் எல்லா முதன்மையு முடையன்; இங்ஙனம் அங்கிகட்குத் தம்முள் ஏற்றத்தாழ் வுண்மையின், அதற்கேற்ப மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு அதனோடியைபுடைத்தாய் ஏகதேச அறிவைச் செய்யும் மாயையுரு வரும். அநாதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு மலம் நீங்கிய வுயிர்க்கு வியாபக அறிவைச் செய்யும் சத்தி (ஞான) உருவமுமாதலே யமைவுடையது என்பதாம்," என்று கூறுவது ஈண்டு அறிந்து இன்புறத் தகுவதாம்.

இனி, இறைவன் உருவம் இன்றிநின்றே எத்தொழிலும் செய்யவல்லான்; அப்பெற்றியோன் உருவம் கோடலாற்போந்த பயன் என்னையோ எனின், உயிர் வருக்கங்கள் பொருளியல்புணர்ந்து வீடு பெறுமாறு ஞான நூல்களைக் கோவைபடச் செய்தருளுதற்பொருட்டும்

1. சிவ. சித்தி. சுபக். ௩௧.

அதனைக் குருபரம்பரையின் வைத்து உணர்த்துதற்குத் தான் முதற்குருவாய் எழுந்தருளுதற்பொருட்டும் என்க.

இனி, இறைவன் கொள்ளும் வடிவம், வடிவமென்ற நிலையில் சிந்திக்கத் தகுவதாயினும், அஃது ஏனைய தேவர்களின் வடிவங்களைப்போலாது, சிந்தனைக்கெட்டாத அருமையும் பெருமையு முடையதென்பது. 'உலகினை யிறந்து நின்றது' என்பது முதல் 'கண்ணுதல் யோகிருப்பது" என்பதீறாகவுள்ள ஆறு பாடல்களால் இந்நூலின் கண் விளக்கப்பட்டுளது. இறைவனது வடிவம் ஞான வடிவமாயின், சுத்த மாயாகாரியமாகிய மந்திரவடிவ முதலியவற்றை அவற்குத் திருமேனியாகச் சித்தாந்த நூல்கள்[1] கூறுவதென்னையெனின், அவையெல்லாம் அவற்கு உபசாரவடிவங்களாதல் பற்றி அவ்வாறு கூறுகின்றன என அறிக.

இனி, "தான் முதல்" என்பது முதற்சூத்திரச் செய்யுளின் மூன்றாங்கூறு. இரண்டாங் கூற்றினுள், உலகம் சங்கார காரணனாகிய அரனிடத்திலேயே ஒடுங்கி, மீளவும் அவனிடத்தினின்றே உதிக்கும் என்பது பெறப்பட்டமையால், அவனே தோற்ற வொடுக்கங்கட்குக் காரணன் என்பது பெறப்படும்; ஆயினும், அஃது இக்கூற்றாலும் நன்கு வற்புறுத்தப்படுகின்றது.

க. படைப்பு முதலிய தொழில்களுள் ஒவ்வொன்று ஒவ்வொரு தெய்வத்துக்குரியது; அரனுக்கு முத்தொழிலும் உரியவை.

உ. அரசன் சத்தியொன்றே அமைச்சர், படைத்தலைவர் முதலாயினார்மாட்டுநின்று காரியம் நிகழ்த்துதல் போல, இறைவன் சத்தியொன்றே அவ்வத் தேவர்களிடமாக நின்று காரியங்களை நிகழ்த்துகிறது.

1. பௌட். பதி. ருரு.

ந. அரன் எதனையும் தான் நினைந்தவாறே செய்ய வல்லவன்; ஏனைத் தேவர்கள் அத்தன்மையரல்லர்; இதனைத் தக்கன் வேள்வி, மார்க்கண்டர் வாழ்நாள், பாற்கடல் கடைந்தது முதலிய செய்திகள் வற்புறுத்துகின்றன.

இனி, திருமாலுக்கு இலக்குமியும், பிரமனுக்குச் சரசுவதியும் போல ஒவ்வொரு சத்திக்கும் சத்திமான் ஒருவன் உளன்; இவ்வாறே ஒவ்வொரு தேவரிடமாக நின்று தொழில் செய்யும் சத்திகள் பலவாயின், சத்திமான்களும் பலராவர்; ஆகவே, இவ்வகையில் இஃது அநேகேச்சுரவாதமாய் முடியுமே என்றொரு தடை இங்கே எழலாம். இதனைச் சிவஞான முனிவர், மிகத் தெளிவாக விளக்குவாராய், "உயிர்கட்கு அனுக்கிரகமாத்திரம் குறித்துப் பொது வகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானமொன்றே சிவசத்தியின் சொரூபம்; அது பராசத்தியெனப்படும்; அந்த ஞானம் உயிர்கட்கு மலபாகம் வருதற்பொருட்டுச் சிறப்புவகையான் வியாபரிக்குங்கால் ஒரு கூற்றனே திரோதான சத்தியென நின்று இச்சா ஞானக் கிரியை யென முத்திறப்பட்டு வியாபரிக்குமாகலான், இச்சை கிரியைகளும் ஞானத்தின் வேறன்மையால் காரியத்தால் அநேகமாகிய செனனி முதலிய வியாபார சத்திகளெல்லாம் முற்கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய ஞான மொன்றுன் உளவாவனவேயாம்." என உரைத்தருளுவது விளங்கத் தெரிந்துணரத்தக்கது.

இனி, பொன்மை, நீலம் முதலிய நிறங்களைத் தன் நிறமாகப் பற்றித் தானும் அத்தன்மையேயாய் நிற்பது படிகம். அதுபோல, இறைவனும் தனது சத்தியிற் காணப்படும் பேதம் பலவும் தானாகத் தோன்றி வேற்றுமையின்றி நிற்பன். இங்ஙனம், இறைவன் சத்தியும் சிவமும் எனத் தன்னுள்ளே இருவேறுபட்டமையால் அவனைற் படைக்கப்

பட்ட உயிர்த்தோற்றங்களெல்லாம் ஆண் பெண் என இருவகைப்பட்டிருக்கின்றன. திருஞான சம்பந்தப்பெருமான் இக்கருத்தை "ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருள் நல்கிச், சேணின்றவர்க் கின்னருஞ் சிந்தை செய வல்லான்"[1] என அறிவுறுத்தருளுகின்றார்.

மேலே கூறப்பட்ட சத்தி சிவத்தன்மைகளெல்லாம் இறைவனுக்குத் தடத்த இலக்கணமாம்.[2] அவனுடைய சொரூப இலக்கணம்தான் என்னையெனின், அஃது அடியிற் கண்டவாறு,

[3]"சிவனரு வுருவுமல்லன் சித்திே டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானுமல்லன்
தவமுதல் யோக போகந் தவிர்ப்பவ னல்லன் றானே
இவைபெற வியைந்து மொன்றும் இயைந்திடா வியல்பி னானே"

என இந்நூலாசிரியர் கூறுவது கண்டுகொள்க.

---

## இரண்டாஞ் சூத்திரம்

முதற் சூத்திரத்தால், முதல் துணை நிமித்தம் எனக் காரணம் மூன்றனுள், நிமித்தகாரணனாகிய முதல்வனது உண்மை வற்புறுத்தப்பட்டமை கண்டோம். இனி, இச் சூத்திரத்தால் முதலும் துணையுமாகிய காரணங்களைக் காணலாம். பதி பசு பாசம் எனப்படும் மூன்றனுள் பாசம் இச்சூத்திரத்தால் விளக்கப்படும். பாசம், மாயை மாயேயம் கன்மம் திரோதாயி என நான்கும், ஆணவ மலம் ஒன்றுமாம். இவற்றுள் முன்னைய நான்கும்

1. திருஞான-தேவாரம். 84 : ரு.
2. தடத்த இலக்கணத்தைப் பொதுவிலக்கணமென்றும், சொரூபத்தைச் சிறப்பிலக்கணமென்றும் கொள்க.
3. சித்தியார். சுபக். கூ.

இடையில் வந்து செயற்கையாய்ச் சேர்வனவாதலால் ஆகந்துகம் எனவும், ஆணவமலம், அனாதி சேர்க்கையாயுள்ளபடியால் சகசமெனவும் சிவாகமங்களிற் கூறப்படும். ஆகந்துகம் நான்கும் பாசசாலம் என வழங்குவதும் உண்டு. ஆகந்துக பாசங்களைக் கூறலுற்றமையின், அவ்வியைபுபற்றிச் சகசமாகிய ஆணவமலத்தின் இயல்பும் ஒழிபாக இங்கே விளக்கப்படுமென அறிக.

“உலகெலா மாகி வேறாய்
உடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத்
தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை
தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி
நின்றனன் நீங்கா தெங்கும்”

என்பது இரண்டாஞ் சூத்திரத்து முதற் செய்யுள். சிவ பரம்பொருள், உயிர்கள் இளைப்பாறும்பொருட்டு ஒடுக்கிய உலகத்தை மீளத் தோற்றுவிக்குங்கால், உடலுயிர்போல் அபேதமாகவும் (ஒன்றாகவும்), கண்ணருக்கன்போல் பேதமாகவும் (வேறாகவும்), அறிவும் கண்ணொளியும்போல் பேதாபேதமாகவும் (உடனாகவும்) பிரிவரும் அத்துவிதமாய் உயிர்களின் வழிநிற்பதாகிய சத்திரூபமாகவும், தனது ஆணையான் வரும் இருவினைக்கேற்ப அவ்வுயிர்கள் ஐந்தொழிற்பட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழில் நடாத்துவதாகிய பதிரூபமாகியும், அத்தன்மைகளின் வேறாய் அவற்றோடும் விட்டு நீங்காது எவ்விடத்தும் தானே சுயம்பிரகாச ரூபமாம் இயல்புடையவனாய் நிற்பன் என்பது இதன் பொருள்.

இறைவன் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இருக்கும் மூவகை நிலையினை ஞானசம்பந்தப்பெருமான்,

"ஒன்றாய்....வேறாய் உடனானிடம் வீழிம் மிழலையே"[1] எனத் திருவாய்மலர்ந்திருக்கும் சிறப்பினைச் சித்தாந்த சைவர்கள் தெளிய வுணர்தல்வேண்டும். மேலும், இச் சூத்திரத்தால், அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றினும் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்கும் (வேறாய் நிற்கும்) தன்னுண்மையிற் சிவமெனவும், உலகெலாமாகி உடனாய் இவ்வாறு உயிர்களின் வழிநிற்கும் தன்மையில் சத்தியெனவும், விட்டுநீங்காத் தன்மையால் இருதிறப்பட்டுப் பின் ஐந்தொழில் செய்யும் சிறப்பால் பதியெனவும் பெயர்பெற்று நிற்பன் என அறிதல் வேண்டும்.

இச்சூத்திரப்பொருளும் மூன்று கூறுபடுகிறது. அவற்றுள், உலகெலாமாகி வேறாய் உடனுமாய் நிற்பன் என்பது முதற் கூறு. வேதத்துள் சாந்தோக்கியம் முதலியன, 'ஏகமேவ அத்விதீயம் பிரமம்'[2] என்று கூறு மாற்றால், ஆன்மா ஏகனே எனக் கூறாநிற்ப, ஈண்டு உலகெலாமெனவும், அலகிலா உயிர்கள் எனவும் பன்மை யாகக் கூறுதல் பொருந்தாது", என ஏகான்மவாதிகள் கூறுவர். ஆண்டு, ஏகம் என்பதற்குப் பரமான்மா என்பதே தாற்பரியம்; ஈண்டும் அதுவே கருத்தாகலின் முரண் ஒன்றும் இல்லையென்பது தேற்றம். இனி, ஒருவனாகிய பரமான்மா, பல வுயிர்களில் விரவிநிற்றல் யாங்ஙன மெனின், ஒன்றாகிய அகரவுயிர், பல எழுத்துக்களில் விரவி நிற்றல் காணப்படுதல்போல, இறைவன் விரவிநிற்றல் அமையும் என்பது தெளியப்படும். திருவள்ளுவர், "அகர முதல வெழுத்தெல்லாம்"[3] என்பது காண்க. அன்றியும், உயிர் உடம்பினையும் ஐம்பொறி முதலியவற்றையும்

1. திருஞான. 11. உ. 2. சாந்தோக்கியம் vi. 2. க.
3. திருக்குறள். க.

தானென வேற்றுமையின்றி உடனாய்நின்ற வழியும் உயிர் உயிரே; உடம்பு உடம்பே. உயிர் உடம்பாய் ஒழிவதில்லை; உடம்பு உயிராதலும் இல்லை. இங்ஙனமே, முதல்வன் உயிர்களோடு அபேதமாய்க் கலந்து நிற்பினும் முதல்வன் உயிராதலும், உயிர் முதல்வனாதலும் இல்லையாம். அவ்வாறாயினும், உயிரானது உடம்பின் வேறாகியும் உடம்பெலாமாகிநிற்பது காணப்படுதல்போல, முதல்வனும் அவ் வண்ணமே வேறாகியும் உலகெலாமாகிநிற்றல் அமையும் என விளங்குகிறதன்றோ?

உயிர் உடம்போடு கலவாதவழி உடம்பு தொழிற்படாமைபோல, முதல்வன் உயிர்களோடு கலவாதொழியின், அவை இயங்கமாட்டா என அறிக. இதுபற்றியே, விஸ்வாந்தர்யாமி (உலகிற் குயிராயுள்ளவன்) எனவும், "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே"[1] எனவும், "ஊனாகி யுயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க், கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை........வாழ்த்துவனே"[2] எனவும், "நினையுமா நினையே"[3] எனவும், "அவனன்றி ஓரணுவு மசையாது என்னுமோர் ஆப்தர் மொழியுண்டு கண்டாய்"[4] எனவும் சான்றோர் உணர்ந்தோதிய உரைகள் பல்கிக் கிடக்கின்றன.

இனி, ஏகான்மவாதிகள், வேதாந்தமெனக் கூறப்படும் உபநிடத மொழிகளைப் பிரமாணமாகக்கொண்டு, அவற்றின் பொருளைத் தெளித்துரைக்கும் சித்தாந்தமாகிய சிவாகமங்களை மேற்கொள்வதிலர். முனிவர்களாகிய மக்களுரைத்த உபநிடதங்களினும், இறைவனருளிய சிவாகமங்கள் தெளிவுடையன என்பது தேறமாட்டாதார்

1. திருநா. 309, ந. 2. திருவாச. திருச்சதகம். 15.
3. திருவிசைப்பா. கோயில். 11.
4. தாயுமானர். எங்குநிறை. க.

சிலர், இடைக்காலத்தே தோன்றிக் கரும்பிருக்க இரும்பு தின்று எய்த்தனர். அதனால் வேதாந்த வாக்கியங்கட்கு எடுத்தோத்து, இலேசு, உத்தியென வரும் பொருள்கோண் முறையில் பொருள்கொள்ளும் திறனறியாது இடர்ப் படுவாராயினர். உத்திக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வா தவை எத்துணை உயர்ந்த நூல்களிற் கூறப்படினும், அவை பிரமாணம் ஆகா என்பது அவர்களால் நன்கு உணரப் படவேண்டும். அளவைகளானும் பொருந்துமாற்றானும் உண்மை கண்டு உரைப்பதுபற்றியே சிவாகமங்கள் சிறந்த பிரமாண நூல்களாய்ச் சித்தாந்தமெனச் சான்றோர்களால் பாராட்டப்படுகின்றன. ஆகமப்பொருள் காணுமிடத்தும் அளவைகளின் வைத்துக் காண்டல் வேண்டுமென்ற முறை வழி வழியாக ஆன்றோரால் கையாளப்பட்டு வருகிறது. இதனை நீலகண்டர் (சீகண்டர்),[1] நாராயணகண்டர்,[2] உமாபதி சிவனார்,[3] சிவஞானமுனிவர்[4] முதலியோர் வகுத்துள்ள பேருரைகள் கண்டு தெளிந்துகொள்க.

இனி, '**அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்ல**' என்பது இரண்டாஞ் சூத்திரச் செய்யுளின் இரண் டாங்கூறு.

"முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினைப்பயன்களுக்கு ஈடாக எடுத்த பிறவியில் அவ்வினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களை உயிர்கள் துய்ப்பனவாகும். அங்ஙனம் துய்க்குங்கால், உயிர் முனைப்பால் மேலும் மேலும் வினை கள் உண்டாகும். அவ்வினைகளை மருத்துவனும் வேந்தனும் போல முதல்வனே தனது ஆணையாகிய சத்தியால் உயிர் கள் நுகருமாறு கூட்டுவிப்பன். அவ்வாறன்றிச் சடமாகிய நல்வினை தீவினைகள் மறுபிறப்பின்கண் தாமே வந்து வினை

1. பிரமசூத்திரபாடியம். 2. மிருகேந்திரவிருத்தி.
3. பௌட்கரபாடியம். 4. சிவஞானபாடியம்.

முதலாகிய உயிர்களைப் பொருந்தமாட்டா. அதுபற்றியே அலகில்லாத உயிர்கள் கன்மபோகங்களை இறைவனது ஆணையாகிய சத்தி கூட்டுவிப்ப அவற்றின்கண் அமர்ந்து செல்லும்'' என்று சூத்திரம் கூறுவதாயிற்று.

இனி, சிலர், "இன்ப துன்பங்கள் உயிர்க்கு இயற்கை; ஆதலால் அதற்கு வேறு காரணம் வேண்டுவதில்லை.'' என்பர். 'பொருளுடைமையால் இன்பமும், அஃது இல்லாமையால் துன்பமும் வரும்; அப்பொருள் முயற்சியானன்றி வாராது; ஆதலால் முயற்சியும், முயற்சி யின்மையுமே இன்பங்கட்கும் துன்பங்கட்கும் முறையே காரணமாம்''; என்பர் வேறு சிலர். "பல பசுக்கள் நிறைந்து குழீஇயிருக்கும் மந்தைக்குள் புறத்தே விடப்பட்ட கன்று தன் தாயை நாடிக்கோடல்போல, வினைகள் தாமே வந்து மறுபிறப்பில் தம்மைச் செய்த வினை முதலாகிய உயிரை நாடியடைந்து தம்முடைய பயனைத் துய்ப்பிக்கும்''[1] என்று கூறுவர் பிறர்.

ஒரு பொருட்கு இயற்கையாய் உள்ளதொன்று அப்பொருள் அழியுங்காறும் உடனிருந்து அழியுமே யன்றி, முதலாகிய பொருள் நிற்கத் தான்மட்டில் நீங்குவதன்று. நீங்குமாயின் அஃது இயற்கையாகாது. வினைப்பயனாகிய இன்பமும் துன்பமும் உயிர்களால் நுகரப்பட்டுக் கழிவனவாதலால், அவற்றை இயற்கையெனச் சிலர் கூறுவது பொருந்தாது; மேலும், மாறுபட்ட இரண்டு பொருள்கள் ஒன்றுக்கு இயல்பாகா; இன்பமும் துன்பமும் தம்மின் மாறுபட்டன வாதலால், அவற்றை இயல்பென்றல் கூடாதாயிற்று. முயற்சியில்லாதார் பொருளுடையராதலையும், முயற்சியுடையார் உள்ள பொருளையும் இழந்துவிடுதலையும் உலகில் நாம் காண்கின்றோம். இக்காட்சியளவையே,

1. நாலடி. பழவினை. க.

பொருளுடைமைக்கு முயற்சி யொன்றே காரணமாமெனக் கருதுவது தவறென்பதை வற்புறுத்துகிறது. வினைகள் அறிவில்லாத சடப்பொருள் ; ஆன்கன்றுகள் அறிவுடைய சித்துப்பொருள்கள் ; ஆதலால்,ஆன்கன்றின்மேல் வைத்து வினைத்தொடர்பை எடுத்தோதுவது குற்றம். இவ்வாறே இக் கூற்றின்கண் பிறர் நிகழ்த்தும் தடைகளெல்லாம் மறுப்புண்டொழிவது காண்க.

இனி எடுத்த வுடம்பின் வரக்கடவன வாகிய இன்ப துன்பங்கட்கேதுவாய செல்வ வறுமைகளும், அவற்றான் வரும் உயர்வு இழிவுகளும் அவற்றால் விளையும் இன்ப துன்பங்களும் ஆகிய ஆறும், முன்பேதானே, கருவினுள் சூக்குமமாய் அமைந்து கிடந்தனவேயன்றி அவ்வப்போது உளவாவனவல்ல ; பின்னர் அவற்றை நுகர்தற்குத் துணை யாக உளதாகும் முயற்சி இறைவனாற் கூட்டப்படுவ தெனக் கொள்ளப்படும். அம் முயற்சிதானும் நான் என் னும் முனைப்போடு செய்யப்படுமாயின், அது அடுத்த பிறப்பிற்கு ஏதுவாய்விடும். வித்தினின்று மரமும், மரத்தி னின்று வித்தும் மாறி மாறித் தோன்றுதல் போல, வினையினால் பிறப்பும், பிறப்பால் வினையும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும். இவ்வாறு வினைகளைப் பற்றிய செய்திகள் பலவும் இச் சித்தியாரில் இப்பகுதியில் இனிது விளக்கப்பட்டுள்ளன.

மீமாஞ்சகர், வினைகளே முதலாய் நின்று, தம்மைச் செய்த உயிர்க்குப் பயனாகிய இன்பதுன்பங்களை நல்கும் ; இவற்றைக் கூட்டுவித்தற்கென முதல்வன் ஒருவன் வேண்டா என்பர். அவர்களை மேலே கூறிய காரணங்களைக் காட்டி மறுத்து, ஒருவன் உள்ளம், உரை, உடம்புகளால் பிறவுயிர்கட்குச் செய்யும் நலங்களையும், அவற்றைச் செய்ய மாட்டாமையாகிய தீங்குகளையும் இறைவனே ஏற்றுக்

கொண்டு நலந் தீங்குகட்கேற்ப இன்ப துன்பங்களை நுகர் விப்பன்; அவ்வாறு செய்வது அவன் உயிர்கண்மீது வைத்த பெருங்கருணையாலாம். உலகத்துத் தந்தை தாயர் கள் தம் மக்களை நல்வழிப்படுத்தும் கருத்தால் ஒறுத்தலும் அடித்தலும், கடிதலுமாகிய செயல்களைச் செய்தல் போலவே, இறைவன் நலஞ்செய்த உயிர்கட்கு இன்பமும் தீங்கு செய்த உயிர்கட்குத் துன்பமும் எய்துவிக்கின்ற ஞதலால், அச்செயல் கருணைச் செயலாகவே முடிகிறது. இறைவன் உடல், கருவி, செயப்படுபொருள், காலம், நியதி முதலியவற்றை உயிர்களோடு கூட்டி வைத்தா லன்றி, உயிர்கள் ஒன்றைச் செய்யவோ, ஒன்றைத் துய்க்கவோ அவற்ருல் இயலாது. அவற்ருற் செய்யப்படும் முயற்சியை இறைவனது அருள் என்று கொண்டு ஒழுகு வதே உயிர்கள் செய்யத் தகுவது. அதுவே வினைத் தீர்வுக்கும், அதுவாயிலாகப் பிறவியொழிதற்கும் வாய்ப் புண்டாகும். ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசா ரம், உறவு, சீலம், தவம், தானம், வழிபாடு, வணக்கம், வாய்மை, பிறர்மனை நயவாமை, துறவு, அடக்கம், மூத்தோ ரைப் பேணுதல் ஆகிய நல்லொழுக்கங்கள், தமக்கும் பிறர்க் கும் நலம் செய்வனவாதலின், அவை இறைவன் விரும்பும் இறைபணியாய் முடியும். இறவாத இன்ப அன்பு வாழ்வே இதன் பயனுய் விளையும். மேலும், மருத்துவ நூலின்வழி ஒழுகுவோர்க்குப் பிணி வாராதவாறு போல, இறைவன் அருளிய நூல்கள்கூறும் பொய்தீர் ஒழுக்கநெறியே ஒழுகி ஞல் பாவம் உண்டாகாது; மருத்துவநூலுணர்த்தும் ஒழுக்கநெறியைப் புறக்கணிப்பவர் நோயுற்றுத் துன் புறுவதுபோலவே, இறைவனது "பொய்தீர் ஒழுக்கநெறி" நில்லாதாரைப் பாவம் தோன்றி வருத்தும் என்பதும், அருளுருவாகிய இறைவன், அது காணப்பொருது, நில்லா

தாரை நிறுத்தற்குரிய நெறிமுறைகளால் நல்வழிப்படுத்துவன் என்பதும் நன்கு உணரற்பாலனவாம். "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடன்" என்பர் பொன்முடியார்.[1] நன்னடை நல்கும் வேந்தன், அதற்குரிய ஒழுகலாறுகளை யேற்படுத்தி அவற்றின்படி ஒழுகுவோரை விரும்பி இன்புறுத்துவதும், ஒழுகாதாரை, ஒறுத்து அவ்வொழுக்க நெறியில் நிறுத்துவதும் அரசனீதியும் அருட் செயலும் ஆகின்றன. சிற்றறிவு படைத்த உயிர்த்திரளுள் அடங்கும் வேந்தனது அருட்செயலே இப்பெற்றித்தாயின், முற்றறிவினனாகிய இறைவனது அருட்செயல் நம்மனோரது அறிவெல்லையைக் கடந்து பரந்து திகழும் பண்பிற்றெனத் தெளியவேண்டும். பௌராணிக சமயங்கள் கூறும் மற்றைத் தெய்வங்களெல்லாம் வேதனைப்படுதலும், இறத்தலும் பிறத்தலும் இன்பத்தின் மகிழ்தலும் துன்பத்தில் துயர்தலும் உடையனவாகும் அவற்றையும் பிறவற்றையும் நோக்கிச் செய்வனவற்றை இறைவனாகிய சிவ பரம்பொருள், தானே, ஏற்றுக்கொண்டு, உயிர்கள் செய்தவற்றுக் கேற்ற இன்ப துன்பங்களைக் கூட்டுவிப்பவன். இதுபற்றியே, பௌராணிகரை நோக்கி, "யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார் தாம் வருவர்மற்றைத் தெய்வங்கள், வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையும் செய்யும்"[2] என அருணந்தி சிவனாரும், பிற சமய வாதிகளை நோக்கி, "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"[3] என நாவரசரும் தெருட்டிக் கூறினர்.

இவ்வாறு, பிற தெய்வங்களை நோக்கியும், பிற சமய நெறி நின்றும் செய்யும் வினைகளை ஏற்றுக் கொண்டு

1. புறம். ருகஉ. 2. சிவ. சித்தி. ககச. 3. திருநா. 60. க.

அவற்றிற்குரிய பயனைத் துய்ப்பிக்கும் இறைவன், உலகெலாமாகி நிற்கும் இயல்பினால், தாவர சங்கமங்களின் இடமாக நின்று, உயிர்கள் செய்யும் வினைகளை யேன்று கொள்வன் என்று தெளிய வேண்டும். அவனை நினைந்து செய்யும் எவ்வினையும் அறவினை; அவனை மறந்து செய்வன அறமாகா. இறைவனை மறந்தும் புறக்கணித்தும் செய்த அறவினையாகிய தக்கனது வேள்வி தீவினையாய்த் துன்பம் விளைவித்ததும், இறைவனை நினைந்து செய்த கொலை வினையாகிய சண்டேசுரர் தம் தந்தையைத் தாளற வீசியது அறவினையாய் இன்பம் விளைவித்ததும் முறையே புராணங்களாலும் வரலாற்று நூல்களாலும் அறியக் கிடந்தன.

## பிறப்பிறப்புக்களைப்பற்றிய விளக்கம்

உலகில் நிலவும் உயிர்கட்கு மூவகையுடம்பு கூறப்படும். புறத்தே தோன்றும் உடம்பு பூதனுசரீரம் என்றும், உள்ளே சூக்குமமாய் இருக்கும் உடம்பு புரியட்டசரீரம் என்றும், நரகத்தில் கிடக்கும் உடம்பு யாதனுசரீரம் என்றும், துறக்கத்தில் இன்புறுதற்குரிய உடம்பு பூதசார சரீரமென்றும் கூறப்படும்.[1] புரியட்ட சரீரமாகிய நுண்ணுடம்பு பூதசார தேகத்துள்ளும் யாதனு தேகத்துள்ளும் சென்றடங்கி இயக்கும். சூக்குமபூதங்களாகிய தன்மாத்திரையைந்தும் மனம் அகங்காரம் புத்தி என்ற அந்தக்கரண மூன்றும் என்ற இருகூற்று எட்டுக்கருவிகளாலும் ஆகியது புரியட்டகம் என்று வழங்கும் நுண்ணுடம்பு. பூதனுசரீரம் தூலவுடம்பெனவும் பருவுடம்பெனவும் வழங்கும். உயிர்கள் தூலவுடம்பை விட்டு நீங்குங்கால், அவற்றோடு ஒட்டிநிற்கும் நுண்ணுடம்போடே செல்லும்;

1. இம் மூவகையுடம்புகளைப் பட்டினத்தடிகள் "பூதசாரத் தனு, பூத மகாதனு, பூதபரிணமம் புகலுறுயாக்கை" (திருக்கழுமல மும். 25) என்பது காண்க.

சென்று, இன்பத்துக்குரிய துறக்கவுலகு புகுங்கால் பூத சாரதேகமெடுத்துச் செல்லும்; துன்பத்துக்குரிய நிரயம் புக வேண்டின், யாதனு தேகமெடுத்துச் செல்லும்; ஆங்காங்கு நுகர்தற்குரிய போகங்களை[1] நுகர்ந்தபின், மண்ணுலகில் வினைக்கீடான பருவுடம்பு பெறும்; மேலும், தூலவுடல் நீங்கியபின் மீண்டும் தூலவுடல்களையே எடுத்தலும், சிலகாலம் கற்போல் செயலற்றுக் கிடந்து பின்னர்த் துறக்க நிரயங்கட்குச்சென்று போகந்துய்த்து, அதன்பின், உயிர்களின் கன்ம பரிபாகத்துக் கேற்ற முறையில், இறைவன் ஆணை வழியே பிறவிகளைப் பெறுதலும் உண்டு எனச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இவை ஈண்டும் கூறப்படுகின்றன.

பாம்பு தன் தோலை நீக்கி வேறு புதுத்தோல் மூடிய உடம்பு பெறுவது கண்கூடு. அதுபோல் உயிர்களும் ஒரு தூலவுடலை விட்டு மற்றொரு தூலவுடலையடையும். தொடக்கத்தில் முட்டைக்குள் இருக்கும் பறவை, பின்பு அம் முட்டையினின்று நீங்கி வெளிப்படும. முட்டைக்குள் இருக்குங்கால் முட்டையிடமும், முட்டையின் நீங்கியபின் வேற்றிடம் இடமுமாகும். இவ்வாறே உயிர்களும் இடம் மாறிச் செல்லும். சித்திகள் வல்லவர், விலங்குடம்பிலிருந்து புள்ளுடம்பிலும், புள்ளுடம்பிலிருந்து மக்களுடம்பிலும், மக்கள் உடம்பிலிருந்து விலங்கு புள் முதலிய உடம்புகளிலும் சென்று இயங்குவரென நூல்கள் கூறுவதைக் காண்கின்றோம். இவர்களைப் பரகாயப் பிரவேசிகள் என்பர். இவர்களைப்போல உயிர்களும் அச்சுமாறிப் பிறக்கும். இவ்வாறு உடலும் இடமும் அச்சுமாறுவது

1. இன்பமும் துன்பமுமாகிய இரண்டனையும் போகமென்றே சித்தாந்த நூல்கள் வழங்கும்; போக காரிகை யென்னும் நூலுட் காண்க.

உயிர்கட்கு இயல்பு என்பதோடு நில்லாமல், நனவில் இருப்பவன் உறங்கிக் கனவு காண்கையில், அறிவுமாறுவது போல், பிறப்பு நிலைமாறும்போது உயிர்கட்கு அறிவும் மாறும். இவ்வுண்மையறியாதார் ஒருசிலர், உயிர்கட்குப் பிறப்பு ஒன்றே தவிர, வேறு பிறப்புக்கிடையாது என்றும், மேன்மேலாகப் பிறவிகளையடைந்து செல்லும் உயிர் மீளக் கீழ்நிலையையடைதல் இல்லையெனவும் கூறுவர். அவர் கூறுவன ஒருசில பிறவிகள்பால் காணப்படுகிறதே தவிரப் பொது விலக்கணமாகக் கோடற்கு அமைவதில்லை; அதனால் அக்கூற்றுக்கள் கொள்ளப்படாவாகின்றன.[1]

கன்மமென்பது ஒன்று உண்டென்பதும், அதுவே உயிர்கள்பால் காணப்படும் பலவேறு இன்ப துன்பங்கட்கும் பிறவிமாறுதலுக்கும் காரணமென்பதும் தெளிய உணரத்தக்கனவாகும். இன்ப துன்பங்கள் உயிர்களின் இயல்பென்பர் சிலர். ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரு தன்மைகள் ஒன்றிற்கு இயல்பாதல் கூடாதென்று முன்

1. தவளை, வண்ணாத்திப்பூச்சி முதலியவற்றின் பிறப்புநிலை வேறுபாட்டைக் காட்டி, இவைபோல் பிறப்பு மேன்மேல் உயர்ந்து செல்லும் என்பர்; கோட்டுப் பூச்சி (Dragon Fly) முதலியவற்றின் பிறப்பு வேறுபாட்டைக் காட்டி ஒருகால் மேற் பிறவியெடுத்த உயிர் மீட்டும் கீழ்ப்பிறவி யெடுத்தல் இல்லை யென்பர் சிலர். இவையாவும் கருவிலிருந்து வளர்ந்து சிறந்து பருவுடல் உருவாகும் வரையில் அமைந்து நிற்கும் வளர்ச்சி முறையே தவிர, பிறவிக்குரிய தோற்றமுறையல்ல. ஆதலால், இவ்வாராய்ச்சி பிறப்பு நிலை வேறுபாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைவதில்லை. இவையாவும் யோகக்காட்சிபால் அறிஞர்கள் அறிந்து கண்டனவாதலின், அக்காட்சி வாயிலாகக்காண்டல் வேண்டுமென்பது பெறப்படும். படவே, பண்டைச் சான்றோர் கூறிய இதனை உரையளவையின் வைத்து உணர்த்தி வருவது நம் நாட்டுச்சான்றோர்மரபு. இக்கால உயிராராய்ச்சித்துறையும் இன்னும் நிரம்பா நிலையில் இருத்தலின், இது கொண்டு, இக் கூறிய பிறப்பு வேறுபாடுகளைப் புறக்கணிப்பது ஆராய்ச்சி யறிவுடையார் செயலாகாது. உண்மை வேட்கை யுடையார், இதற்குரிய துறையில் முயன்று காண்பது நன்று.

னரே கூறப்பட்டது. அதனுல் இயல்பென்பார் கூற்றுப் பொருந்தாதாம். இனி, கடவுளே உலகம் நடைபெறுதற் பொருட்டு இவ்வகை வேற்றுமைகளைச் செய்கின்ருர் என்பர் ஒரு சாரார். வேண்டுதல் வேண்டாமையில்லாத இறைவன், ஒரு காரணமும் இன்றியே ஒருவர்க்கு இன்பத்தையும் ஒருவர்க்குத் துன்பத்தையும் கொடுக்கவே மாட்டான் என்பதை அவர்கள் எண்ணுதல் வேண்டும். மேலும், உலகநடை அந்நீதியை அடிப்படையாகக்கொண்ட தெனப்படும். இறைவன் நீதியையே தனக்கு உருவாக வுடையன் எனத் திருஞான சம்பந்தர்[1] முதலிய சான்ருேர் வற்புறுத்தியிருக்கின்றனர். இவ்வாறே இந்நூலின்கண் மறுபிறப்புண்மையும் எடுத்தோதப்பட்டுளது.

இனி, தூலவுடலுக்கு முதற்காரணம் மண்ணும் நீரும் தீயும் காற்றும் வெளியுமாகிய ஐம்பெரும் பூதங்கள் என்பர் பலர். தூலபூதங்கள் உடலோடு நேரே சர்பந்தப் பட்டு உடலுருவாவதில்லை யென்பது கண்கூடாக அறியக் கிடக்கின்றது. சூக்குமபூதங்களாகிய தன்மாத்திரைகளும் மனம் புத்தி அகங்காரமென்னும் அகக்கரணங்களுமாகிய இருகூற்று எட்டும் கூடிய புரியட்டகமென்னும் நுண்ணுடம்பே தூலவுடம்புக்கு முதற்காரணமென்பதும், சூச்குமவுடம்பினின்றும் தூலவுடல் உண்டாவது, ஒரு மரம் தனக்குரிய காலமுற்றும் நீங்கிட அதன் வேரின் கண்ணுள்ள சூக்கும சத்தியினின்றும் மற்ருெரு மரம் உண்டாவது போலுமாம் என்பதும் இந்நூலின்கண் மிகத் தெளிவாக ஆராயப்பெற்றுள்ளன.

இனி, மரம் தோன்றுதற்கு வித்து இன்றியமையாதவாறு போலத் தூலவுடம்புக்கும் ஒரு முதற்காரணமுண்டென்பதும் அஃது இல்வழித் தோன்ருதென்பதும்

1. திருநா. 329. ௪.

அருத்தாபத்தியென்னும் அளவையால் அறியப்படும். தூலவுடம்புக்குக் காரணம் சூக்குமவுடம்பும், அதற்குக் காரணம் மூலப்பகுதியும் அதற்குக் காரணம் அசுத்த மாயையென்னும்மோகினியுமாம்என்பதும், அம்மாயையே அசுத்தம், பிரகிருதியாகிய முப்பத்தொரு தத்துவங்கட்கும் பரம முதற்காரணமென்பதும் சித்தாந்த நூல்களால் உணர்த்தப்படுகின்றன. ஏனை, நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்ற ஐந்தும் சுத்த மாயையின் காரியங்கள். இத்தத்துவங்களெல்லாம் இறைவனையடைதற்குரிய பக்குவம் உண்டாதற்பொருட்டு மலத்தோடு கூடிய பெத்த காலத்து ஆன்மாவுக்கு உளவாவன. முதற்காரணமாகிய மாயையினின்றும் இவற்றைப் படைத்துத் தருவதே இறைவனுக்குப் படைப்புத் தொழில் எனப்படுவது.

இனி, இவ்விரண்டாங் கூற்றின்கண் மேலும் சில பொருள்கள் உணர்த்தப்படுகின்றன. அவற்றையும் ஈண்டு விளக்கிக் கூறுவாம்:

உலகம் மூன்றென்பது நம்மனோர் கொள்கை. "நீல மேனி வாலிழை பாகத்தொருவன் இருதாள் நிழற்கீழ், மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" எனப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறுவதும்[1] இதற்குச் சான்று பகரும். அம்மூன்றும் மேல், நடு, கீழ் என்று கூறப்படும். அவற்றை முறையே, துறக்கம், மண்ணுலகு, பாதலம் என்றும் கூறுவர். உயிர்கள் செய்யும் வினைக்கேற்பத் துறக்கத்தில் இன்பமும், மண்ணுலகில் இன்ப துன்பமும், பாதலத்தில் துன்பமும் அவற்றால் நுகரப்படும். இவ்வின்ப துன்பப்பிறவிகளை நியமித்து ஆங்காங்குச் சென்று நுகருமாறு உயிர்களைச் செலுத்தி இறைவன் தான் தலைவனாய் நிற்பன். இறைவனது இச்செயல், மலகன்மங்களாகிய

1. ஐங். கட. வாழ்த்து,

நோயுற்று வருந்தும் உயிர்களை அந்நோயினின்றும் நீக்கிக் காத்தற்பொருட்டும் நோய்நீங்கிய உயிர்கட்குத் தன் திருவடிப் பேரின்பத்தை அருளுதற்பொருட்டும் செய்யப்படுகிறது. தலைவனது தலைமைப்பணியும் இதுதானே!

இனி, உடல் கருவி யுலகுகண் முதலியன வெல்லாம் மாயா மலகாரியமாகலின், இம்மலத்தைக் கொண்டு உயிர்கள் நோயுறுதற்கேதுவாகிய ஆணவமல கன்மங்களைப் போக்குவது எங்ஙன மெனின், ஆடையிலுள்ள அழுக்கை வண்ணான், உவர் சாணம் முதலிய வேறு அழுக்குகளை யூட்டிப் போக்குகின்றானன்றோ? அம்முறையே இம்மாயா மல காரியங்கள் உயிரது மலத்தைப் போக்குதற்கு அமையும் என அறிக.

ஆன்மா அறிவுடைப்பொருளாயினும், "அங்கியானது தானும் ஒன்றை யணைந்து நின்று நிகழ்த்திடும் பங்கியாது உயிர் தானும் இப்படிப் பற்றியல்லது நின்றிடாது,"[1] என்றபடி, தான் யாதானு மொன்றைப்பற்றி நின்று அறிதல், செய்தல், விழைதல் ஆகிய காரியங்களைச் செய்யுமேயன்றித் தனித்து நின்று ஒன்றையும் செய்யும் ஆற்றலுடையதன்று. இதுபற்றியே மாயை, சுத்தமாயை அசுத்த மாயை, பிரகிருதிமாயை என்ற மூன்றினின்றும் தத்துவங்கள் தோற்றுவிக்கப்பெற்று உயிர் மேற்கூறிய செயல்களைச் செய்தற்குத் துணையாக அமைக்கப்பட்டுள்ளன. சுத்த மாயையினின்றும், நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னும் ஐந்து தத்துவங்களும், அசுத்த மாயையினின்றும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பகுதியென்னும் ஏழு தத்துவங்களும், பிரகிருதிமாயையினின்றும் தன் மாத்திரையைந்து, பூதமைந்து, அறிகருவி (ஞானேந்திரியம்)யைந்து, தொழிற்

1. சிவ. சித்தி. பரபக். 52.

கருவி (கன்மேந்திரியம்)யைந்து, கரணம் நான்கு என்ற இருபத்துநான்கு தத்துவங்களும் ஆக முப்பத்தாறு தத்துவங்கள் இயன்று உள்ளன. இங்ஙனம் தத்துவம் மூப்பத்தா றென்னும் கொள்கை சைவசித்தாந்திகட்கே யுரியது.[1] பிறசமயத்தவர் கொள்வதில்லை.

மேற்கூறிய தத்துவம் முப்பத்தாறனுள், நாத முதலிய ஐந்தும் சிவதத்துவம் எனவும், சுத்ததத்துவமெனவும், கலை முதலிய எழும் வித்தியாதத்துவமெனவும், பிரகிருதி மாயையிற்றோன்றிய தத்துவம் இருபத்துநான்கும் ஆன்மதத்துவமெனவும் வழங்கும். ஆன்மதத்துவம் இருபத்து நான்கும் ஆன்மா போகம் துய்த்தற்குக் கருவியாதல் பற்றிப் போக்கியகாண்டம் எனவும், வித்தியாதத்துவங்களேழும் போகம் துய்த்தற்குத் துணை செய்யும் கருவியாதல்பற்றிப் போகசயித்துரு காண்டமெனவும், சிவதத்துவம், ஏனை போகசயித்துரு போக்கியகாண்டக் கருவிகளை எழுப்பித் தொழிற்படுத்துவன வாதலால், அச்சிவ தத்துவமைந்தும் பிரேரக காண்ட மெனவும் சான்றோர்களால் குறிக்கப்படுகின்றன.

இத் தத்துவங்கள் தோன்றுதற்குக் காரணமாயுள்ள பொருள் முன்னே முதற் சூத்திரச் செய்யுளின் முதற் கூற்று விளக்கத்தின்கட் கூறிய மாயையாகும். இம்மாயை யென்னும் சொற்பொருள் விளக்கத்தை ஆண்டேகூறினும். எல்லாம் ஒடுங்குதற்கு நிலைக்களனுகவுள்ள பொருளே தோன்றுதற்கும் உரியது என்பதுயாவர்க்கும் ஒப்பமுடிந்தது. அதனுல் மாயை தோற்ற ஒடுக்கங்கட்கு நிலைக்களமாயிற்று.

இனி, மாயா காரியமான உலகப்பொருள் உருவம், அருவுருவம், அருவம் என்ற மூவகை யுருவத்தை யுடைய

1. "ஆகின்ற ஆறாறருஞ்சைவர் தத்துவம்" திருமந், 2176

தாகும்; உருவப் பொருளாகிய உலகப் பொருள் ஒடுங்குங் கால் அருவுருவாய் முடிவில் அருவமாய் ஒடுங்கும். அருவ நிலை சத்திவடிவமாகும் அதுபற்றியே மாயையாவது, உலகப் பொருளின் தோற்ற வொடுக்கங்கட்கு நிலைக் களனாய் முதற் காரணமாய் வயங்கும் சத்தி (ஆற்றல்) எனச் சைவ சித்தாந்த நூல்களால் விளக்கப்படுகிறது. இற்றை விஞ்ஞானத்துறையும் உலகியற் பொருளனைத்தும் அணுவை முதற் காரணமாய்க் கொண்டவையென முதற் கட்கண்டு இப்போது அணுவன்றெனத் தேறி அதற்குக் காரணமான சத்தி (ஆற்றல்) என்ற முடிவுக்கே வந்து, உலகின் தோற்ற வொடுக்கங்கட்கு முதற் காரண நிலைக் களனவது சத்தி (Energy) யென்று[1] துணிந்து கூறு கிறது.

காரண காரிய ஆராய்ச்சி வகையில் மாயை (பொது மையில்) ஒன்றாகக் கூறப்படுமாயினும், தத்துவ ஆராய்ச்சி வகையில் அம்மாயை, சுத்தமாயை, அசுத்தமாயை, பிர கிருதிமாயை என முத்திறப்படுதலும், பிரகிருதி மாயை அசுத்த மாயையின் காரியமாய்த் துன்பமே விளைத்தலின் அசுத்த மென்றும் போகபோசயித்துருகாண்டக் கருவி கட்குக் காரணமாகும். அசுத்தமாயை இன்பமேயன்றித் துன்பத்தோடும் விரவுவதுபற்றிச் சுத்த அசுத்த மென் றும், உயிர்களை மலத்தின் நீக்கி இன்பம் பெறுவித்தற் பொருட்டுக் காரியப்பட்டுவரும் பிரேரகக் கருவிகளான சிவதத்துவங்கட்குரிய சுத்தமாயை, "இன்ப மாத்திரையே பயத்தற் கேதுவாயது" பற்றிச் சுத்தமென்றும் வழங்கு வனவாகும். இங்ஙனம் தத்துவ ஆராய்ச்சிக்கண் இருகூறு பட்டு இயலுவது கொண்டே மாயை இரண்டெனச் சான்

---

1. Prof- Sir James Jeans என்பாரும், C. E. M. Joad என்பா ரும் பிறரும் கூறுவன காண்க.

றோர் கூறுபவாயினும் காரணகாரியவகையாலும் பொருள் வகையாலும் மாயை ஒன்று என்று கொள்வதே சித்தாந்த முடிபு.

இனி, மாயை, ஒன்றோ இரண்டோ என்ற ஆராய்ச்சியிலிறங்கி வறிதே பிணங்கி நிற்பாரைத் தெருட்டுங் கருத்தால் சிவஞானமுனிவர்[1] "அசுத்த மாயையும் சுத்த மாயையின் காரியமே யென்பாரும்,........சுத்தமாயையும் அசுத்தமாயையும் தம்முள் வேறே யென்பாரும்........சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் முதலியவற்றுள் மாயை இரண்டென வகுத்தோதி, ஏகத்தொகை கூறுங்கால் வேறென்னாது ஒன்றாகவைத்து எண்ணி, மாயா காரியமும் திரோதமும் உடன்கூட்டி, மலம் மாயை கன்மம் மாயேயம் திரோதம் என மலம் ஐந்தென்றெழிந்ததூஉம் என்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். அவற்றுட் பின்னையதே பொருத்தமுடைத்தென்பது இங்ஙனம் கூறியவாற்றான் அறிக" என்று கூறுவர்.

இனி, போகபோசயித்துரு காண்டங்கட்குக் காரணமாகிய மாயையின் இலக்கணத்தை அருணந்திசிவனார்,

> "நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர்
> வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
> சத்தியாய்ப் புவன போகம் தனுகர ணமும்உயிர்க்காய்
> வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே"[2]

என்ற இனிய திருவிருத்தத்தால் உரைத்தருளுகின்றார். இதன்கண் மாயையின் இலக்கணம் சுருங்கக்கூறப்படுவது ஒருபுறம் இருக்க, பற்பல சமயவாதிகள் மறுக்கப்படுவது

---

1. சிவஞான பாடியம் உ-ம் சூத்திரம் உ-ம் அதிகரணம் முதற் காரண முடிவு என்பதில் காண்க.

2. சிவ. சித்தி. சுபக். கசஉ.

ஒருபுறம் தோன்றி இன்பம் செய்கின்றது. புத்தருள் மாத்தியமிகர் என்பவர் ஒருசாரார். அவர்கள் உலகிற்கு மூலகாரணமாக மாயையென ஒருபொருள் உண்டெனக் கொள்வதிலர். ஈண்டு மாயையுண்டெனக் கொண்டு அதன் இலக்கணத்தை யுரைப்பாராய், "வித்துமாய் உள்ளது மாயை" எனக் கூறுதலால், அவர்கள் மறுக்கப்படுகின்றனர். எல்லாப் பொருள்களும் கணபங்கமாய் ஒன்றின் சார்பில் மற்றொன்று தோன்றும் என்று கணிகவாதிகள் கூறுவர். அவரைமறுக்குங்குறிப்புத் தோன்ற "நித்தமாய்" என்றுகூறியுள்ளார். உலகாயதர் பூதங்களே முதல் என்பர்; "அருவாய்" என்றதனால் அவர்கள் மறுக்கப்படுகின்றனர். வைசேடிகர் முதலியோர் பரமாணுவே முதலென்றும், அஃது அருவானதென்றும் கூறுவர்; அவரை மறுத்தற்கு "எங்கும் வியாபியாய்" என்பது கூறப்பட்டுள்ளது. முக்குணங்களே முதல் என்னும் சாங்கியரை மறுத்தற்கு "ஏக நிலையதாய்" என்றார்: பாற்கரியர் ஏகமாகிய பிரமமே முதல் என்றாராக, அவரை மறுத்து, "விமலனுக்கோர் சத்தியாய்" என்பாராயினர். சிவாத்துவிதிகள், இறைவனது சிற்சத்தியே முதல் என்பர். அவரை மறுத்தற்கு, அசித்தாய்" என்றார். இனி, மாயாவாதிகள், அசித்தாகியமாயை உள்ளதுமன்று இல்லதுமன்று அநிர்வசனீயம் என்பர்: அவரை மறுத்து, "வைத்ததோர் மலமாய்" என்றார். இத்தன்மைத்தாகிய மாயை, ஆணவமலம்போல மயக்கமேசெய்யும் எனச் சைவருள் ஒருசாரர் கூறுவர். அவர்களை நோக்கி, இம்மாயை மயக்கமேயன்றி விளக்கமும் செய்யும் என்பாராய், "மயக்கமும் செய்யும்" என்றார். இவ்வாறு ஒவ்வொரு சொல்லும் பொருணிறைந்து கற்பார்க்குப் பேரின்பம் சுரக்கும் வகையில் கூறிச்செல்வது இவ்வாசிரியர்க்கு இயல்பு என அறிக.

இனி, இவ்வசுத்தமாயையினின்றும் தோன்றுகிற கலையிலிருந்து மூலப்பிரகிருதியென்னும் மாயைதோன்றுகிறது. அது, சத்துவம், இராசதம், தாமதம் என முக்குணங்களாய் விரியும். அம்மூலப் பகுதியிலிருந்தே புத்தியும், புத்தியினின்று ஆங்காரமும் தோன்றும். ஆங்காரம் சத்துவ முதலிய முக்குணங்களோடு கூடிப் பூதாதியாங்காரம், வைகாரியாங்காரம், தைசதாங்காரம் என முத்திறப்பட்டு முறையே பூதங்களும், கன்மேந்திரியங்களும் மனமும் ஞானேந்திரியங்களும் தோன்றற்கு ஏதுவாகும்.

இனி, தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தானே நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காதெங்கும் என்பது இரண்டாஞ் சூத்திரச் செய்யுளின் மூன்றுங்கூறு. அஃதாவது, உயிர்கள் தாம் பல; பலவாகிய அவற்றைத் தனது ஆணையாகிய சத்தியால் அவற்றின் கன்மங்களுக்கேற்பச் செலுத்தும் தலைவனாய் நிற்பினும், இறைவன் தான் ஒன்றினும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய்ச் சிவமாய் நிற்கும் தன்மையை விளக்குவதாகும்.

பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், ஈசுரஅவிகாரவாதசைவம், நிமித்தகாரணபரிணாமவாதசைவம், சிவசமவாதசைவம் என்ற அறுவகைச் சைவசமயங்களும் இறைவனுடைய இலயம், போகம், அதிகாரம் என்ற வடிவங்களை வழிபடுவன; அவை, நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை யென்னும் ஐந்து தத்துவங்களிலும் நிலைபெறுவன. சித்தாந்த சைவர்கள் மேற்கொண்டு பரவும் பரம்பொருளாகிய பரசிவமோ, மேலே கூறப்பட்ட தத்துவம் முப்பத்தாறுக்கும் மேற்பட்டு அவற்றைக் கடந்து நிற்பது. அதுபற்றியே, பரசிவத்தைத் தத்துவாதீதப் பழம்பொருள் என்று கூறுப. இது கடவுள் எனவும் இயவுள் எனவும், இறைவன் என

வும், சிவம் எனவும் தென்னாட்டு நன்மக்களால் சிறப்பித்துக் கூறப்படுவது தத்துவங்களைக் கடந்து நிற்றலால் கடவுள் என்றும், எல்லாவற்றையும் இயக்குவதால் இயவுள் என்றும், எந்நாட்டு எவ்வுயிர்க்கண்ணும் தங்கி வினைப்பயன் களை முறை செய்தலால் இறைவன் என்றும், நிறைமலம் அநாதியே நீங்கி நிற்பதால் சிவமென்றும் சான்றோர் வழங்குவாராயினர், தென்னாடுடைய சிவனே எந்நாட்ட வர்க்கும் இறைவன் என்ற கருத்து இனிது விளங்க, மணி வாசகப் பெருமான், "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" யென்றருளியது ஈண்டு நினைவுகூரத் தகுவதாம்.

இங்ஙனம், ஒன்றிலும் தோய்வின்றி நிற்கும் இறை வன் ஆன்மாக்களை அநாதியே பற்றியுள்ள ஆணவமலத் தைப் போக்கித் தனது திருவடியிற் கூட்டிப் பேரின்பப் பெருவாழ்வையளிக்கத் திருவுள்ளங்கொள்வன். அந்நிலை யில் பரநாதம் எனவும், தொழில் செய்ய எண்ணிய நிலையில் பரவிந்து எனவும் பெயர்பெற்று, பின்னர்த் தனது வியாபகத்துள் அடங்கி நிற்கும் சுத்த மாயையோடு கூடிய நிலையில் அபரநாதமெனவும், சிறப்பாகத் தொழில்செய்ய எண்ணிய நிலையில் அபரவிந்து எனவும் பெயரடைகின்றான். இந்நான்கும் அருவநிலையெனப்படும். இனி, ஞானமும் கிரியையும் ஒத்துநின்று வியாபரிக்கின்ற நிலை சதாசிவன் எனப்படும்; இஃது அருவுருவநிலை. கிரியை மிகுதியாகவும், ஞானம் குறைந்தும் நிற்கும்நிலை மகேசனெனவும், ஞானம் மிகுந்தும் கிரியை குறைந்தும் நிற்கும் நிலை சுத்தவித்தை யெனவும் வழங்கும். சுத்தவித்தை, உருத்திரன், மால், அயன் என மூன்றாய் விரியும். மகேசன், உருத்திரன், மால், அயன் என்னும் நான்கு வடிவங்களும் உருவநிலையாகும். அருவநிலை நான்கும் அருவுருவம் ஒன்றும், உருவம் நான்

கும் ஆகிய ஒன்பது வடிவங்களாகச் சிவபரம்பொருள் நடிப்பன். இதனை நவந்தருபேதம்[1] என்றலும் வழக்கு:

இக் கூறிய ஒன்பது பேதங்களுள், பரநாத அபரநாதங் கட்குப் பரவிந்துவும் அபரவிந்துவும் சத்திகளாம். ஏனை ஏழு சிவவடிவங்கட்கும் சத்தியும், விந்துவும், மனோன்மணி யும் மகேசையும் உமையும் இலக்குமியும் வாணியும் அவ னோடு தாதான்யமாய் நெருப்பிற் சூடுபோல விட்டுநீங்காது நிற்கும் சிவசத்திகளாம். ஆகவே, சிவசத்தியும் ஏழுபேதங்க ளாக நின்று தொழில் நடாத்தும் என்பது தெளியப்படும். எத்திறம் இறைவன் நிற்கிறானோ அத்திறமே சத்தியும் நிற்கும். இறைவன் கொள்ளும் எல்லாத் திருமேனிகளும் சிவம் சத்தி யிரண்டற்கும் பொதுவடிவம். இவ்வகையில் சிவம் சத்தியைத் தோற்றுவித்தும், சத்தி சிவத்தைத் தோற்றுவித்தும், சிவம் சத்தி யிரண்டும் கூடி உலகுயிர் களைத் தோற்றுவித் தொடுக்கியும் நிற்குமாயினும், சிவன் பிரமசாரியாகவும் உமை கன்னியாகவும் பேசப்படுவர். இவ்வரிய நிலையை எண்ணுமையால் நம்மவருட் சிலர், மக்க ளிடையே காணப்பெறும ஆண் பெண் வடிவம் போன் றனவே இறைவன்மாட்டுக் காணப்படும் சிவபேத சத்தி பேதங்கள் என மயங்காநிற்பர். "தானேயாகிய ஒருவன் "வையம் புணர்வுறுபோகமூழ்கப் புருடனும் பெண்ணுமாகி மணவினை முடித்தான், அன்னான் புணர்ப்பை யார் மதிக்க வல்லார்"[2] என்றவாறு, சத்தியும் சிவமும் செய்யும் இச் செயல்களெல்லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக் காட்டும் நாடகமாத்திரையே யன்றிப் பிறிதில்லை யென்க.

இங்ஙனம், இறைவன் நவந்தரு பேதமாக நின்று, மாயா தத்துவங்களை உயிர்களோடு சேர்த்துத் தொழிற்

1. சிவ. சித்தி. சுபக். கசுச.
2. திருவிளையாடல். திருமணப்படலம். செய்யுள் 186.

படுத்துதல் இருவினைப் பயன்களை அவ்வுயிர்கள் நுகர்ந்து கழித்தற்பொருட்டும், பக்குவம் எய்தியவழி, மேலைக்கு வித்தாகாவாறு தீக்கையால் வினைகளை முதிர்வித்துப் பின் பற்றறக் கழித்தற்பொருட்டும், அவை கழியுமுகத்தால் உயிர்களோடு குணம்போல விரவிநின்று எல்லாத் தீங்கு கட்கும் மூலமான ஆணவமலத்தைப் போக்குதற் பொருட்டுமாம் என்பர்.

இதுகாறும் மாயை கன்மங்களைப் பற்றியன கூறியதனால், அவற்றோடு இயைபுடைய ஆணவமலத்தின் இயல்பும் ஈண்டுக் கூறப்படுகின்றது.

## ஆணவமலம்

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனப்படும் நால்வகைச் சமயங்களுள், அகச்சமயமாறும் சித்தாந்த சைவமும் ஒழிய ஏனைய எவற்றிற்கும் ஆணவமலம் என்பதொன்றுண்டென்பது கிடையாது. அகச்சமயமாகிய பாடாணவாதமுதல் சிவாத்துவிதம் ஈறாகவுள்ள ஆறும் சித்தாந்த சைவமும் ஆணவமலமொன்றுண்டென மேற்கொண்டொழுகுபவர். மலமுண்மையை யறியாமையால், அச்சமயத்தவர்கள், இறைவன் இலக்கணம், உயிர்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகள், ஐந்தொழில் விளக்கம், முத்தியின்தன்மை முதலியவற்றைச் சிறப்புறத் தெரிந்துணரும் திறமின்றித் தாம் தாம் வேண்டியவாறே கூறி இடர்ப்படுவர். ஆணவமலத்தின் உண்மை ஈண்டு நன்கு விளக்கப்படுகிறது.

ஆணவமலத்தின் உண்மையுணர்ந்து அதன் இயல்பை விளக்கலுற்ற அருணந்திசிவனார்,

[1]"ஒன்றதாய் அநேக சத்தி யுடையதாய் உடனாய் ஆதி
யன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை யார்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினிற்க ளிம்பேய்ந்
தென்றுமஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே"

என்று கூறுகின்றார். எண்ணிறந்த சத்திகளைக்கொண்டு, எண்ணில்லாத உயிர்களோடு செம்பின்கண் களிம்புபோல உயிர் என்றுண்டோ அன்றே தானும் அதனோடு விரவி நிற்கும் ஒருபொருளாய், உயிர்கள் கருவி கரணங்களோடு கூடாது கிடந்த நிலையிலும் அவற்றின் அறிவு செயல் விழைவுகளைச் சிறிதும் விளங்கவொட்டாது மறைப்பதாய் உயிரது சகலநிலையில் அவற்றின் அறிவு முதலிய செயல்களை மேலோங்காவண்ணம் கீழ்ப்படுத்துவதாய், எக்காலத்திலும் உயிர்கட்கு அறியாமையைச் செய்துகொண்டிருப்பதாய் உள்ளபொருளே ஆணவமலமாவது உயிர்களின் வியாபகத்தன்மை விளங்கவொட்டாது மறைத்து ஒடுக்கி அணுத்தன்மைப் படுத்துவதுபற்றி ஆணவம் எனவும், உயிர்கள் குற்றமாய்க் கிடத்தலின் மலம் எனவும் பெயர்கூறப்படும். கண்ணொளியை விளங்கவொட்டாது மறைக்கும் புறவிருளாகிய பூதவிருள்போல, (இஃது உயிர்களின் ஞானக்கண்ணை மறைக்கும் அகஇருள் என்றும் குறிக்கப்படும். இதுபற்றியே ஆசிரியர் திருவள்ளுவர் முதலாயினரால்) இஃது "இருள்"[2] என்றே எடுத்தோதப் பட்டதும், பிற்காலத்தான்றோரால் "இருள்மலம்" என வழங்கப்பட்டதுமாம்.

இம்மலத்தின் உண்மையை யுடன்படாதோருள் ஒரு சாரார், மலமென ஒன்று கிடையாது; மாயா காரியமே உயிரது அறிவை மயக்கும் எனக் கூறுவர். மாயையின் காரியமான உடல் கருவிகளுடன் கூடியபோது உயிர்கள்

1. சித்தியார் சுபக்கம், சூ. 2, செய். அ0.
2. திருக்குறள்; கடவுள் வாழ்த்து. 'இருள்சேர்'

அறிவுவிளக்கம் பெறுதலும், கூடாதபோது அறிவு மறைப்புண்டலும் உடன்பாட்டாலும் எதிர்மறை முகத்தாலும் கண்கூடாக அறியக்கிடப்பன; ஆதலால், மாயா காரியம் உயிர் அறிவை மறைக்கும் என்பது பொருந்தாது. மாயை உயிர்கட்கு விளக்குப்போல்வது என்று சான்றோர் கூறுவர். உயிர்விளக்கத்தின் பொருட்டே உடலினது சேர்க்கையுண்டானமைதோன்றவே திருமூலநாயனார், [1]"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே," எனவும், மெய்கண்ட தேவர், [2]"மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணாதேல், ஆயா தாம் ஒன்றை," எனவும் கூறியிருப்பது காண்க. இதனால் ஆணவமலம் இருள்போன்றதென்றும், மாயை ஒளிசெய்யும் விளக்குப்போல்வதென்றும் தெளிய உணரவேண்டுவனவாம்.

மற்றொருசாரார், 'உயிரின் குணமே அறியாமை என்பர். அறியாமையைக் குணமாகவுடையதொன்று சடப்பொருளாகுமேயல்லாது சித்துப்பொருளாகாது. ஆதலால், அறிவுடைப் பொருளாகிய உயிர்க்கு அறியாமையைக் குணமென்பது பொருந்தாது. கரியின் இயல்பாகிய கருமைக்குணம், கரியிருக்குங்காறும் நீங்காது; அது போல, உயிர் அறியாமையைக் குணமாகவுடையதாயின், அஃது உயிரைவிட்டு ஒருகாலும் நீங்காதெனப்பட்டு வழுவாம்.

இனி, ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களோடு மாயேயம், திரோதானம் என்னும் இரண்டையும் கூட்டி ஐம்மலங்கள் என்று கூறுவதுண்டு. அவற்றுள் மாயேயமாவது மாயையின் காரியங்களான உடல் கருவி உலகுகளைக் குறிப்பது. திரோதான மலமென்பது,

---

1. திருமந்திரம். எஉச. 2. சிவஞானபோதம் சூ. 4. அதி. ii. உதா. க.

தான் நிமித்தகாரணமாயிருந்து மலசத்திகளைத் தொழிற்படுத்தும் சிவசத்தியாகும். சிவசத்தியாயினும் மலத்தைத் தொழிற்படுத்துவது பற்றி மலமென உபசரிக்கப்படுகிறது.

மேலே கூறிய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்ற மலங்கள் ஐந்தாலும், உயிர்கள் கொள்ளி வட்டமும் கறங்கும் (காற்றாடி) போல, முன்பு கூறியவாறு பிறப்பிறப்புக்களையடைந்து, நிலத்திலும் துறக்கத்திலும் நிரயத்திலும் சென்று சுழன்றுகொண்டிருக்கும். இச் சுழற்சியை நீக்கும் உபாயம் இனிக் கூறப்படுகின்றது.

முட்டையும் வியர்வையும் வித்தும் கருப்பையுமாக எண்ணப்படும் நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்துநான்கு நூறுயிரயோனி பேதங்களினின்றும் விரிந்த பேதங்கள் அளவின்றியேயுள்ளன. அவற்றுள் மக்கட் பிறப்பே சிறந்ததென்பது எந்நாட்டு எத்திறத்தறிஞர்க்கும் ஒப்பமுடிந்த உண்மை. மக்கட்பிறப்பினும் உயர்சமயம் நிலவும் உயர்ந்த நாட்டில் பிறக்கும் பிறப்பு மாண்புடையதாகும். அந்நாட்டிலும், அங்கு வாழும் மக்களினத்தில் உயர்சாதி உயர்குடிப்பிறப்பே பிறவிச் சுழற்சியின் நீங்குதற்குரிய முதல்வாயிலாம். அவ் வாயிலைத் தலைப்படினும், சைவநெறி கண்டு சித்தாந்தச் செந்நெறியுணர்ந்து சிவபரம்பொருளை வழிபடப் பெறுவது கூடுமாயின், பிறவிச் சூழலின் நீங்குதற்கு அதுவே தீதில்லாத திப்பிய வாயிலாம் என்பர்.

இனி, மக்களுள்ளே, கல்வி, செல்வம், குடிப்பிறப்பு, அரசியலதிகாரம் முதலியவற்றால் மேன்மையுற்ற வழி, அவை விளைக்கும் இன்பத்துக் கிரையாகி மையலுற்று மாழ்குவது பெருவழக்காகும். சைவவாழ்வால் வீடுபெற விழைவோர் முதற்கண் சாதி, குலம், கல்வி, செல்வம்

முதலியன விளைவிக்கும் மகிழ்ச்சியால் மையலுறுதல் கூடாது. யாக்கை இளமை முதலியவற்றின் நிலையாமை நன்குணர்வானாயின், ஒருவன் எந்நிலையில் இருப்பினும் வாழ்வெனும் மையலுக்கு இரையாகாது மேம்படுதல் எளிதாம்.

இனி, போக நுகர்ச்சிக்கு எளியனாய் மையலுறுவோன் நுகர்ச்சிக்குரிய கருவிகளாகிய புலன்களின் குறைபாட்டை உணரமாட்டானவன். புலன்கள் ஐந்தனுள், ஒன்று நுகரும்போது ஏனை நான்கும் செயலற்றுப் போகின்றன. ஒன்றால் நுகருமிடத்தும் அந்நுகர்ச்சி இடையறவுபடாது மேன்மேலும் பெருகி இன்பம் செய்தல் இல்லை. தேன் கலந்த பாலாயினும் சிறிது மிக்கவழி, அதனை நுகரும் நா, அதனையே தொடர்ந்து நுகரும் மதுகையிழந்து ஒடுங்கிவிடுகிறது. இவ்வாற்றால் போகம் வேண்டி மையலுறுவோர் அதனை நுகரும் பொறி புலன்களின் குறைபாட்டினைத் தெளிந்துணர்வாராயின், வாழ்வெனும் மையலின்றி வாழ்தல் கூடும்.

இனி, வறுமையுடையார் சிலர், தம் வறுமையை நிரப்புவதையே நினைந்து, அதற்கு ஏற்பனவும் ஏலாதனவுமாகிய எண்ணங்களால் நெஞ்சு புண்ணுற்றுச் சிறுமையெய்துவர். வறுமையை நிரப்பக்கருதும் பொருளது நிலையாமையுணர்ந்து, நிலைத்த திருவாகிய அருளை நல்கும் இறைவன் திருவடியைப் பரவும் செயலை மேற்கொண்டு அன்பர்பணி செய்தற்குத் தம்மை ஆளாக்கிக் கொள்வராயின், ஐவகை மலங்களால் உண்டாகும் அலமரலின்றி உய்திபெறுவர்.

---

## மூன்றாஞ் சூத்திரம்

முதற் சூத்திரத்தால் பதியாகிய பரம்பொருள் உண்டென்பதும், இரண்டாஞ் சூத்திரத்தால் பாசப்பொருள்கள் உளவென்பதும் அளவைகளால் வற்புறுத்திய ஆசிரியர், மூன்றாஞ் சூத்திரமாகிய இதனால் பசுவாகிய ஆன்மா உண்டென்பதை அளவை முகத்தால் நிறுவுகின்றார். பசுவென்னும் சொல் கட்டப்படுவது என்னும் பொருள் தரும் சொல்லாகும். கட்டு, பாசமெனப்படுமாதலால், பாசத்தாற் கட்டப்படுவது பசுவாயிற்று. உயிர்கள் இங்ஙனம் பாசத்தாற் கட்டுண்டலின் பசுவெனப்படும்; ஆன்மாவென்பது, உபநிடதங்களும் ஆகமங்களும் உயிர்கட்கு வழங்கும் பெயர்.

"உயிரெனப் படுவ திந்த
உடலின்வே றுளதாய் உற்றுச்
செயிருறும் இச்சா ஞானச்
செய்திகள் உடைய தாகிப்
பயில்வுறும் இன்பத் துன்பப்
பலன்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்ச வத்தைப்
படும்உண்மை துரியா தீதம்"

என்பது மூன்றாஞ் சூத்திரச் செய்யுள். உடலின்கண்ணுள்ள ஒவ்வோர் உறுப்பிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. அவ்வாறு உறுப்புக்களைப் பகுத்துக் கண்டு பெயர் காட்டிச் செல்லுங்கால், உயிரென ஓர் உறுப்புக் காணப்படவில்லை. ஆகவே, உயிரென்றொரு பொருள் உடலின்கண்ணுளது என்றற் கிடமில்லை; ஆதலால் உயிரென்பதொன்று கிடையாது எனச் சூனியான்மவாதிகள் கூறுவர். உடலின்கண்ணுள்ள பொருட் கூறு ஒவ்வொன்றனையும் பகுத்துக் கண்டு இஃது உயிரன்று, இஃது உயிரன்று எனத் தேர்ந்துரைக்கும் அறிவொன்று உடலின்கண் இருப்பது தேற்றம். அந்த அறிவே உயிரெனப்படுவ

தென்றும், அது மிக மிக நுண்ணியதொரு பொருளென்றும் அவர் அறிவதிலர்.

இனி, உடலையே உயிரென்பர் சிலர். உடம்பை யான் என்றும் எனதென்றும் சுட்டியும் காட்டியும் நிற்பதொரு பொருளுண்மையின்; அதுவே உயிராதல் அமையும். இதனால் தேகமே ஆன்மா என்னும் தேகான்ம வாதிகள் மறுக்கப்படுகின்றனர். இவ்வாறே இந்திரியான்மவாதிகள் என்பார் சிலர் உளர். அவர்கள் கண் முதலிய இந்திரியங்களே அறிவுநிகழ்ச்சிக்குக் காரணமாயிருத்தலான் அவைகளையே உயிர் என்பர். கண்ணாற் கண்டேன், காதாற் கேட்டேன் என்று வழங்கி வரும் வழக்குக்களே, அவ்வப் பொறிகளைக் கருவிகளாகக் கொண்டுணரும் முதற் பொருள் ஒன்று வேறேயுளதெனக் காட்டுவது கொண்டே அவர்கள் கொள்கை மறுக்கப்படுகிறது. இப்பொறிகள் தம்முள் ஒன்றையொன்று அறியமாட்டா வாதலின் அவற்றை அறிவுடைய உயிரெனக் கூறல் குற்றமாம். அன்றியும் ஐம்பொறி மாட்டும் ஞானமொன்றே காணப்படுகிறதேயன்றி வேறு இச்சையும் கிரியையும் (விழைவும் செயலும்) இல்லையாதலால், இவற்றின் வேறாக, ஞானமும் விழைவும் செயலுமுடைய உயிரென்பதொன்று உளதென்பது தெற்றென உணரவேண்டுவதொன்று.

இவ்வண்ணமே, சூக்கும உடம்பையே உயிரென்பாரும், பிராண வாயுவையே உயிரென்பாரும், பிரமத்தையே உயிரென்பாரும் மேற்கூறிய அனைத்தும் கூடிய சமுதாயமேஉயிரென்பாரும் எனப் பல திறத்தர் உண்டு. அவர் அனைவர் கருத்துக்களும் இச் சூத்திரத்தால் மறுக்கப்படுகின்றன. அதுவே வாயிலாக உயிருண்மை நன்கு வற்புறுத்தப் பெறுகின்றது.

**பிரமாண இயல் முடிந்தது**

## இலக்கணவியல்

முதன் மூன்று சூத்திரங்களால் பதி, பாசம், பசு என்ற முப்பொருளும் உண்மைக்கு அளவை (பிரமாணம்) கூறிய ஆசிரியர், இனி, முறையே, உளவெனப் போந்த அப்பொருள்கட்கு இலக்கணம் கூறுகின்றார். அதனால் இவ்வியலும் இலக்கணவியல் என்று பெயர் பெறுவதாயிற்று.

---

### நான்காஞ் சூத்திரம்

இவ்வியலின் முதலில் நிற்கும் நான்காஞ் சூத்திரம், பிரமாண இயலின் இறுதிக்கண் நிறுவப்பெற்ற பசுப் பொருளாகிய ஆன்மாவுக்கு இலக்கணம் கூறுகின்றது. பதி பாச பசுவெனப் பிரமாணவியல் முறைசெய்து கொண்டதாக, இலக்கணவியல் பசு பாச பதி யென எதிர் நிரல் நிறையாக நிறுத்தமுறை செய்துகொண்டுளது.

உணர்வன கரணமென்னின்
　　ஒன்றையொன் றுணரா வெவ்வே
றணைதரும் செயல்க ளான்கும்
　　அறிந்தவை யடக்கி யாக்கிப்
புணருமுட் கருவி யாக்கிப்
　　புறக்கரு வியினும் போக்கி
இணைதரும் இவற்றின் வேறாய்
　　யான்என தென்ப தான்மா

என்பது, நான்காஞ் சூத்திரத்து முதற் செய்யுள். இதன் பொருள், அந்தக்கரணமே உயிர் என்பார்க்கு இவையும் ஐம்பொறிகள்போல் ஒன்றனையொன்று உணராவாகலின், உயிர் இவற்றின் வேறென்பதும், அங்ஙனமாயினும் உயிர் ஆணவமலத்தோடு கூடி நிற்றலால், தனக்கென

அறிவின்றி அந்தக்கரணங்களால் நிகழும் நான்கு தொழில் களையும் அக்கரணங்களோடு கூடியறிந்து அவற்றைஅடக்க வேண்டுமிடத்து அடக்கி உட்கருவியாக்கியும், ஆக்க வேண்டுங்கால் புறத்தே மேற்படுத்திப் புறக்கருவியாய் உய்த்தும் வெவ்வேறு அவத்தைகளை அணையும், என் பதாம்.

ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தன்மையொன்று உண்டு. அத்தன்மையே அதற்கு இலக்கணம் எனப்படும். இலக்கணம் இயல்பு எனப்படுவதும் உண்டு. இத்தன்மை யும் தனித்த நிலையில் சிறப்புத்தன்மையென்றும் வேறு பொருளின் சார்பால் உளதாகும் தன்மை பொதுத்தன்மை யென்றும் விளங்கும். இச் சிறப்புத் தன்மை சொரூபவிலக் கணம்எனவும் பொதுத்தன்மை தடத்தவிலக்கணம் எனவும் அறிவுநூலார் வழங்குவர். ஈண்டு ஆன்மா ஆணவமலச் சேர்க்கையால் அறிவும் செயலும் விழைவும் மழுங்கிக் கிடத் தலால், அவற்றை விளக்குதற்பொருட்டு இறைவனால் ஆன் மாக்களுக்கு மாயா காரியமான கருவி கரணங்கள் கூட்டப் படுகின்றன. இவற்றோடு கூடியவழி, ஆன்மாவின் அறிவு விழைவு செயல் என்பன விளங்குகின்றன. இக்கருவி கரணங்களினின்றும் பிரியுமாயின், அறிவு முதலாயின விளங்கலுறா. உடலுக்குள் இயங்கும் உயிர், ஆண்டுள்ள கருவி கரணங்களோடு கூடலும் கூடாது நீங்கலும் ஆகிய இருவகையாக இயங்குகிறது. அவ்வியக்க நிலை அவத்தை எனப்படும். இவ்வுடல், தூலம், சூக்குமம், குணம், கஞ்சுகம், காரணம் என்று ஐவகைப்படும். குணவுடம்பு என்றது புரியட்டகவுடம்பாகும். கஞ்சுகமென்றது. வித்தியாதத்து வங்கள் ஏழனுள் காலம், நியதி என்ற இரண்டையும் ஒழித்து ஒழிந்த ஐந்தனோடுங் கூடியது. இவ்வைந்தனையும் பஞ்சகஞ்சுகம் என்றலும் வழக்கு. இவற்றாலாகிய நுண்

னுடம்பு கஞ்சுகவுடம்பு என்று பெயர் பெறும். ஆன்மா மலமுந் தானுமாய்ப் புருடதத்துவம் இடமாகக் கொண்டு நிற்கும் இறுதிநிலை காரணவுடம்பாகும். தூல முதல் காரண மீறுகக்கூறிய உடம்பைந்தும் ஒன்றினுள் ஒன்று சூக்கும மாய் இருக்கும். இவற்றுள் மிக மிக நுண்ணிதாவது காரணவுடம்பெனக் கொள்க. தூலவுடம்பினின்றும் ஒவ் வொன்ருய் இறங்கி ஆன்மா காரணவுடம்புக்குச் செல்லும் நிலை கீழாலவத்தை யெனவும், காரணவுடம்பினின்றும் தூலவுடம்புக்குப் படிப்படியாக மேனேக்கி வரும் நிலை மேலாலவத்தை யெனவும் வழங்கும். தூலவுடம்போடு கூடிநிற்கும்நிலை சாக்கிரம் என்றும், சூக்குமத்தோடு கூடுவது சொப்பனம் என்றும், குணத்தோடு கூடுவது சுழுத்தி யென்றும், கஞ்சுகத்தோடு கூடுவது துரிய மென்றும், காரணத்தோடு நிற்பது அதீதமென்றும் கூறுவர். இவ்வுடம்புகளோடு ஐவகை அவத்தைகளையும் எய்துவது ஆன்மாவுக்குப் பொதுவியல்பாதலால், இவ் வவத்தையியல்பு ஆன்மாவுக்குத் தடத்தஇலக்கணம் எனப்படும்.

இச் சூத்திரம் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பெற்று ஆராயப்படுகின்றது. மூன்ரும் சூத்திரமும் இதுபோல, மூன்று கூறுபடுவதாயினும், அதன் முதற்கூறுபோல இந் நான்காஞ் சூத்திரமும் அந்தக்கரணுன்மவாதிகளை மறுத்து உயிருண்மை வற்புறுக்குஞ்செயலை மேற்கொண்டிருத்த லின், அதன்கூருகிய அவத்தைப்படும் இயல்பு முதலியன ஈண்டு விளக்கப்படுகின்றன. அதனுல் அக்கூறுகள் மூன்ருஞ் சூத்திரத்தின் வைத்து ஆராயப்படவில்லை.

இச்சூத்திரத்து முதற்கூற்றின்கண், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கினையும், ஆன்மா ஒரு விடயத்தை யறிதற்கு உட்கருவிகளாகக்கொண்டு அவற்

ரேடு வேற்றுமையின்றிச் சேர்ந்து நிற்கும். நிற்குங்கால், உட்கருவிகளாகிய இவை, கண்ணுக்கு விளக்குப்போல, உயிர்க்குக் கருவியாய் நிற்பனவாம். இவற்றைக் கருவி யென வோர்ந்து, இவற்றைத் துணைகொண்டு அறியும் கருத்தாவாகிய தனது உண்மைநிலை யாது என ஆராயப் புகின், ஆன்மசொரூபம் இனிது விளங்காநிற்கும். என்பது கூறப்படுகிறது. இங்ஙனம் ஆராயும் அறிவு பசுஞானம்எனப்படும். இதற்கு மேற்பட்டு விளங்குவது பதிஞானமாகிய சிவஞானம்.

இனி, மேற்கூறிய அகங்காரம், மனம், புத்தி, சித்தம், கலையாதி தத்துவங்களாகிய உள்ளந்தக்கரணம் என்ற இவற்றேடுகூடி ஒன்றை யறிதற்கும் செய்தற்கும் பொது மையில் ஆற்றல் பெற்றுள்ள உயிர், இவ்வைந்துக்கும் கருவியாவது, முறையே, அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்னும் பிரணவ வடிவாயுள்ள ஐந்தெழுத்துக் களுமாம். இவற்றல், கடலின்கண் அலைபோல மாறி மாறி, அறிவு தோன்றியும் ஒடுங்கியும் வரும். மேலே கூறப்பட்ட ஐந்தெழுத்துக்களையும் முறையே, அயன், அரி, அரன், மகேசுரர், சதாசிவம் என்னும் கடவுளர் ஐவரும் ஆதி தெய்வங்களாக இருந்து செலுத்துவர் என்பர். மேலும், கருவிகள், எழுத்துக்கள், அதிதெய்வங்கள் என்னும் முத் திறத்துச் சுத்த தத்துவம் ஐந்தனேடும் ஆன்மா கூடிய வழியே அறிவு விளங்கும் என்றும், கூடாதவழி விளங்கா தென்றும், இந்நுட்பம் யோக சமாதியாற்றுன் விளங்கு மென்றும் ஆன்றேர் கூறுவர்.

இனி, உடல், பொறி, கரணம், அக்கரம் முதலிய எல்லாம் கூடிய நிலையே ஆன்மா எனச் சமுதாய வான்ம வாதிகள் கூறுவர். சமுதாயம் (கூட்டம்) என்ற பொருள் இல்லை யென்பதும், கூடுவனவாகிய பொருள் பலவு

வேறு வேறு அறியப்பட்டு நிற்கும் என்பதும், அறிவ தாகிய ஆன்மாவும், அறியப்படுவனவாகிய உடல் பொறி கரண முதலியனவும் ஒன்றுதல் செல்லாதென்பதும், எனவே, இவற்றிற்கெல்லாம் வேறாய் ஆன்மா உளதென்று பெறப்படுதலால், அவர் கூற்றுப் பொருந்தாதொழிவதும் தெளிவாம்.

இனி, இரண்டாங்கூற்றின்கண் இருபத்தாறு திரு விருத்தங்களால் ஆன்ம விலக்கணம் விரிவாக ஆராயப் பெற்றுளது.

இனி, பிரமமே ஆன்மாவாகப் பரிணமித்துப் பேதா பேதமாக நிற்கும் என்பர் பரிணாமவாதிகள்; குணமும் குணத்தையுடைய பொருளாகிய குணியுமாதலின்றிக் கேவலம் அறிவு மாத்திரையாய் நிற்றலே உயிரது இயல் பென்றும், அவ்வுயிரின் சந்நிதியில் உடம்பின்கண்ணுள்ள கருவிகள் தொழிற்படும் என்பர் சாங்கியர்; உயிரை உருவப் பொருள் என்பர் பௌராணிகர்; பாதஞ்சலர் உயிரை அருவுரு என்பர். உயிர் தன்னியல்பில் அறிவில் பொருள்; ஆயினும் அது மனத்தோடு கூடியவழி அறிவுடைப்பொரு ளாம் என்பர் வைசேடிகர். சைவரில் ஒருசாரார், உயிர் அறிவுடைப் பொருளாகவும், அறிவில் பொருளாகவும் உள்ளதென்பர். உயிரை அறிவுடைப் பொருளென்றே கொள்வர் பட்டாசாரியர். உயிர் அணுவடிவிற்றென்றும் உடம்பின்கண் ஏகதேசமாய் இதயத்தானத்தில் இருக்கு மென்றும் மிருதிநூலார் கூறுவர். உயிர் உடம்பளவாய் அதன்கட் பரவி நிற்குமென்பர் சமணர். உயிர் முதல்வன் போல் எங்கும் வியாபியாய் நிற்கும் என்பர் ஐக்கியவாத சைவர். இவரனைவரும் தக்க பிரமாணங்களால் இக்கூற்றின் கண் மறுக்கப்படுகின்றனர். அம் மறுப்புக்கள் ஈண்டு விரி வஞ்சி விடுக்கப்பட்டன.

இவ்வாற்றல் சைவசித்தாந்தம் கூறும் ஆன்ம விலக்கணத்தை,

"அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய ளுகி
நசித்திடா ஞானச் செய்தி யனுதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய ளுகிப் பசுவென நிற்கும் ஆன்மா"[1]

என்று ஆசிரியர் கூறுகின்றார். ஒருவாற்றாலும் அசித்தாதலில்லாத இறைவனைப்போலவே ஆன்மா ஔபச்சிலேடிக வியாபகமாதலும்,அதுபற்றி அஃது,அதிசூக்குமசித்தாதலுமில்லை. மேலும், எந்த எந்தப் பொருளைச் சேர்ந்ததோ அந்த அந்தப் பொருள்களின் வண்ணத்தைப்பற்றி நிற்கும் படிகம்போல், சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் வியாபகம் ஆன்மாவுக்குண்டு. பசுத்துவ மெனப்படும் ஆணவமலத்தால் அநாதியே மறைப்புண்டு கிடப்பதும், அறிவு விழைவு தொழில்களையுடையதும் தூல சித்தாதலும் உடையது பசுவெனப்படும் ஆன்மா என்பது இச் செய்யுளின் பொருளாகும்.

ஔபச்சிலேடிகம் என்பது இரட்டைச் சிலேடையாகும். அஃதாவது ஒரு சொற்றொடரின்கண் இரு பொருள் அடங்கியிருக்கும் சிலேடைவகை. ஆறுமுடிக்குமரன் என்னும் சொற்றொடர், ஆறு முடிக்கும் அரன் எனச் சிவபெருமானுக்கும், ஆறுமுடிக்குமரன் என முருகப்பெருமானுக்கும் சிலேடையாக அமையும். இவ்வாறே எல்லாப்பொருள்களினுள்ளும் இறைவன் கலந்திருப்பன். "கீழுளும் மேலுளும் யாவுளும்....எள்ளுமெண்ணெயும் போனின்ற எந்தையே"[2] என வரும் திருவாக்கு இறைவனது முழுவியாபகத்தையும் விளக்கி நிற்பது காண்க. ஆன்மாவின் வியாபகம் அவ்வாறன்றிக் கண்ணேடு சேர்ந்த

1. சிவ. சித்தி. சுபக். 210. 2. திருவாச. திருச்சத. 46.

வழிக் கண்ணளவாயும், காதோடு சேர்ந்தவழிக் காதள வாயும், இவ்வாறு எவ்வெப்பொறிகளோடு கலக்கின்றதோ அவ்வப்பொறிகளின் அளவே அறிவுவிளங்கி நிற்பதாகும். இதனை அநுபவத்தாலும் நன்கு அறிகின்றோம். இது பற்றியே ஆன்மவியாபகம் கூறலுற்ற ஆசிரியர், "வசித்திட வரும் வியாபி" என்று கூறுவாராயினர். சார்ந்த பொருளின் தன்மையையே தானும் பெறுவதாகச் சமைந் திருப்பது ஆன்மா; இதனை, [1]"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க், கினத்தியல்ப தாகும் அறிவு" என்த் திருவள்ளுவர் விளக்குவது காண்க. இதனால் சார்ந்ததன் வண்ணமாதலே ஆன்மாவின் இலக்கணமென்பது தெற் றெனத் தெளியப்படுகிறது.

இனி, நூல்கள் இறைவனைச் சூக்கும சித்தெனவும், ஆன்மாவைத் தூல சித்தெனவும் கூறுவதுண்டு. விளக் கொளியும் கண்ணொளியும் ஒளி வகையில் ஒன்றே யாயினும், விளக்கொளி புறவிருளால் மறைக்கப்படாமை யும், கண்ணொளி மறைக்கப்படுதலும் உடைமையால், கண்ணொளி தூலவொளியென்றும், விளக்கொளி சூக்கும வொளியென்றும் கொள்ளப்படும். அதுபோலவே, சிவனும் சீவனும் சித்துப் பொருளேயாயினும், ஆணவமல மாகிய அகவிருளால் சிவனுடைய அறிவு விழைவு செயல்கள் மறைக்கப்படுவதில்லை; சீவனுடைய அறிவு விழைவு செயல்கள் மறைக்கப்படுகின்றன. படவே, மறைக்கப்படும் சித்தாகிய ஆன்மா, தூல சித்தென்றும், மறைக்கப்படாத சித்தாகிய சிவன் சூக்கும சித்தென்றும் நூல்கள் கூறுவ வாயின.

இனி, உயிரோடு அநாதியே கூடிய ஆணவமலத்தைப் போக்கி உயிரின் அறிவு, விழைவு, செயல்களை விளக்குதற்

1. திருக்குறள். 452.

பொருட்டு, மாயையினின்றும் காரணம், கஞ்சுகம், குணம், சூக்குமம், தூலம் என்னும் ஐவகை யுடல்களைப்படைத்து, இறைவன் உயிர்களோடு கூட்டுகின்றான் என்பதும், கூட்டப்பெற்ற உயிர்கள் அவற்றோடே கலந்து முறையே அறிவு முதலாயின விளங்கப்பெறுகின்றன என்பதும், உயிர்கள் அவ்வுடல்களோடு கலந்தவழிச் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையால் அவ்வுடல்களேயே தான் என மயங்கி நிற்கும் என்பதும், பகுத்தறியும் அறிவுநலம் உடையார்க்கு உடல் வேறு உயிர் வேறென்று புலப்படு மென்பதும் பிறவும் இக்கூற்றின்கண் விளக்கப்பெற்றிருக் கின்றன.

இனி, மூன்றும் கூற்றின்கண், உயிரானது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளை யடையுமென்பதும், அடையுந்திறனும், அவத்தைகளின் தன்மையும், அவற்றில் தொழிற்படும் கருவிகளும் பிறவும் கூறப்படுகின்றன. இக்காரியவவத்தை களுக்கு மூலமாகவுள்ள காரணவவத்தைகளாகிய கேவல சகல சுத்தங்களின் இயல்புகளும் இக்கூற்றின்கண்ணே விளக்கப்படுகின்றன.

இவ்வாறு, உயிர்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்து முடிபுகட்டிய நூல் வேறெம்மொழியிலும் இல்லை யென அறிந்தோர் கூறுகின்றனர். உயிர்களாகிய தம் மியல்பை அறியாது கிடக்கின்ற மக்கள், இந்நான்காம் சூத்திரத்தை யேனும் நன்கு ஆராய்ந்து தமது இயல்பையறிந்து கொள்ளுதல் நன்றெனச் சைவசித்தாந்த நெறி நிற்கும் சான்றோர் பெருவிழைவு கொள்வது இயல்பு.

## ஐந்தாஞ் சூத்திரம்

முன்பு நான்காஞ் சூத்திரத்தாற் பசுவிலக்கணம் கூறினாராகலின், இச் சூத்திரத்தால் பாசத்தின் இலக்கணம் கூறலுறுகின்றார்.

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனை லறிந்தான் மாவை
அறிதரா வவையே போல ஆன்மாக்க ளனைத்து மெங்கும்
செறிதருஞ் சிவன் றனாலே அறிந்திடுஞ் சிவனைக் காணு
அறிதரும் சிவனே யெல்லாம் அறிந்தறி வித்து நிற்பன்

என்பது ஐந்தாஞ் சூத்திரத்து முதற்செய்யுள். இதன் பொருளாவது, ஐம்பொறியும் அந்தக்கரணமுமாகிய கருவிகள் தத்தம் விடயங்களை இஃது இன்னதென அளவிட்டறிந்தும் அறிகின்ற தம்மையும், தம்மை யதிட்டித்துநின்று செலுத்தும் அப்புருடனையும் அறியமாட்டா; அவை போலவே, எவ்விடத்தும் வியாபகமுடைய முதல்வனது சிற்சத்தியால் தம்மையும் தம்மைச் செலுத்திநிற்கும் திருவருளையும் அறியமாட்டாத ஆன்மாக்களெல்லாம் உண்மை யுணர்த்தக் கடவோனாகிய சிவபெருமானே முழுதும் அறிந்தும் அறிவித்தும் உடனாய்நிற்பன் என்பதாம்.

பாச இலக்கணம் கூறவந்தாராகலின், அவ்விலக்கணங்களைப் பாசத்தோடு கூடிய பெத்தநிலையில் உடனின்று அதனைச் செலுத்துவதாகிய மலமென்று உபசரிக்கப்படும் திரோதானசத்தியின் இயல்பின்வைத்து இங்கே கூறுகின்றார்.

இச்சூத்திரம் இரண்டு கூறுபடும். ஆயினும், முதற் கூற்றுப் பொருள்களும் இரண்டாங் கூற்றின் உள்ளடங்க வைத்தே விளக்கப்படுகின்றன.

இறைவன் உயிர்களோடு கலந்துநின்று அவற்றிற்கு அறிவை விளக்குவானாயின், எல்லாவுயிர்களும் ஒரே தன்மை

யான அறிவுடையனவாயிருத்தல்வேண்டும்; அங்ஙன மின்றி உயிர்கட்கு அறிவு ஏற்றத்தாழ்வாகவே இருப்பது காணப்படுகிறது; இதற்குக் காரணமென்னையென்று வினவுவார்க்கு "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்"[1] என்றபடி அவ்வவ்வுயிர்களின் கன்மவேறுபாடே காரணம் என்று கூறுதல் வேண்டும். இந்நிலையில் கன்மமே அமையும், இறைவன் எற்றுக்கென ஆருகதர் மீமாஞ்சகர் முதலாயினோர் கூறுவர். இறைவன் உயிர்கட்கு அறிவித்தாலன்றி உயிர்கள் ஒன்றனையும் அறியமாட்டா எனப் பாரிசேடவளவையின்வைத்து அவர்களது தடையை விடுக்கின்றார். தாமரைமலர் விரிதற்கு அதன் முதலாகிய தாமரையேயன்றிச் சூரியனும், உழவு, பயன் விளைத்தற்கு அத்தொழிலும் விளைநிலனுமன்றி உழவனும் காரணமாதல் கண்கூடு. அங்ஙனமே, கன்மம் பக்குவமாதற்கும் பயன்தருதற்கும் நிமித்தகாரணனாகிய இறைவன் இன்றியமையானவனென்பது நன்கு வலியுறுத்தப்படுகிறது.

ஐம்பொறி அந்தக்கரண முதலியவற்றோடு கூடினாலன்றி ஆன்மாக்கட்குச் சிறிதும் அறிவு நிகழ்வதில்லையென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததொன்று. அன்றியும், அறிந்தவற்றை மறத்தலும் மீள அறிவிக்க அறிதலும், அறிந்த தன்னையுமே அறியாதிருத்தலும் உயிர்கள்பால் காணப்படும் அறிவுக்குறைபாடுகளாகும். ஆதலாற்றான், உயிர் தானேயறியும் தன்மையுடையதன்றென்பது தெளிய விளங்குகிறது.

இனி, மாயையின் காரியங்களான ஆன்மதத்துவங்களும் கலை முதலிய வித்தியாதத்துவங்களுமாகிய இவையே உயிர்களின் அறிவை விளக்குதற்கு அமையுமே; இறைவன்

---

1. திருக்குறள். 373.

எற்றுக்கு என்றொரு தடை ஈண்டு எழுகிறது. மேலே கூறிய மாயாகாரியமான மாயேயங்கள் சடமென்பது நன்கறிந்ததொன்று; சடமாகிய அவை அவ்வத்தொழிற்கேற்ற கருவியாதற்குத் தாமே இயன்று அமையமாட்டா; ஆகவே, அவை அறிவையறிந்து உயிர்கட்கு அறிவிக்கும் என்பது அசம்பவம் என்னும் குற்றமாம்.

உயிர்கள் சேதனமாதலால், இவ்வுயிர்களே அவற்றைத் தமக்கேற்ற கருவிகளாக அமைத்துக்கொள்ளுமே யெனின், அக்கருவிகளோடுகூடாது ஆணவத்தோடு பிரிவறக்கலந்து கிடந்த கேவலநிலையில், கண்ணிலாக்குழவி போல் ஆன்மா கிடக்குமென்பாராய், [1]"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற், கட்டுண்டு" கிடந்ததெனத் தாயுமானர் முதலிய பிற்காலச் சான்றோரும் தெரிவித்துள்ளனர். அந்நிலையில் உயிர்கள் தாமேதமக்குவேண்டும் அறிவுக்கருவிகளை யாக்கிக்கொள்வதென்பது இயலாது. எங்ஙனம், அறிவுடையோனொருவன் ஒரு கடிகாரத்திற்கு வேண்டும் கருவி பலவற்றையும் தனது அறிவுவன்மையால் அறிந்து செய்து அவற்றை யேற்றமுறையில் இணைத்து இனிது தொழிற்படும்வண்ணம் செய்கின்றானோ, அங்ஙனமே, பேரறிவும் பெருங் கருணையுமுடையோனாகிய இறைவன், ஆணவமலத்தால் மறைப்புண்டுகிடக்கும் உயிரின் மறைப்பு நீங்க, அதன் அறிவுசெயல்களைப் படிமுறையில் விளக்குதற்கும், ஆன்ம தத்துவம் இருபத்து நான்கையும் ஏனைய தாத்துவிகங்களையும், கலை முதலாய வித்தியாதத்துவங்களையும் இவை கூடிய உடம்பையும், அளவைகளையும், அறிவைவிளக்குவன வாகிய சூக்குமை முதலிய வாக்குகளையும் படைத்து, அவை உயிர்களோடு பொருந்தியவழி அறிவு விளங்கு

1. தாயு : சின்மய - 6.

தலும், பொருந்தாவழி விளங்காமையும் அமைத்திருக்கும் திருவருள் ஒட்பம் காட்டி, இறைவனே உயிர்கட்கு அறிவறிவாய் நின்று அறிவு வழங்குகின்றான் என்பதனை வற்புறுத்தி இப்பகுதி விளக்கப்படுகிறது.

இங்ஙனம், அறிவறிவாய்நின்று அறிவிக்கும் இறைவனுக்கும் மேலே கூறப்பட்ட கருவி கரணங்கள் வேண்டுமன்றோ எனின், இறைவன் உயிர்போலத் தூலசித்தாகாது சூக்குமசித்தாதலால் அவற்கு இக்கருவி கரணங்கள் வேண்டாவாம். மேலும் அவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன், முழுத்த ஞானமே தன் வடிவாக விளங்குபவன். கண்ணொளியானது, ஏனை விளக்கொளி ஞாயிற்றொளி முதலியவற்றின் துணைகொண்டு விளங்குவது: அவ் விளக்கொளி சூரியவொளிகள் பிறவொளியின் துணையின்றித் தாமே விளங்குவன. உயிரறிவு கண்ணொளி போல்வது; இறையறிவு ஞாயிற்றொளிபோல்வது என்பது தெளிய உணர்ந்தவழி, இந்த ஆசங்கைக்குச் சிறிதும் இடமே இராதென அறிதல்வேண்டும்.

இனி, காலாக்கினி ருத்திர புவன முதலாக அநாசிருதையீறாகப் புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு உண்டெனவும், அவ்வவற்றிற்கும் புவனபதிகள் உண்டெனவும் சிவாகமங்கள் கூறுகின்றன. அவற்றைத் திருமேனியாகவும், எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதங்களை உறுப்பாகவும், அறிவுசெயல் விழைவென்பன உட்கரணங்களாகவும் கொண்டு, இறைவன் எண்ணிறந்த உயிர்களிடத்தே அறிவுக்கறிவாய் நின்று உணர்த்துவது அதிசூக்கும ஐந்தொழில் எனப்படும். இதனை இறைவன் செய்தருளுகின்றான் என்பர். இத்தொழிலைச் செய்வதால், இறைவற்கு ஒருபயனும் இல்லையெனினும், அவ்வாறு கொடுத்துக்காட்டி அளிப்பதாகிய அருட்செயல் இறை

வனுக்கு இயற்கைக்குணம் என்று பாராட்டிக் கூறப்படும். இதுவும் சத்தியாகலான், அவ்வருட் சத்தியாகிய குணத்துடன் விட்டுநீங்காது விளங்கும் குணிப்பொருளாகிய சிவபெருமான் அவ்வருட்குணம் பற்றி ஐந்தொழில் செய்கின்றான் எனத் தெளிதல்வேண்டும். இவ்வுண்மையினை,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே"[1]

என வரும் திருவாக்கால் தெளிந்து கொள்க.

---

## ஆறுஞ் சூத்திரம்

இலக்கணவியலின் முதலிரண்டு பகுதிகளாகிய நான்கு ஐந்தாஞ் சூத்திரங்களால் முறையே பாச விலக்கணமும் பசு விலக்கணமும் கூறிய ஆசிரியர் இறுதிப்பகுதியாகிய இவ்வாறுஞ் சூத்திரத்தால் பதிப்பொருளின் இலக்கணம் கூறுகின்றார்.

அறிவுறும் பொருளோ ஈசன்
அறிவுறா தவனோ வென்னின்
அறிபொருள் அசித்த சத்தாம்
அறியாத தின்றா மெங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச்
சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர்
அசத்தெலாம் நின்றி டாவே.

---

1. திருவாச. கோயில். 10.

என்பது ஆறுஞ் சூத்திரத்தின் முதற் செய்யுள். ஆன்மாவின் சுட்டறிவினால் அறியப்படும் ஏனைப் பொருள்களைப்போலச் சிவமும் அறியப்படுமாயின், அப்பொருள்களைப்போலச் சடமுமாய் அழிந்து போவதுமாம்; இனி ஒருவாற்றானும் அறியப்படாத பொருளாயின், ஆகாயத் தாமரை, முயற்கோடு போலச் சூனியமாம்; திருநெறியாகிய சிவஞானத்தால் விளக்கப்படும் சிவத்தின் எதிரே, சூரியன்முன் விளக்கொளிபோல முனைத்து நில்லாமையால் சிவபரம்பொருள் அவ்விரண்டு தன்மையுமின்றிச் சித்துச் சத்தாகி நிற்கும் என்பது இதன் பொருள்.

சுட்டறிவாவது இது குடம், இஃது ஆடையென நேரே சுட்டியறிவது. ஈண்டுக் கூறப்படும் இலக்கணம் பொதுவிலக்கண மெனப்படும் தடத்த இலக்கணமாகும். இச்சூத்திரமும் மூன்று கூறுகளையுடையது.

அறிபொருள் அசித்து அசத்தாம் என்பது இச் செய்யுளின் முதற்கூறாகும். அறிபொருளைப்பற்றிக் கூறுதலால், அறிகின்ற உயிர்களின் அறிவின் இயல்பை முதற்கண் அறிதல்வேண்டும். உயிர் அறிவு குணவயத்ததாய் ஒரு பொழுதில் ஒரு பொருளை யறிவதும் பிறிதொரு பொழுதில் முன்னதனின் வேறாய பொருளையறிவதும் இவ்வாற்றால் தோற்றக் கேடுகளையுடையதாவதும் உண்டு. ஓரிடத்திலே நிலைபெறாது வேறு வேறு இடங்கட்குத் தாவிச் சேறலும் அறிவுக்கு இயல்பு. மேலும், பொருள்களை யுணருங்கால், அவ்வப்பொருள்களாய்ப் பரிணமித்து விடுவதும் உயிரறிவின் செயல். மலத்தொடர்புடையதாதலால் அறியாமைப்படுதலும் உண்டு. இப்பெற்றித்தாகிய உயிரறிவால் அறியப்படுவனவும் தோற்றக் கேடுகளையுடைய அசத்தாகுமேயன்றிச் சத்தாவதில்லை. அதனால் அறிபொருள் அசத்தாம் எனப்பட்டது. அசத்தெனவே, அசித்தாதலும்

பெறப்படுகிறது. இனி அங்ஙனம் அறியப்படும் பொருளெல்லாம் அசத்தாதலே, மண்ணுலக வாழ்க்கையும் விண்ணுலக வாழ்க்கையும் மற்றும் எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களுமாகிய எல்லாம் இந்திரசாலம் போலத் தோன்றியபொழுதே ஒரு சில மறைவதனுலும், கனவுபோல இடையே ஒரு சில மறைவதனுலும், பேய்த்தேர் - கானல்நீர் போல ஒரு காரணங்காட்டி ஒரு சில மறைவதனுலும் நன்கு தெளிய வுணர்த்தக் காண்கின்ருேம். சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படும் சற்காரிய வாதப்படி சத்து என்பது உள் பொருள் என்றும், அசத்தென்பது சூனியமென்றும், இல்பொருளென்றும் கொள்ளப்படுவதில்லை; எக்காலமும் நிலைபெற்று விளங்கும் பொருளே சத்தெனவும், ஒருகாலத்து விளங்குதலும், மற்ருெரு காலத்து மறைதலுமுடைய பொருள் அசத்தெனவும் சைவ சித்தாந்திகள் கொள்வர் என்பது தெளிய வுணரவேண்டுவதொன்று.

இனி, அறியாதது இன்ரும் என்பது இச் சூத்திரத்தின் இரண்டாங்கூறு. உயிரின் சுட்டறிவால் அறியப்படும் பொருள்கள் அசத்தாய் ஒழியுமாயின், இறைவனை அறியப்படாத பொருள் என்பதே அமைவுடைத் தென்பாரை நோக்கி, இவ்விரண்டாங்கூறு எழுந்தது. இறைவன் ஒருவாற்ருனும் அறியப்படாத பொருளாயின், அப்பொருளோடு எமக்கு ஓர் இயைபும் இல்லையாம்; அதனுல் ஆகக்கூடியதொரு பயனும் இல்லையாம். ஆகாயத்தில் தாமரையுண்டு; ஆனுல் அஃது அறியப்படாது என்பதுபோலவே இறைவன் என ஒரு பொருள் உண்டு; ஆனுல் அஃது ஒருவாற்ருலும் அறியப்படாது என்னும் கூற்றும் உளது. ஆகவே, இறைவனென்னும் பொருள் சூனியம் என்பதே தெளிவாம் என்பர் சிலர். ஒருவாற்ருனும் அறியப்படாத

பொருள் சூனியம் என்பது இலக்கணநூல் வழக்கு. உண்மையறியப்பட்டு இலக்கணம் அறியப்படாததும் ஒருவாற்ருன் அறியப்பட்டு ஒருவாற்ருன் அறியப்படாததுமாகிய பொருள்களே அறியாப்பொருள் எனப்படுமேயன்றி எவ்வாற்ருனும் அறியப்படாதது சொல்நிகழ்ச்சிக்கு இடமாகாதாதலின், பொருளெனவே மேற்கொள்ளப்படுவதில்லை. அதுபற்றியே "அறியாதது இன்ரும்" என்பாராயினர்.

இனி, **எங்கும் செறி சிவம் இரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்** என்பது ஆருஞ் சூத்திரத்தின் மூன்ருங் கூறு. இறைவன் அறியப்படும் பொருளுமன்று; அறியப்படாத பொருளுமன்று எனப்படுமாயின் வேறு அவன் இயல்புதான் என்னை யென்பது இம்மூன்ருங் கூற்ருல் விளக்கப்படுகின்றது.

அசத்தாகிய பாசம் சிவத்தையும், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தையும் அறியும் உரிமையுடையவல்ல. அவை இரண்டினையும் அறியும் உரிமையுடையது சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய ஆன்மாவேயாம் என்பது பாரிசேட வளவையால் பெறப்படுகின்றது. இனி இறைவன் உலகத்துப் பொருள்போல ஆன்மாவுக்கு வேருகாமல், ஆன்மவறிவுக்குள் அறிவாய் நின்று உணர்வன உணர்த்தும் பொருளாதலின், அவனேடு ஒற்றித்து நின்று அவன் அருளாலே அவன் காணத்தக்கவன் என அறிந்தோர் கூறுவர். இதனை நம்முடையகண், சூரியனைக் காணவேண்டுமாயின், வேறு ஒளிகள் அவன் முன் நில்லா; அதனல் அவன் ஒளியையே கொண்டு வேறற நின்றவழி அவனை அறிய முடிகின்றது. அதுபோலவே, சிவனைச் சிவனருளே கொண்டு ஒற்றித்து நின்று காண்டல் வேண்டும்

என்பாராயினர். "தேடிக் கண்டுகொண்டேன் திருமாலோடு நான்முகனும், தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே, தேடிக் கண்டுகொண்டேன்"[1] என்பது முதலிய திருவாக்குகள் இறைவன் அறிவினுள்ளே அறிவால் அறியப்படுவன் என்பதனை விளக்கி நிற்பது திருமுறைகளில் பரக்கக் காணலாம்.

**இலக்கணவியல் முடிந்தது**

---

## சாதனவியல்

நான்கு, ஐந்து, ஆறுஞ் சூத்திரத்தால் முறையே பசு பாச பதி யிலக்கணங்களைக் கூறிய ஆசிரியர், நிறுத்த முறையே சாதனவியல் கூறுகின்றார். சாதனம் என்னும் சொல் வேண்டும் செய்தி முறைமையென்று விளக்கப்படும். "சாதனம் ஒன்றுமின்றிச் சாதிப்பார் உலகில் இல்லை" என்றபடி யாதேனும் ஒன்றை அடையவோ துய்க்கவோ வேண்டுமாயின், அவ்வவற்றிற்குரிய சாதனங்களாலேயே கைகூடக் காண்கின்றோம். அதுபோலவே உயிர்கள் தம்மை அநாதியே பற்றியுள்ள மலத்தின் நீங்கிப் பிறவித் தொடர்பறுத்தற்கும் பேராவியற்கைப் பெருவாழ்வாகிய வீடுபேறெய்துதற்கும் ஏற்ற சாதனங்கொண்டாலன்றி அவை கைகூடா; அதனால் அச்சாதனங்களை வகுத்துக் கூறுவது இன்றியமையாததாயிற்று. சாதனம் கூறும் இச்சாதனவியல் மூன்று சூத்திரங்களாற் கூறப்படும்.

---

## ஏழாஞ் சூத்திரம்

பாச சாதன வியலின் தலைச் சூத்திரமாகிய இவ்வேழாஞ் சூத்திரத்தால் இறை, உயிர், உலகு என்ற மூன்ற

---

1. திரு நா: பதி பா - கஉ.

னுள் பாரிசேட அளவையால் உயிரே சாதனம் செய்யும் உரிமையுடையதென்பது உணர்த்தப்படுகின்றது. இதனல் இது சாதகன் இயல்பு கூறும் சூத்திரம் எனப்படுவதும் உண்டு.

“அனைத்துஞ் சத்தென்னி னொன்றை
யறிந்திடா தசத்தா லென்னின்
முனைத்திடா தசத்துச் சத்தின்
முன்னிரு ளிரவி முன்போல்
நினைப்பதிங் கசத்தே யென்னின்
சத்தின்முன் னிலாமை யானும்
தனைக்கொடொன் றுணர்த லானும்
தானசத் துணரா தன்றே”

என்பது ஏழாஞ் சூத்திரத்தின் முதற் செய்யுள். இதன் பொருள், சத்தாகிய சிவமே அசத்தாகிய பாசப்பொருள் களை யறியுமென்றால், சிவம் வியாபக அறிவுடையதாதலால் எவற்றையும் ஒருங்கே அறிந்து நிற்பதன்றி ஒவ்வொன் ருகச் சுட்டி அறியுமாறில்லை; அசத்தாகிய கருவிகளே சிவத்தை அறியாவோ என்னின், அவைகள் சூரியன்முன் விளக்குப்போல அதன் சன்னிதியில் முனைத்து நில்லா என்பது முன்பே கூறப்பட்டது; அன்றியும் அவை பிறி தொன்றை யுணர்தற்குக் கருவியாய் நிற்பதன்றித் தாம் வேறு அறிவுடையனவல்ல; ஆகவே, பாரிசேட அளவை யால் இவ்விரண்டினும் வேருய் எஞ்சி நின்ற ஆன்மாவே இவ்விரண்டனையும் பகுத்தறியும் என்பதாம்.

இச்சூத்திரம் மூன்று கூறுகளையுடையது. சத்தாகிய சிவம் அசத்தை யுணராதென்னும் முதற்கூறும், அசத் தாகிய கருவிகள் சிவத்தை யுணராவென்னும் இரண்டாங் கூறும் சூத்திரப் பொருள் காணுமிடத்தே இனிது விளங்கிக் கிடக்கின்றன. ஆதலால், அவற்றைத் தனித் தனியே வைத்து ஈண்டு விளக்குதல் வேண்டாவாம்.

இனி, மூன்றும் கூற்றின்கண், ஆன்மா, பதிபாசம் என்னும் இருபொருள்களையும் அவற்றோடு கூடி நின்றறியும் என்பதும், அங்ஙனம் அறியுமிடத்து அது தன்னையும் அறியும் என்பதும், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தையும் அசத்தாகிய பாசம் சத்தாகிய சிவத்தையும் அறியும் திறமையுடையவல்ல என்பதும் மேலே விளக்கப்பட்டன; அதனால், அவ்விரண்டினையும் அவ்வவற்றோடு கூடி அதுவதுவாய் இயைந்து நின்று அறியும் இயல்பினதாதலால் ஆன்மா சதசத்து எனப்படும். இங்ஙனம் இருவகைப் பொருள்களோடும் கூடி நிற்கும் நிலை, மலர்மணத்துள் மலர்போல விளங்கித் தோன்றுதலும் மணம்போல விளங்காது சூனியமல்லாததாய் இருத்தலும் போல்வதாம்.

இனி, சிவமும் ஆன்மாவுமாகிய இருபொருள்களும், உள்பொருளாந்தன்மை, நிறைவுடைமை, அறிவுடைமை என்ற இவ்வகையில் தம்முள் ஒப்பனவாயினும், பாசம் பதியைப் பற்றுமலும், உயிரைப் பற்றியும் இருத்தற்கு ஏது என்னை என்றொரு தடை இங்கே எழுவது இயல்பு; பதி அதிசூக்கும சித்தாகவும் ஆன்மா தூலசித்தாகவும் இயல்பிலேயே அமைந்திருப்பதே இதற்கு ஏது என்பது விடையாம். கடல் என்பது கடல்நீர் பரந்திருக்கும் பரப்பிடம்; நீர் தன்னியல்பில் மிக்க தூய்மையுடையது; உப்பானது நீரைப் பற்றுகிறதேயன்றிக் கடலிடத்தைப் பற்றுவதில்லை. கடற்பரப்பாகிய இடம் சூக்குமம்; நீர் தூலமானது. உப்பானது சூக்குமமான கடற்பரப்பைப் பற்றாது தூலமான நீரைப் பற்றுவதுபோல, பாசம் தூல சித்தாகிய உயிரைப் பற்றுவது வியப்பன்று. கடற்பரப்பு என்றது, அதற்கு இடங்கொடுத்தல் என்னும் பண்பாய் ஆகாயத்தைக் குறித்து நிற்கும். இடங்கொடுக்கும் பண்பு ஆகாயத்துக் குரியது. நீர்க்குள் காற்றும் ஒளியும் நிழலும்

செல்லுதலால், ஆகாயமுண்டென்பது தெளிய வுணர வேண்டுவதொன்று. அதுபற்றியே கடல்நீர் கடற்பரப்பை நோக்கித் தூலமெனப்பட்டது. கருவி கரணங்களின் துணையின்றித் தானே ஒன்றையும் அறியமாட்டாமையின், உயிர் தூலசித்து எனப்படுகிறது. படவே தூலசத்தெனவும் படும். இவ்வாறே உயிரைத் தூலசத்து என்பதற்குக் காரணம், ஆணவமலத்தில் மறைந்து சூனியம்போற் கிடப்பது என அறிக. தூல வியாபகம் என்பதும் பொருள்களின் அளவே வியாபகமாவதுபற்றிக் கூறப்படுகிறது.

இனி, இறைவன் அதிசூக்கும சித்தாகவும், சத்தாகவும், வியாபகமாகவும் உள்ளவன் என்பது, தனக்கொரு துணையுமின்றித் தானே ஒருங்கே எல்லாம் இயல்பாக அறிதலாலும், உயிரறிவிற்கும் அறிவிப்பதாயிருத்தலாலும் கேவல சகல சுத்தமென்னும் அவத்தையின்றி எக்காலமும், ஒரேதன்மையாய் விளங்கிக் கொண்டிருத்தலாலும், எள்ளில் எண்ணெய்போல் எங்கும் வியாபகமுடையனுயிருத்தலாலும் அறியப்படும்.

---

## எட்டாஞ் சூத்திரம்

மேல் ஏழாஞ் சூத்திரத்தால் சாதனம் செய்யும் உரிமை தனக்கே உண்டென்பதை யுணர்ந்த உயிர்க்கு அச்சாதனம் இதுவென இவ்வெட்டாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

“மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானுக்கிப் பேணு மாபோல்

தன்னியலைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

என்பது எட்டாஞ் சூத்திரத்து முதற் செய்யுள், மன்னவ குமரனொருவன் பிள்ளைப் பருவத்து மடமையால் வேடுவருடன்கூடித் தன் நிலைக்குரிய பெருந்தகைமையை யிழந்து இழிதொழிலுடையனாய் வளர்ந்து, தன் தந்தையாகிய அரசனையும் தன்னையும் அறியாது மயங்கி நிற்க, தந்தையானவன், "நீ என்மகன்" என்று அவனுக்கு அறிவுறுத்தி அவ்வேடரினின்றும் அவனைப் பிரித்துத் தானாகும் வண்ணம் செய்து போற்றுவதுபோல, தனது சித்துத் தன்மையினின்றும் பிறழ்ந்து மாயா காரியங்களாகிய ஐம்புல வேடர்களின் சுழலிற்பட்டுத் தன்னை யறியாமையேயன்றித் தனக்கு உயிர்க்குயிராய் நிற்கும் தலைவனையும் அறியாது உயிர் வருந்துமதனையும், அவ்வுயிர் ஏனைத் தவங்கள்போலக் கெடுதலில்லாத சரியை, கிரியை, யோகங்களாகிய, சிவ தருமங்களைச் செய்து மலபரிபாக முற்றிருப்பதனையும் கருணை வடிவினனாகிய இறைவன் கண்டருளிக் குருவடிவங்கொண்டு எழுந்தருளி வந்து அவ்வைம்பொறிகளினின்றும் நீங்குமாறு ஆணவமல வலியைக் கெடுத்துச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையருளி அவ்வுயிரை ஆட்கொண்டருள்வன் என்பது இதன் பொருள்.

இச்செய்யுள் நான்கு கூறுபடுகிறது. குருவாகி வந்து உணர்த்தி யென்பது எட்டாஞ் சூத்திரச்செய்யுளின் முதற் கூறு. இறைவன் குருவாகி வந்து உணர்த்துவதென்பது தீக்கை வழியினாலாகும். ஆதலால், அத்தீக்கையின் இயல்புகள் இக்கூற்றின்கண் விளக்கப்பெறுகின்றன; தீக்கையென்னும் சொல், மலத்தைக் கெடுத்து ஞானத்

ஞைதக் கொடுப்பது என்று பொருள்படும் வடசொல். இறைவனது கிரியாசத்தியின் சங்கற்பமே, தீக்கையிடமாக நின்று இப்பேற்றையருளும். தீக்கைகள் பலவகைப்படும்; அவற்றைச் சுருங்க வுரைக்கின்றும்.

தீக்கை, நிராதாரம், சாதாரம் என்று இருவகை யினையுடையது. ஆணவமலம் ஒன்றேயுடைய ஒருமலத் தரும், ஆணவமும் கன்மமுமாகிய இருமலமுடைய இரு மலத்தரும், ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று முடைய மும்மலத்தரும் என ஆன்மாக்கள் முத்திறப்படுவர். ஒருமலத்தரை விஞ்ஞானகலர் எனவும், இருமலத்தரைப் பிரளயாகலர் எனவும், மும்மலத்தரைச் சகலர் எனவும் சான்றோர் கூறுவர். இவருள் விஞ்ஞானகலர்களில் பக்குவ முடையார்க்கு இறைவன் அறிவுருவாய் அவர்தம் அறிவுக் கறிவாய் நின்று நல்லுணர்வு நல்குவன். பிரளயாகலரிற் பக்குவமுடையோர்க்கு மானும் மழுவும் நாற்றேளும் முக் கண்ணு முதலிய உறுப்புக்களையுடைய தேவர்வடிவில் வந்து முன்னிலையில் நின்று அறிவருளுவன். இவ்விருவழியினும் இறைவன் வேறே ஆதாரம் யாதனையும் பற்ருது நின்று அருளுதலால், இவை நிராதார தீக்கை யெனப்படும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடைய சகலரில், பக்குவமுடையார்க்கு ஒரு குருவடிவத்தைப் பற்றிப் படர்க்கையினின்று இறைவன் அருள்செய்வது பற்றி, இது சாதார தீக்கையெனப்படும்.

இத்தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என மூவகைப்படும். மாணுக்கனைச்சப்பாத ஓமத்தால் தூய்மை செய்து சைவாசாரத்துக்கு அதிகாரியாக்கும் வண்ணம் செய்யப்படும் தீக்கை சமயதீக்கையாம். சமயதீக்கையின் பின்னர் மாணுக்கனது ஆன்மாவை வாகீசுவரனல் வாகீசு வரியின் கருப்பநாடியில் செலுத்தி மீளவாங்கிச் சிவபுத்திர

ஞகச்செய்து சிவபூசை முதலியவற்றிற்கும், யோகநெறிக்கும், சிவாகமங்களை யோதுதற்கும் அதிகாரியாகுமாறு செய்வது விசேடதீக்கை; இவருள்ளும் பக்குவமுடையார்க்குச் செய்யப்படுவது நிருவாணதீக்கை.

**நிருவாணதீக்கை:** மனம், மொழி, மெய் என்ற மூன்று கருவிகளாலும் செய்வனவும் தவிர்வனவும் வினையெனப்படும். செய்யப்பட்டவினை வடமொழியில் கன்மமெனப்படும். இக்கன்மங்கள் நிகழ்தற்கு வாயில்கள் எனப்படுவன அத்துவா எனப்படும். அத்துவா என்னும் வடசொல் வழியெனும் தமிழ்ச்சொல்லுக்கு நேரிய சொல். இவ்வாயில்கள் சொல்லும் பொருளும் என இரண்டாம். சொல்வாயில், எழுத்து, சொல், சொற்றொடர் என மூன்று; பொருள்வாயில் நிலம் பொருள் செயல் என முத்திறப்படும். இவற்றை வடநூல்கள் அத்துவாக்கள் ஆறெனவும் அவை முறையே வன்னம், பதம், மந்திரம் எனவும் புவனம் தத்துவம் கலையெனவும் கூறும் இவ்வாயில்கள் ஆறினுள்ளும் சொல்வாயில்களைப் பிழையின்றி எழுதுதல் இசைத்தல் முதலியன செய்தல் நல்வினை; பிழையுறச்செய்தல் தீவினை. இவ்வாறே பொருள்வாயில்களுட் காணப்படும் நிலம் முதலியவற்றுள் புவனங்களும் ஆன்மாக்களும் அதிதெய்வங்களும் உண்டு. எழுத்துமுதலிய வாயில்கட்கும் அதிதெய்வங்கள் உண்டு. அவற்றை வழிபடுவதும் வழிபடாமையும் வினைகளாம். தெய்வங்களை நன்குமதித்து வழிபடுவதும், உயிர்கட்கு நலஞ்செய்வதும் நல்வினை; வழிபடாமையும் நலமல்லாதன செய்தலும் தீவினையாம். நல்வினையால் விளையும் கன்மம் புண்ணியம்; தீவினையால் விளையுங் கன்மம் பாவம்; இவற்றின்பயன் முறையே இன்பமும் துன்பமுமாம். ஆகவே, மனம் மொழி மெய்களால் சொற்கூறும் பொருட்கூறுமாகிய இருவகையால் நிகழும்

அறுவகை வாயில்களையின்றி வினைகட்கு வேறு வாயில்கள் இல்லையென்பது தெளிவாம். மனமுதலிய மூன்றன் செய்கை முற்றும் இந்த ஆறுவழியாகவல்லது நிகழாமை கண்கூடு. இதனால், உயிர்கள் செய்யும் புண்ணியபாவமெல் லாம் இந்த அறுவகை அத்துவாவினுள்ளும் அடங்கிநிற்பது இனிது காணப்படும். இவற்றைத் தூய்மைசெய்து உயிர் களின் நினைவு, சொல், செயல் என்ற மூன்றனையும் தூய வகையில் நிகழச்செய்வது தீக்கையின் குறிக்கோளாகும்.

இனி, ஆசிரியன் மாணாக்கனுக்குத் தீக்கைசெய்யும் போது அத்துவாக்களைச் சோதித்து அவ்வவற்றிலுள்ள கன்மங்களைப் போக்கி அவனுடைய ஆன்மாவைப் பரம சிவனது திருவருளில் ஒடுக்கி, ஒடுங்கியவழி, மாணிக்கத் தைச்சார்ந்த படிகவொளிபோலத் தற்போதம் ஒடுங்கவும் திருவருட்குணங்கள் விளங்கச் சிவானந்தம் மேலிடவும் செய்வது நிருவாணதீக்கையாகும். இங்கே கூறிய நிருவா ணம், சத்தியோநிருவாணம் அசத்தியோ நிருவாணம் என இருவகைப்படும். அசத்தியோநிருவாணம் தேகமுடிவில் முத்திபயப்பது எனவும், சத்தியோநிருவாணம் தீக்கை முடிவிலேயே முத்திபயப்பதெனவும் கூறுவர்.

மேலும், தீக்கைகள் திருநோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் முதலாகப் பலதிறப்படும். இவை மேலே கூறிய தீக்கைகட்கு அங்கமாகவும், தனித்தனியாக வும் செய்யப்படும். இவை ஹோமத்துடன் (ஓமத்துடன்) செய்யுங்கால் ஔத்திரிதீக்கை என்றும், ஓமத்துக்குவேண் டும் குண்டமண்டல முதலியவற்றை ஆசிரியன் தன் மனத் துக்குள்ளே கற்பித்துக்கொண்டு செய்யுங்கால் ஞானவதி யென்றும் கூறப்படும். சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலில்லாத பாலர், அறிவிற்குறைந்தோர், முதியோர், பெண்கள், பலவகைப் போகங்களையுடையோர், வியாதி

யுடையோர், அடிமைகள் ஆகிய இவர்கட்கு இயன்றவரை சமயாசாரங்களை அனுட்டிக்குமாறு செய்வது நிர்ப்பீச தீக்கை. இதுபற்றியே தோட்டியாயினும் தொண்டைமானாயினும், அவர் பிறர் ஏவல்வழிநிற்கும் தொழிலாளராதலின், அவர்கட்கு நிர்ப்பீசதீக்கையே செயற்பாலது என்ற கொள்கையும் சைவவுலகில் வழங்கிவருவதாயிற்று. சமயாசாரங்களை முறையே அனுட்டிக்கும் உரிமையுடையோர்க்குச் சபீசதீக்கை செய்யப்படும். இத்தீக்கையின் இயல்புகளைச் சிவாக்கிரபாடியம், பவுட்கரவிரிவுரை, பத்ததிகள் முதலியவற்றுட் பரக்கக் காணலாம்.

இங்ஙனம் தீக்கைபுரிந்து மலநீக்கஞ் செய்து ஞானத்தை உதிப்பித்துத் திருவருட்பேரின்பத்தை எய்தவருளும் முறை, பிற சமய வொழுக்கத்துறைகளிற் காணப்படாது சைவசமயத்தின் சிறப்பொழுக்கத் துறையாக விளங்குவது தெளிய உணரற்பாலதொன்று. சைவமக்கள் இவ்வருமையுணர்ந்து தத்தம் ஆற்றலுக்கியைந்த தீக்கை பெற்றுச் சமயாசாரம் குன்றாத சைவநன்மக்களாய்த் திகழ்வாராக.

இனி, மன்னும் அருளால் உணர்த்தி என்பது இவ்வெட்டாஞ் சூத்திரத்துச் செய்யுளின் இரண்டாங்கூறு, இதன்கண், புறப்புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என்ற இச்சமயங்களை யடைந்தும், மிருதிகளின் வழி ஒழுகியும் பிரமசரியம் முதலிய நிலைக்குரிய ஒழுக்கந் தவறாது அனுட்டித்தும், செய்தற்கரிய தவத்தைச்செய்தும், அரிய கலை ஞானம் பலவற்றை பயின்றும் வேதங்களை ஓதியும் சிறப்புடைய புராணங்களை உணர்ந்தும் வேதாந்தமென்னும் உபநிடதங்களை ஆராய்ந்து தெளிவுற்றும், இவ்வாறு மேன்மேலுயரும் அறிவுத்துறைகளில் மிக்குச்சென்றால், சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்தசைவத்தை ஒருவன்

அடைந்தவனுவான். அதன்பின் இறப்பில் தவமாகிய சரியைகிரியை யோகங்களைச் செய்து முற்றினேர் ஞானத்தை யடைந்து அதனுல் சிவபெருமான் திருவடியைச் சேர்தல்கூடும் என்னும் இக்கருத்துக்கள் இக் கூற்றின்கண் இனிது விளக்கப்படுகின்றன.

ஏனைச்சமயங்களெல்லாம் சித்தாந்தசைவத்தை அடைதற்கு வாயிலாக உள்ளனவேயன்றி முடிந்த சமயங்களாகாவென்பது இதனுல் நன்கு விளங்குவது காணலாம். உலகாயதநூலார் இம்மையில் அரிவையரோடுகூடி இன்புறுதலே முத்தியென்பர். மீமாஞ்சை நூலார் யாகாதி கன்மங்களைச் செய்து அம்மையில் துறக்கவின்பம் நுகர்தலே முத்தியென்பர். புத்தரில் சவுத்திராந்திகர், உருவம் வேதனைமுதலாக வரும் கந்தங்களைந்தும் கெடுவதே முத்தியென்பர். ஆருகதநூலார், (சமணர்) கடையிலாஞான முதலாகக் கூறும் எண்வகைக் குணங்களை யடைவதே முத்தியென்பர். வைசேடிகர் அறிவு, விழைவு, செயல் என்றவற்றுள் ஒன்றும் விளங்குதலின்றிக் கல்லுப்போற் கிடப்பதே முத்தியென்பர். சாங்கியநூலார் தத்துவங்களைப் பகுத்துணரும் விவேகஞானம் பெறுவதே முத்தியென்பர். மாயாவாதிகள் தன்னைப் பிரமமாக அறிதலே முத்தியென்பர்; சிவசமவாத சைவர் முதலிய அகச்சமயத்தவர் சிவசாரூப முதலிய பதமுத்திகளைப்பெறுவதே முத்திமுடிவென்பர். இவர்களும் ஏனைச்சமயத்தவரும் கூறும் முத்திகளெல்லாம் நிலமுதல் நாதமீருகவுள்ள மாயாகாரியங்களாகிய முப்பத்தாறு தத்துவங்களுக்கும் உட்பட்டனவா யிருத்தலால், அவற்ருல் பந்தம் நீங்குதல் இல்லையாம். அன்றியும், அறிவுடைப்பொருளாகிய ஆன்மாவுக்கு அறிவில்பொருளாகிய மாயாகாரியங்கள் வேற்றுப்பொருளாக இருத்தலால், அதனுல் வரும் இன்பம் நிலைபேறுடைய உண்மையின்பமாகாது.

இக்குற்றங்கள் இல்லதும், நிலைபேறுடையதுமாகிய முத்தி சிவபரம்பொருளின் திருவடி சேர்தலாகிய முத்தியே சித்தாந்த சைவம்கூறும் பரமுத்தியாகும். ஆசிரியர் திருவள்ளுவர், "மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்:" எனவும், "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடிசேராதார்," எனவும் பிறவும் கூறுவதனால், இறைவன் திருவடிசேர்தலே முத்தியெனத் தெளியவுரைப்பது காண்க. "நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர சமர்ந்தி ருந்தார்" எனச் சேக்கிழார்பெருமானும் திருவடிசேரும் முத்தி சைவத்தின் முத்திநிலையென மொழிந்திருப்பது ஈண்டு நினைவுகூர்ந் தின்புறத் தக்கதாம்.

இனி, சித்தாந்த சைவம் முத்திநிலையான் மட்டுமன்றி விரிந்த கொள்கையாலும் வீறுடையதாகும். ஏனைச் சமயங்களும் அவற்றின் பிரமாண நூல்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் நிற்பன; சித்தாந்த சைவமும் அதன் பிரமாண நூல்களும், "இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி, நீதியினால் இவையாவும் ஓரிடத்தே காண" நிற்குமாற்றால் இதன் சிறப்பு உணரப்படும். மேலே கூறியவாறு சிவபெருமான் குருவடிவில் எழுந்தருளிவந்து திருநோக்கம் முதலிய தீக்கைசெய்து ஒரு பிறப்பிலேயே முத்தியளிக்கும் முறை வேறு சமயங்களில் கூறப்படுவதாக இல்லை. இதுகொண்டே இதன் அருமை பெருமைகள் தெளிய உணரப்படும்.

மேலும் இக்கூற்றின்கண், சைவத்திற் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுடைய இலக்கணமும் சிறப்பும் பயனும், ஞானத்தின் வகைகளான கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்றவற்றின் இலக்கணமும் பயனும், அவற்றின்கண்

நிகழும் அனுபவமும் பத்திநெறியின் மாண்பும் பிறவும் விரிவாக விளக்கப்படுகின்றன.

இனி, **துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனை யும் அறியாது துயருறும் தொல்லுயிர்** என்பது எட்டாஞ் சூத்திரத்து முதற்செய்யுளின் மூன்றாங்கூறு. தன்னால் சாரப்பட்ட பொருளின் நிறத்தைத் தானும் பெற்றுத் தன் இயல்பான ஒளி மறைந்துநிற்பது பளிங்கின் இயல்பு; இவ்வாறே ஆன்மாவும் சார்ந்ததன் வண்ணமாய்த் தன் னியல்பு மறைந்து நிற்கும் என்பது முன்பே கூறப்பட்டது. அப்பெற்றித்தாகிய ஆன்மா, தன்னால் சாரப்பட்ட கருவிக ளான ஐம்பொறி முதலியவற்றைப் பற்றி அவ்வவற்றின் வண்ணமாய் மாறித் தன்னியல்பு உணரப்பெறுவது இல்லை. இவ்வாறு, தன்னியல்பையே மறைக்கும் பொறி முதலிய கருவிகளைக்கொண்டு தன் அறிவின்கண் அருளால் மன்னி யிருக்கும் துணைவனாகிய இறைவனை யறிவதென்பது அமையாதன்றோ? ஆயினும், பசுகரணங்களாகத் திகழும் இவ்வைம்பொறி முதலியன சிவகரணங்களாகியவழி அவற்றால் இறைவனை யறிதல்கூடும் என்றும், ஞாயிற்றின் ஒளியைக்கொண்டே ஞாயிற்றைக் காண்பதுபோலவே இறைவனது திருவருள் ஞானத்தைக்கொண்டே இறை வனை யறிவது இயலும் என்றும், அங்ஙனம் கண்டு இறை வனைக் கூடப்பெற்றார்க்கு வரும் பேரின்பம் "மருவும் இருவரும் புணர வந்த இன்பம் வாயினாற் பேசரிது மணந் தவர் தாம் உணர்வர்"[1] என்றும் ஆசிரியர் இக்கூற்றின்கண் விளக்குகின்றார்.

அன்றியும், கருவிகள் யாவும் சுட்டுணர்வுக்குக் கருவி யாய்ச் சுட்டியறிதற்குரிய பொருள்களை யுணர்தற்கே பயன் படுவனவாகும். இறைவனாகிய பதிப்பொருள் சுட்டிறந்த

1. சிவ. சித்தி. சுபக். 288.

வியாபகப்பொருளாய், ஆன்மவறிவுக்கும் அறிவாய் இருப்பது; அதனால், இறைவனை யுணர்தற்கு இக்கருவி கரணங்கள் பொருந்தாவென்பது தெளிவு. "அப்படியும் அவ்வுருவும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"[1] எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் தெருட்டியுரைப்பதும், "உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத், துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர், எறும்புத் துளையின் இருசெவிக் கெட்டாது, உறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை, வைத்த நாவின் வழிமறித் தகத்தே, தித்தித் தூறுந் தெய்வத் தேறல், துண்டத் துளையிற் பண்டை வழியன்றி, அறிவி னாறு நறிய நாற்றம்"[2] என்பதனால் இறைவன் கருவிக் கெட்டாது நிற்பதையும், "தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின், மாயப் படலங் கீறித் தூய, ஞான நாட்டம் பெற்றபின் யானும், நின்பெருந் தன்மையுங் கண்டேன்"[3] என்பதனால் திருவருட் காட்சியின் சிறப்பையும் சைவசித்தாந்த முந்தையோரான பட்டினத்தடிகள் கூறுவதும் ஈண்டு நோக்கத்தக்கனவாம்.

இனி, அவரினீக்கித் தன்மலரடிக்கீழ் வைப்பன் என்பது எட்டாஞ் சூத்திரச் செய்யுளின் நான்காங்கூறு. படிகம் தன்னாற் சாரப்பட்ட பொருளின் வண்ணத்தைப் பெறுவது அதற்குப் பொதுவியல்பாகிய தடத்தவிலக்கணம்; அதனின் இயல்பாகிய ஒளி அச்சாரப்பட்டபொருள்களின் வண்ணத்துக்கு வேறாயிருப்பது கண்கூடு. இவ்வொளியுடைமை பளிங்குச் சிறப்பெனப்படும் சொரூபவிலக்கண

1. திருநா. 311:10.
2. பட்டின. திருக்கழுமலமும்மணிக் - 22.
3. ஷை திருவிடைமரு - 13.

மாகும். இவ்வாறே சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல் ஆன் மாவுக்குத் தடத்த இலக்கணமாம்; இனிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றற்குரிய தனி இயல்பே சொரூபமாகும். பளிங்குக்குரிய சொரூபம்போல ஆன்மாவுக்கும் சொரூப மொன்று வேறுண்டென்பது தெளியப்படும். படிகத்தின் உண்மைச் சொரூபம் ஞாயிற்றின் ஒளியால் விளங்குவது போல, ஆன்மாவின் ஞானசொரூபமும் சிவஞானத்தால் விளங்கித்தோன்றி, பொதுவியல்பையே தன்னியல்பாகச் செய்துநிற்கும் சடமாய் ஏகதேசமாயுள்ள கருவி, ஞானத் தின்வேறாய், சித்தாய் வியாபகமாயுள்ள சிவத்தை யுணர்த்தி நிற்கும். இவ்வாறு சிவதரிசனம் செய்யப்பெற்றதும், அணையாற் சிறைப்பட்டிருந்த நீர், சிறையுடைந்ததும் கடலிற் சென்றடங்கி மீளாதொழிவதுபோலச் சிவத்திற் சென்று ஒன்றி யுடனுவ தல்லது மீளக் கருவிக்கூட்டத் திற்குச் செல்லாது.

இனி, சிவம் தனது வியாபகத்தன்மையால் கருவிகளி னேடும் விரவிநிற்குமாகையால், கருவிகளும் சிவமேயாகும்; ஆகவே, அவற்றினின்றும் நீங்குதல் வேண்டுமென்பது பொருந்தாதாம் என்னின், சிவபரம்பொருள் எல்லாப் பொருள்களினும் வியாபித்திருப்பதே ; அதன் வியாபகம் அவ்வப் பொருட்கு ஏற்ப இருக்குமேயன்றி எப்பொரு ளிடத்தும் ஒரொப்ப இருப்பதன்று; அதனுல் நீங்குதலே வேண்டும் என்பதாம். எங்ஙனமெனின், இந்திரியங்கள் ஐந்தின்கண்ணும் உயிர் ஒப்பநிற்பினும், உயிரின் செய லனைத்தும் ஒன்றின் வாயிலாகக் காண்டல் இயலாது. அன்றியும், ஒளியால் ஆன்மபோதத்தோடு விரவித் தூரத்தி லுள்ள விண்மீன் முதலிய பொருள்களை வியாபித்தறியும் கண்ணிந்திரியம்போல, ஏனைச் செவி முதலிய இந்திரியங் கள் வியாபித்தறியமாட்டா; தம்பக்கல் வந்த விடயங்

களையே நின்றாங்கு நின்று அறியும். இவ்வாறு கருவிகள் தம்மில் வியாபகமும் வியாபகமின்மையுமாகிய ஏற்றத்தாழ்வுடைமைபற்றியே, இக்கருவியினை நீங்கிநின்றே சிவத்தையுணரவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது.

இங்ஙனம் சிவஞானம் கைவரப் பெற்றவர்கள் சிவத்தை இடையறாது சிந்தித்தவண்ணம் இருத்தல்வேண்டும். இதுவே சைவவாழ்வென்றும் திருவருள் வாழ்வென்றும் சிவத்தின் நீங்காத வாழ்வென்றும் சிவாகமங்களிற் கூறப்படுகிறது. இடையறாச் சிந்தனையே சிவத்தினின்றும் நீங்காமைக்கு ஏதுவாம். பாசிபரந்த நீர்நிலையில் அப்பாசியானது தொடுவழி நீங்கி, விடுவழிப் பரப்பதுபோல, ஆன்மாவிற் பரந்திருக்கும் ஆணவம் கன்மம் மாயை என்ற மலம் சிவத்தை உணரும்பொழுது நீங்குதலும் உணராதபொழுது கூடிப் பரந்துவிடுதலும் செய்யும். அதுபற்றியே இடையறவுபடாத சிவசிந்தனை வேண்டப்படுகிறது. பழக்கவாதனையால் ஒருகால் மலப்பாசி வந்து படருமாயின், அஃது உண்டாகாமைப்பொருட்டு உபாயமும் அடுத்துவருஞ் சூத்திரத்திற் கூறப்படுகிறது.

---

## ஒன்பதாஞ் சூத்திரம்

மேலைச் சூத்திரத்தால் சிவப்பேற்றின் அருமையுணர்ந்தவனுக்கு அப்பேற்றினைப் பயப்பதாகிய சாதனம் செய்யும் நெறி இச் சூத்திரத்தால் வகுத்துக் கூறப்படுகிறது.

“பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்

ஆசைதரு முலகமெலாம் அலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னும்
ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட"

என்பது ஒன்பதாம் சூத்திரத்தின் முதற்செய்யுள். இதற்குப்பொருள்: மேலே கூறியவாற்றல் பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலும் அடைதற்கரியனாகிய பரமசிவனை அவனது திருவடி ஞானம் ஒன்றே கொண்டு தனது அறிவின் கண்வைத்து ஆராய்ந்து நேசமொடும் திருவடிக்கீழ் நிட்டை கூடியிருத்தல் பெரும்பேருகும்; அதுபெருதவழி, அதனைப் பெற விடாமல் பற்றுச்செய்துகொண்டிருக்கின்ற பலவகைப்பட்ட பொருள்களும் தம்மை நிலையுடையன போலக் காட்டும்; வெயில் வெப்பம் குறையுங்கால் மறைந்தொழியும் பேய்த்தேர் (கானல் நீர்) போல அவை நிலைபேறுடையனவல்ல எனக் கண்டு அவற்றின்பால் வைத்துள்ள பற்று அறவே கழிக்கப்பெறின், மீளவும் திருவடி ஞானம் விளங்கும்; அந்நிலை கைகூடப்பெறின், பன்னுட் பழகிய வாதனைபற்றி மீண்டும் ஞேயப்பொருளாகிய சிவத்தைக்கண்ட காட்சி சலியாமைப்பொருட்டுத் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்கவேண்டும், என வரும்.

இச்சூத்திரம் மூன்றுகூறுகளை யுடையது. பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே கண்டு அவன் திருவடிக்கீழ் நிற்க என்பது ஒன்பதாஞ் சூத்திரத்து முதற்செய்யுளின் முதற்கூறு. இதன்கட் கூறப்படும் பாசஞானம், சொற்பகுதிஞானம் பொருட் பகுதிஞானம் என இருவகைப்படும். மறைநான்கும், அங்கம்ஆறும் மிருதிபதினெட்டும் புராணம்பதினெட்டும் கலை அறுபத்துநான்குமாகிய வாக்கின்பகுதி சொற்பகுதி

ஞானமாம்; பொருட்பகுதிஞானம் நிலமுதல் நாதமீறாக வுள்ள தத்துவங்களைப்பற்றியஞானம். பசுஞான மென்பது இவற்றைப்பொருந்திய ஆன்மா இவையனைத்தும் தன்கீழ் அடங்குவன என அறிந்து அவற்றினின்றும் நீங்கித் தான் அவற்றிற்கு மேற்படுவதால் "நாம் மேற்பட்டோம்" என்னும் செருக்குற்று அநாதிமுத்தனாகிய சிவனைப்போல் முத்தனாகிய யானும் பிரமமாவேன் எனச் சடுதியில் மதிக்க வருவதோர் சிவசமவாதஞானம் என்றும் ஏகான்ம வாத ஞானமென்றும் ஆகும்.

இங்கே கூறிய நூல்வகையுள் சிவாகமங்களும் அவற்றின் வழிவந்த மெய்கண்ட நூல்களும் திருமுறை களும் எப்பகுதியில் அடங்குமெனின், அவையெல்லாம் பதிஞானம் விளங்குதற்கு ஏதுவாவன வாதலால், பாச பசுஞானப் பகுதிகள் எவற்றினுள்ளும் அடங்கா என்று தெளிய உணரவேண்டுவதொன்று.

இனி, அகச் சமயத்துப் பாடாணவாத சைவர், பாசப் பொருள்களைப்பற்றியுள்ள ஆன்மா, அவற்றை யெல்லாம் விட்டுநீங்கிக் கல்லுப்போல் அறிவு விழைவு செயல்கள் சிறிதும் சீவியாது நிற்றலே முத்தியென்பர்; பேதவாத சைவர், காலைப்பொழுதில் தூரத்திற்சென்ற ஒருவனது நிழல் உச்சிப்பொழுதில் அவன் அடிக்கண்வந்து ஒடுங்கினாற் போல, கரணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்த விடத்து, அவ்வாறு செல்வது நீங்கித் தன்மாட்டுவந்து ஒடுங்கிநிற்கும்; அதுவே முத்தியாம் என்பர். கரணங்க ளெல்லாம் ஒடுங்கியிருக்கும் நிலையே முத்தியாயின், சினை யினும், முட்டையினும், கருப்பாசயத்தினும் கிடக்கும் உயிர்கள், அறிவு, விழைவு முதலியன வின்றிக் கிடத்தலால் அந்நிலையும் முத்தியாகவேண்டும்.; அங்ஙனம் இன்மையின், அதனை முத்திநிலையாகக் கூறும் பாடாணவாதசைவம்

மறுக்கப்படுமாறு காண்க. இவ்வாறே தன்னறிவு தன் பக்கல் வந்து சேரினும், அது பசுஞானமேயன்றிப் பதி ஞானமாகமாட்டாதெனப் பேதவாதசைவர் கூற்றும் மறுக்கப்படுகிறது.

அன்றியும், கேவலநிலையில் ஆணவத்தோடு அத்து விதமாய்க் கிடந்தஉயிர், அறிவு விழைவு செயல்களின்றிக் கிடந்ததுபோலச் சுத்தமாகிய முத்திநிலையிலும் இருத்தலால் இரண்டினும் வேறுபாடு இல்லையென்றே கூறல்வேண்டும். ஆகவே, பாடாணவாதசைவர் கூற்று இவ்வகையாலும் பொருந்தாதாகின்றது. தீயானது எக்காலத்தும் தனித்து நில்லாது யாதேனுமொரு பொருளைப்பற்றியே நிற்கும்; அதுபோல, உயிரும் எக்காலும் தனித்துநில்லாது சத்தினையோ அசத்தினையோ பற்றிநிற்கும்; அதுபற்றியே அது சதசத்து எனப்படுகின்றது. அற்றாக, தன்னறிவு தன்மாட்டு விளங்க உயிர் தனித்துநிற்குமெனப் பேதவாத சைவர் கூறுவதும் பொருந்தாதென்பது தெளிவாம்.

இனி, பொறி முதலிய கருவிகரணங்களால் அறியப் படும் சுட்டுணர்வாகிய பாசஞானத்திற்கும், தன்னுண்மை யறியமாட்டாது "நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ"[1] எனப் பலதலைப்பட்டு ஐயுற்று நிற்பதாகிய பசுஞானத்திற்கும், பதிஞானம் போலத் தன்னையறிதலும் பிறவற்றிற்கும் அறிவுவிளங்கச்செய்தலுமாகிய திறம் இல்லை. இதுபற்றியே பதிஞானம் ஒன்றுமே அறியற் பாற்றெனக் கூறப்பட்டதென்க. பாச பசுஞானங்கள் மற் றொன்றை விளக்குதற்கு உரியவாயினும் தம்மை விளக்கும் தன்மையுடையவல்ல. இதனைக் "கண்டிடுங்கண் தனைக் காணா"[2] மை பற்றி அறிந்துகொள்க.

1. சிவ. போ: சூ. ix. அதி. 1, வெண். 1.
2. சிவ. சித்தி. சுபக். 296.

இனி, **நில்லாதே நீங்கிப் போதின் ஆசைதரும் உலக மேலாம் அலகைத்தேரா மென்று அறிந்து அகல அந்நிலையே யாகும்** என்பது ஒன்பதாஞ் சூத்திரச் செய்யுளின் இரண்டாங்கூறு. இக்கூற்றின்கண் பதிஞானம் எதனால் வரும் என்பதும், அந்தஞானத்தில் நிலைத்து நிற்பதற்கு உபாயம் இதுவென்பதும், அங்ஙனம் நிற்குங்கால் சிவம் காட்சிப் படும் என்பதும் விளக்கப்பெறுகின்றன. பதிஞான நெறியில் தலைப்பட்டான் ஒருவன், தன் குருவினால் அருளிச்செய்யப்பட்ட ஒருவடிவில் அறிவைச்செலுத்தி அதனையே சிந்தித்து உறைத்து நிற்கவேண்டும். அங்ஙனம் நிற்குமிடத்து, ஒருகால் பிரபஞ்சம் காட்சிப்படும்; அக்காலை, சுவரின்வடிவம் காண்பார்க்குக் காணப் படாதாய் அதன்கண் மறையும் சித்திரம்போல[1] அறுவகை அத்துவாவுட்பட்ட மூவகைப்பிரபஞ்சமும் காரண ரூபத்திற் சிறிதும்காணப்படாமையால், அவை வெறும் பொய்யெனக் கண்டும், இப் பிரபஞ்சத்துட் காணப்படும் பொருள்களெல்லாம் முற்பிறவிகளில் அனுபவித்துக் கழிந்தமையால், அவற்றைக் கான்ற (கக்கிய) சோறென அருவருத்து ஒதுக்கியும் கண்டகாட்சியிற் சலியாமை வேண்டும். அதனால், அப்பிரபஞ்சத்திற்கு வேறுபட்ட தன்மையையுடைய ஞானசொரூபம் ஆண்டு இனிது விளங்கித் தோன்றும். தோன்றவே, வறிஞனொருவனுக்குப் பொற்கிழியொன்று புதையலாகக் கிடைக்குமாயின், அதன்கண் அவனுக்கு ஆசைமீதூர்வதுபோல, இதுகாறுங் காணப்படாத அரிய ஞானசொரூபம் காணப்பட்ட பொழுது, அதன்கண், அளவிறந்த பேரன்பு உண்டாகும். அன்பு யாண்டு உளதோ ஆண்டு இன்பம் தோன்றுவது இயல்பு. இந்த அன்பே ஞானமாம் எனத் திருஞான

1. பட்டி. திருக்கழுமல. 10.

சம்பந்தப்பெருமான்[1] தெரிவித்தருளினர். ஞானத்துக்கு முதலாகிய சிவம், அன்பின் வழியாகப் பேரின்பமயமாய்ப் புகுந்து உயிரின்கண் விளங்கித் தோன்றும் என அறிக.

இனி, ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட என்பது ஒன்பதாஞ் சூத்திரச் செய்யுளின் மூன்ருங்கூறு. மலவாதனை நீங்கி இறைவனோடு ஒன்றுபடுதற்கு நேரிய சாதனமாக விளங்குவது திருவைந்தெழுத்தேயாகும். திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பதே முறை. முதற்கண் பாவனையும், பின்னர்த் தியானமும், அதன்பின் உச்சரிப்பும் விதிமுறையாம். இம் மூன்றும் இக்கூற்றின்கண் விளக்கப் படுகின்றன. விடநீக்கம் செய்விக்கும் மாந்திரிகன் கருட மந்திரம் உச்சரிக்கவேண்டும். அதற்கு அவன் முதற்கண் தன்னைக் கருடனுகப் பாவித்தல் முதலிய முத்திறத்தில் நிற்றல்பற்றி இதன் வாய்மையை யுணர்ந்துகொள்ளலாம். விடநீக்கம் செய்யுமிடத்து, விடமுடைய பாம்பிற்குப் பகையாகிய கருடமந்திரமும் கருடபாவனையும் கருடத் தியானமும் இன்றியமையாதவாறுபோல, சிவமந்திரமும் சிவோகம்பாவனையும், சிவத்தியானமும் வேண்டப்படுகின்றன.

முதற்கண் சிவோகம்பாவனை செய்யுமாறு கூறப்படுகின்றது.

சிவபாவனை செய்பவன் எப்படிச்செய்தல் வேண்டும் என்பது இந்நூலின்கண் மிக்க அருமையாக விளக்கப் பெறுகின்றது. அது வருமாறு :—

"கண்டவிவை யல்லேனு னென்றகன்று காணுக்
கழிபரமும் நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினெடும் உளத்தவன்று னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி

1. பெரிய பு. திருஞான. 843.

விண்டகலும் மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களுமதுநா னேனென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே''[1]

(இதன் உரை) உடம்பே நானென்றும் அது நீங்கிய வழி பிரமம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாக உணர்கின்ற உயிராவது, சுட்டுணர்வுப்பட்ட அப்பாவமும் அன்று. சுட்டுணர்வு இறந்துநின்ற அப் பதிப்பொருளும் அன்று. இரண்டற்கும் வேறெனக்கண்டு வேருகிய பாசத்தை மேற்கூறியவாற்ருல் கான்ற சோறெனக்கண்டு ஒருவி, ஏனைப் பதிப்பொருள் வேருயினும் வியாப்பிய வியாபகத் தன்மையால்[2] கண்ணொளியும் ஞாயிற்றின் ஒளியும்போல வேற்றுமை சிறிதும் தோன்ருதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய தனது தொண்டினையும் சார்ந்ததன் வண்ணமாம் இயல்பினையும் இறைவன் கலப்பினையும் நோக்கிநின்று கருடோகம்பாவனை[3] போலச் சிவோகம்[4] பாவனை ஒருவன் செய்யப்பெறுமாயின், அக்கருடன் அம்மாந்திரீகனுக்கு வேருதலின்றி அத்துவிதமாய்த்[5] தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறு போலச் சிவனும் இவனுக்கு வேருதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனுகச்செய்வன், என்பதாம்.

இச்சிவோகம்பாவனையின் உண்மை யறியமாட்டாத கேவலாத்துவிதிகள் வேதாந்தத்துட் கூறப்படும் "அகம் பிரம்மாஸ்மி'' என்னும் வாக்கியத்துக்குப் பிரமம் சீவன்

1. சிவ. சித்தி. சுபக். 298.
2. வியாப்பியம் - அடங்கிய நிறைவு; வியாபகம் - நிறைவு.
3. கருடோகம் பாவனை - மாந்திரிகன் தன்னைக் கருடனுகப் பாவிப்பது.
4. சிவோகம் = சிவ + அகம்.
5. அத்துவிதம் - இரண்டல்லவாந் தன்மை.

எனப் பொருள் இரண்டில்லை எனவும், சீவவுபாதிநீங்கி ஈசுவரஉபாதியிற்றள்ளினால் பிரமம் ஒன்றேயுளது எனவும் கூறுவர். இங்ஙனமே பரிணாமவாதிகளும் விசிட்டாத்துவிதிகளும் அது நானாதற்குரிய அத்துவித உண்மையறியாமல் தத்தமக்கு வேண்டியவாறே கூறி இடர்ப்படுவதால் "பண்டை மறைகளும் அது நானானேன் என்று பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணே" என அவர்க்கெல்லாம் ஈண்டு அறிவு கொளுத்தப்படுகின்றது.

இனி, சிவோகம்பாவனைக்குரிய மந்திரம் திருவைந்தெழுத்தென்பது முன்பே கூறப்பட்டது. ஆன்மாவும், சிவமும், உடைமையும் உடையவனுமாகிய இயைபுற்றிருப்பது அவ்வைந்தெழுத்தை ஓதும் முறைமையான் அறியப்படும். இறைவன் திருவுருவமே ஐந்தெழுத்தால் அமைந்தது ; இதனை,

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்"[1]

என்னும் உண்மைவிளக்க வெண்பாவால் அறிந்துகொள்க. இவ்வெழுத்துக்களால் கரங்களையும், உடலையும் சிவசொரூபமாகப் பாவித்து, இருதயத்தைப் பூசைத்தானமாகவும், உந்தியை ஓமத்தானமாகவும், புருவநடுவைத் தியானத்தானமாகவும் கற்பித்துக்கொள்ளுதல் வேண்டும். பின்னர் இருதயத்தில் ஆன்மாவையே சிவசொரூபமாகப் பாவித்து ஐந்தெழுத்தாற் பூசித்தலும் உந்தியின்கண்ணுள்ள அனலில் அவ்வெழுத்துக்களால் ஓமித்தலும் புருவ நடுவில் தியானித்தலும் செய்தலாகிய அந்தரியாகபூசை[2] செய்தல் வேண்டும். இச் சிவோகம்பாவனை, திருவைந்தெழுத்தை

1. உண். விளக். 34.
2. அந்தரியாக பூசை - அகப் பூசை.

யோதுதல், அந்தரியாகபூசை ஆகிய மூன்றையும் ஒரு வழிப்பட நின்றுகொண்டு செய்யப்பெறின் அப்பதிப் பொருள் ஆன்மாவின்மாட்டு விளங்கித்தோன்றும். கிரகம் ஒன்பதனுள் இராகு கேதுக்கள் ஒழிய ஏனை ஏழும் கட்புலனுகக்கூடியன; அவ்விரண்டும் கிரகணகாலங்களிற்றான் காணப்படும்; ஏனையபோலக் காணப்படாத இராகு கேதுக்கள் கிரகணகாலத்தில் காணப்படுவதுபோல, பதிப் பொருள் இம் மூன்றும் ஒருங்கு நடைபெறுங்கால் விளங்கித் தோன்றுமென வுணர்ந்துகொள்க.

இதயபூசனைக்கு, இதயகமலம் நாளமுதல் பொகுட்டு வரை நிலமுதல் விந்துதத்துவமீருகிய முப்பத்தைந்து தத்துவ வடிவமாகவும், அதற்குமேல் சத்தியையே வடிவமாகக்கொண்டு சிவபரம்பொருள் விளங்குவதாகவும் கொள்ளல் வேண்டும். இறைவனுக்குத் திருவைந்தெழுத்துத் தூலவடிவம், ஆன்மா சூக்குமவடிவம், சத்தி மூர்த்தம்[1] அதிசூக்கும வடிவமுமாம்; ஆதலால், முதலில் ஐந்தெழுத்தால் அமைந்த வடிவையும், பின்னர் ஆன்ம வடிவையும் அதன்பின்னர்ச் சத்திவடிவையும் முறையே கூறினர் என அறிக.

இங்ஙனம் பூசித்தலும், ஓமித்தலும், தியானித்தலுமாகிய அந்தரியாக பூசையை மேன்மேலும் செய்யின், கண்ணுடியைப் பொடியிட்டு விளக்க அதன் ஒளி மேலிட்டு மாசு நீங்குமாறு போல ஆன்மாவின்கண் சிவம் விளங்கித் தோன்றும். தோன்றவே, மலமறைப்புத் தேய்ந்து தேய்ந்து முடிவில் பற்றறநீங்கும். இவ்வண்ணம் ஆன்மசுத்திக்குச் சிறந்த ஏதுவாய் இருத்தலால், அந்தரியாகம் இன்றியமையாது வேண்டப்படுகிறது; சிறந்த முத்திசாதனமுமாகிறது. இதன் சிறப்பை,

1. சத்தி மூர்த்தம் - சத்தி மூர்த்தியாயிருத்தல்.

"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"[1]

என அப்பமூர்த்திகள் எடுத்தோதி விளக்குதல் காண்க.

இனி, அகம்புறம் என்ற வேறுபாடின்றி யாண்டும் சிவசொரூபத்தைக் காணும் மெய்ஞ்ஞானிகளாயுள்ளார் புறம்பேயும் அரன் திருவடிகளைப் பூசிக்கக் கருதுங்கால் முயன்று வருந்துதலின்றி எளிதிற் கிடைக்கப் பெறுவதும் பிற வுயிர்களைச் சிறிதும் வருத்துவது மல்லாத பூமரத்தின்[2] கீழுதிர்ந்த பூவும், ஆறு, குளம் முதலியவற்றி லுள்ள நீரும், கொண்டு பூசிக்கக் கடவர். இறைவன் அகம் புறம் என்னும் வேற்றுமையின்றி மிக்க சாமானியராகிய உலகத்தாருக்கு விறகில் தீப்போல மறைந்து உடனாயும், மந்ததர மலபாகமுடையார்க்குப் பாலில் நெய்போல ஒருவாற்றால் தோன்றியும் தோன்றாது மறைந்துமுடனாயும், மந்த மலபாகமுடையார்க்குப் பழத்திற் சுவைபோல உய்த்துணரப்பட்டு உடனாயும்,தீவிரமலபாக முடையார்க்கு எள்ளின்கண் எண்ணெய்போல விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உடனாயும் நிற்கும் இயல்புடையனாதலால், அகத்துச் செய்யும் அகப்பூசையையும், புறத்துச் செய்யும் புறப்பூசையையும் ஏற்றருளுவன் என்பர். இக்கருத்தேகொண்டு நோக்கின், திருமுறைகள் வற்புறுத்தும் இருவகைப் பூசைகளின் கருத்தும் தெளிவாகும்.

---

1. திருநா. 76 : ச.

2. தன்பாலுள்ள பூவின் தேனையுண்டற்கு வரும் உயிர்களை வருத்திக் கொல்லும் பூஞ்செடிகளும் பூமரங்களும் உண்டு ; அதனால், "பிற வுயிர்களைச் சிறிதும் வருத்துவதில்லாத பூமரம்" என விளக்கல் வேண்டிற்று.

இவ்வாறு, இறைவன் அகம் புறம் என்னும் இரு வகைப் பூசைகளையும் ஏற்றுக்கொள்வனாயினும், மேலே கூறியபடி அந்தரியாகம் எனப்படும் அகப்பூசை, வாதனா மலம் நீக்கலுறுவார்க்கு இன்றியமையாத சாதனமாதலின், அதனையே மேலோர் சிறப்பித்துப் பேசுகின்றனர் என அறிக. இதனையே சிறப்பச் செய்வதால், இறைவன் விளங்கித் தோன்றி வாசனையைப் பற்றறத் துடைத்துத் தீயானது இரும்பைப்பற்றி, அதன்வண்ணம் சிறிதும் தோன்றாதவாறு தனது வண்ணத்தையே அதற்கு விளங்கச் செய்தல்போல சிவபெருமான் உயிரைத் தன்வண்ண மாக்கிப் பேரானந்தப் பெருஞ் செல்வத்தை யருளுவன் என அறிக. சிவன் உயிர்களைத் தன்வண்ணமாக்கி இன் புறுத்தும் இயல்பை, "தன்னைக் கண்ட என்வண்ணம் எவ் வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசன்"[1] எனச் சேரமான் பெருமாளும்,

"பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செய்யுமவன்......"[2]

என்று திருஞான சம்பந்தப் பெருமானும் எடுத்தோதி வற்புறுத்துதல் காண்க.

இந்நூலின்கண், இச்சாதன இயல் மூன்று சூத்திரங் களால் விளங்க வுரைக்கப்பட்டிருக்கும் அருமை நோக்கத் தக்கது. முப்பொருளுண்மையும் அவற்றின் இலக்கணமும் செவ்வே அறியமாட்டாத பிறர், சாதனமெனவும் பயனெ

---

1. பொன்வண். க. 2. திருஞா. 126 : எ.

னவும் கூறினாராயினும்[1] முத்தியின் இயல்பை நன்கு உணராராயினர். முத்தியின் இயல்பினை உணராமையால் அதற்குச் செய்யவேண்டிய சாதனங்களும் அறியா ராயினர்: "நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"[2] என்ற அறநூற்படி ஆன்மாவைப்பற்றிய மலநோயை அவர்கள் அறியமாட்டா ராதலால் அதனைத் தணித்தற்குரிய மருந்து சிவஞான மென்பதைத் தெளியாராயினர்.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"[3]

என வரும் அனுபவஞானியாகிய திருவாதவூரடிகள் திருவாசகம் இங்கே நோக்கத்தக்கது.

சாதனவியல் முடிந்தது.

---

## 4. பயனியல்

மேலே ஏழு, எட்டு, ஒன்பதாஞ் சூத்திரங்களால் திருவடிப் பேற்றுக்குரிய சாதனங்களைச் சாதனவியல் என்ற தலைப்பின்கீழ் வைத்து விளக்கிய ஆசிரியர், நிறுத்த முறையே இனி அச்சாதனங்களால் விளையும் பயனை இறுதி மூன்றுசூத்திரங்களால் விளக்குகின்றார். அதனால் இவ்வியல் பயனியல் எனப்படுவதாயிற்று.

---

1. வடமொழிப் பிரமசூத்திரத்துக்குப் பிறருரைத்த பேருரைகள் இவ்வாறு சாதனப்பயனென வகுத்துரைப்பது காண்க.
2. குறள். 948. 3. திருவாச. அச்சோ. க.

## பத்தாஞ் சூத்திரம்

மேலே கூறிய சாதனங்களின் பயன் கூறுவான் தொடங்கிய ஆசிரியர், அப்பயன் மலநீக்கமும், சிவப் பேறும் என இரண்டாக வகுத்துக்கொண்டு, இப்பத்தாஞ் சூத்திரத்தால் மலநீக்கத்தைக் கூறுகின்றார்,

"இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லாம்
இதமகிதம் இவனுக்குச் செய்தார்பா லிசையும்
அவனிவனாய் நின்றமுறை ஏகனாகி
அரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றம்
சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"

என்பது பத்தாஞ் சூத்திரத்தின் முதற்செய்யுள். இதற்குப் பொருள், பதிஞானத்தால் ஆன்மாவின்பால் காணப்பட்ட இறைவன், பெத்த மலத்தோடு கூடிய நிலையில் ஆன்மாவுடன் உடனாய் நிற்பினும் வேறு காணப்படுமாறு இன்றி ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின்வழி நிற்பன். ஈண்டு அம்முறையே ஆன்மா அம் முதல்வனோடு உடனாய்நின் றறிவனாயினும், தான் என ஒருபொருள் உண்டு என்பது தோன்றாதவாறு இறைவனோடு ஒற்றுமைப்பட்டு (ஏகனாகியும்) அவன் பணியின்கண் (இறை பணியின்கண்) வழுவாதும் நிற்றல் வேண்டும். அங்ஙனம் ஏகனாகி நிற்றலால், யான் எனது என்னும் செருக்கு அறும்; அறவே, அவ்விறைவனும் "நம்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன், தன்செயல் தானேஎன் றுந்தீபற,"[1] என்றபடி இவன் (ஆன்மா) செய்யும் இதம் அகிதங்களெல்லாம் தான் செய்யும் இதம் அகிதங்களென

1. திருவுந்தி. 6.

உடனாய் நின்று அவற்றை ஏன்றுகொள்வன்; இவ்வாறு இறைவனோடு ஏகனாகிநிற்றல், இறைபணிநிற்றல் என இருவகைப்படும். இவ்விருவகையானும், இவன் செய்யும் இதமகிதங்களெல்லாம் இவனுக்கு வினையாய் முடியாமல் இறைவன் செயலாகவே முடிந்துவிடுகின்றன; இதனால் வினைகளைச் செய்தலாகிய ஆகாமியமும் வினைப்பயன்களை நுகர்தலாகிய பிராரத்தமும் இவனைப் பந்தியாதொழிகின்றன. ஒழியவே, முன்னர் ஈட்டப்பட்டுக் கிடக்கும் சஞ்சிதவினையும் வினைக்குப் பற்றுக்கோடாயுள்ள மாயையும், மாயை கன்மங்களைப் பற்றிக்கொண்டு தன் செயலை விளைத்து வந்த ஆணவமலமும் ஆகிய மூன்று குற்றங்களும் இவனைப் பந்திக்கமாட்டாவாம். இனி, வினைகட்கெல்லாம் பயன் உண்டென்பது நியதி[1] யாதலால் இவனாற் செய்யப்பட்ட நலந்தீங்குகட்குப் பயனாகிய இன்ப துன்பங்கள் இவனுக்கு உண்டாகாவென்பது குற்றமன்றோ எனின், குற்றமாகாது; அதுபற்றியே இவன் செய்த இதமகிதங்கள் இவனுக்கு இதமகிதம் செய்தார்பால் சென்று இசையும் என்று கூறப்பட்டுள்ளது.

இவன் செய்த இதமகிதம் இவனுக்கு அவற்றைச் செய்தார்பால் இயைவதாவது, அவர் செய்யும் இதமகிதங்களெல்லாம் மிகுதிப்படுமாறு துணையாய்ச் செல்லும் என்பது. இச்சூத்திரம் மூன்று கூறுகளையுடையது.

இனி, அவனிவனாய் நின்ற முறை ஏகனாகி என்பது பத்தாஞ் சூத்திரத்து முதற்செய்யுள் முதற்கூறு. யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களாகிய செருக்கு விளைதற்கு ஏதுவாகிய மலக்கோணலை அவனிவனாய் நின்ற முறைப்படி, இவன் அவனாய் நிற்கும் ஞானத்தீயினாலே

1. "நாபுக்தம் க்ஷீயதே கர்மம் கல்பகோடி ஸதைரபி" என வட நூல்கள் நியதியின் இயல்பைக் கூறுவது காண்க.

காய்ச்சி அக்கோணலைத் தீர்த்துத் தான் முதல்வன் வழியாக நிற்கவே, அம் முதல்வன் தனது சொரூபத்தை விளக்கி நேராக வெளிப்பட்டுத் தோன்றுவன். தோன்றவே, புண்ணியம், பாவம் என்னும் இருவினைகளும் இவனைப் பொருந்தாமல் ஒழியும். அவ்வாறின்றி, யான் எனது என்னும் செருக்குடையார்க்கு முதல்வன் விளங்கித் தோன்றுதல் இல்லையாம். செருக்குடையார், ஞானநாட்டமிழந்து தம்முடைய கன்மத்துக்கீடாகப் போகத்தைப் புசிப்பர். அப்புசிப்பின் வழியாக, ஆகாமியவினை யேறுதல் செய்யும். ஆகலான், மாயாகாரியமான கருவிகளைப் பொருந்தி யறிகிற சிற்றறிவினின்றும் (இந்திரியங்களின் வயமாக நின்றறியும் பரதந்திரிய அறிவினின்றும்) நீங்கி ஏகனாகிநிற்கும் ஞானம் (சுதந்திரஞானம்) இன்றியமையாது வேண்டப்படும் என அறிக. இதுபற்றியன்றோ அருள்ஞான வேந்தராகிய திருநாவுக்கரசதேவர்,

"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள்! தீவினைகாள்! திருவே! நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான்; யானேல், வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வான் உழிதர் கின்றேன்
இடையிலேன்; கெடுவீர்காள் இடறேன் மின்னே"[1]

எனத் திருவாய் மலர்ந்தருளியிருப்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

இனி, அரன்பணியில் நிற்க என்பது பத்தாஞ் சூத்திரத்து முதற்செய்யுளின் இரண்டாங்கூறு. உலகத்துத் தண்டத்தலைவராயினார் பிழை செய்தாரைத் தங்கீழ்

1. திருநா. 241 : க.

அடக்கி யொடுக்கித் தாம் இழுத்த வழியெல்லாம் அவரைப் பரதந்திரராக்கி இடர்ப்படச்செய்வர்; அதற்குக் காரணம், அவர்கள் அரசினது ஆணைவழிநிற்கும் ஆற்றல்கொண் டன்றிப் பிறிதில்லை. அதனையறிந்து, ஒருவன், பாடிகாவல ராகிய தண்டத்தலைவர்க்கும் தனக்கும் இறைபாகும் அரசியலைத் தலைக்கூடப்பெற்று அதன் கருத்தின்வழி ஒழுகவல்லனாகியவிடத்து, பரதந்திரமாதலின்றி, அரச ருளால் பாடிகாவலரையும் தன் ஆணைவழி நிற்பித்துக் கொள்ளும் சுதந்திரனாவன்.[1] அதுபோல, வினைசெய்தமை பற்றி ஐம்பொறிகள் ஒருவனைத் தங்கீழ்ப்படுத்திப் பல வழியும் ஈர்த்தலின் அவை ஈர்த்தவழியெல்லாம் அவன் பரதந்திரியப்பட்டுக் கிடக்கின்றான்; அப்பொறிகள் அவ்வாறுசெய்வது அவை முதல்வன் ஆணைவழி நிற்றலாற் பிறக்கும் ஆற்றல்கொண்டே யன்றிப் பிறிதில்லை யென்ப துணர்ந்து, அப்பொறி முதலியவற்றையும் தன்னையும் உடையானாகிய முதல்வன் திருவடிகளைத் தலைக்கூடப் பெற்று, அவன் பணியில் நின்று ஒழுகுவனாயின், அவன் அம்முதல்வன் திருவருளால் அவ்விந்திரியங்களைத் தன் ஆணைவழி நிற்பித்துக்கொள்ளவல்ல சுதந்திரனாவான். அவ்வாறு நிற்குமிடத்தும், பலநாள் பயின்ற வாசனைபற்றி ஒரோவிடத்து அவ்விந்திரியங்களின் குறும்பு நிகழும்; அதுவும் முதல்வன் செயலே யென்று வரைசெய்து இறை பணியில் வழுவாதொழுகுதலே வேண்டுவதாம். அதனால், பொறிவழி யோடும் பரதந்திரனாகும் குற்றம் நிகழா தென்றறிக.

1. இன்றைய அரசியற்றலைவர் பலர், சில ஆண்டுகட்குமுன் பரதந்திரராய்ப் பாடிகாவலரால் அலைக்கப்பட்டதும், இன்று சுதந்திர ராய் விளங்கி அப் பாடிகாவலரைத் தமது ஆணைவழி நிற்கச் செய் திருப்பதும் கண்கூடாகக் காணலாம்.

இங்ஙனம் இறைபணியில் நிற்கும் ஒருவன் பாதகம் செய்யினும், அதனைத் தன் பணியாகக்கொள்வதும், அவன் செய்யும் நலந்தீங்குகளை, அவனுக்கு அவற்றைச் செய்தார் பால் இசையச் செய்வதும் இறைவனுக்குக் குற்றமன்றோ எனின், "தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ தலையா யவர்தம் கடனாவதுதான்"[1] என்ற அப்பமூர்த்திகளின் அருளுரைப்படி மெய்யுணர்வால் அடைக்கலம் புகுந் தாரைத் தன்னையேபோலச் சுத்தராகச் செய்து பாது காப்பது தலைவனாகிய இறைவனுக்குக் கடப்பாடாதலால் குற்றமாகாதென அறிக.

இனி, நீர்வேட்கை, பசிநோய் முதலியன இல்லாமை நெடுங்காலமரணமில்லாதிருத்தல் முதலிய சித்திகளை உடை யவர்களும் இறைபணி நிற்றலாகிய ஞானம் இல்லா தொழிகுவராயின்,[2] அவர்கள் பிறப்பிறப்புக்கட்கு உள்ளாவர். அவ்விறைபணிநிற்றலையுடைய ஞானவான்கள் மகளிரைக் கூடல் முதலிய செயல்கள் பல செய்யினும், அவை அவர் பெறுதற்குரிய வீடுபேற்றிற்குத் தடையாய்க் கெடுப்பன அல்லவாம். தீயின் சுடுதல் வல்லமை தம்மாட்டுச் செல்லாதவாறு அடக்கும் அக்கினித் தம்பனம் வல்லவரை அத்தீயானது சுடுவதில்லை; கொல்லுவதற்கேதுவாகிய விடங்களைத் தடுக்கவல்ல மந்திர மருந்துகளையுடையவர்கள், அவற்றை நிறைய உட்கொண் டாலும் அவ்விடங்களால் அவர்கட்குக் கேடுண்டாவது

1. திருநா. 1 : ச.

2. எண்வகைச் சித்திகளைப் பெறுவது பாசஞானப் பயன்; உண்மை ஞானம் திருவருளால் வாய்ப்பது. அதனால், சித்திகளைப் பெற்றோர் உண்மை ஞானமிலராதற்கும் இயைபுண்டு என அறிக. இதுபற்றியே "அட்டமாசித்தி தானும் அருள் ஞானவாயிலாகா" தென்பது முதலாகப் பலபடச் சான்றோர் உரைப்பாராயினர்.

இல்லை. இவ்வாறே சிவஞானப்பேறுடைய ஞானவான்கள் எவ்விந்திரியத்தின் வழிநின்று எத்தொழிலைச் செய்யினும் அவர்பால் அதுபற்றி விருப்பு வெறுப்புக்கள் நிகழ்ந்து பிறவிக்கு வித்தாவது இல்லையாம். நுகரக்கடவ பிராரத்த வினையும் தன் சத்திகெட்டு வாதனை மாத்திரையாய் நின்று சிறிதே தாக்கும். ஏனை மலவாதனைகள் வேறொரு பற்றில்லாமையால் அவர்தம் அவ்வுடம்பு மாயுங்காறும் அதனோடு சேர்ந்திருந்து, மாய்ந்தவழித் தாமும் உடன்மாய்ந் தொழியும். "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரும்நோய்"[1] எனத் திருவள்ளுவர் கூறுவதும் அதற்குப் பரிமேலழகர் உரையும் காண்க.

இனி, அகலுங்குற்றம் என்பது பத்தாஞ் சூத்திர முதற் செய்யுளின் மூன்றாங்கூறு. இது சூத்திரச் செய்யுளிலே ஓரளவு விளக்கி வற்புறுத்தப்பட்டுளது. எஞ்சிய பகுதி முற்றும் வருகின்ற பதினோராஞ் சூத்திரத்திலும் இயைபு பற்றி விரித்துக் கூறப்படுகிறது. அதனால் ஈண்டுக் கூறப் படவில்லை.

---

## பதினோராஞ் சூத்திரம்

மேலேகூறிய சாதனங்களால் விளையும்பயன், மல நீக்கமும் சிவப்பேறும் என இரண்டாமெனக் கூறப் பட்டது. அவற்றுள், முதலதாகிய மலநீக்கமாகிய பயன் பத்தாம் சூத்திரத்தால் உரைக்கப்பட்டமையின், மல நீங்கினோர் எய்தும் சிவப்பேற்றினை இப்பதினோராஞ் சூத்திரம் உணர்த்துகின்றது.

1. குறள் : 359.

"காயமொழிந் தாற்சுத்த ஞகி யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்கு
ஏயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
ஆயுமறி வுடையஞ யன்பு செய்ய
அந்நிலைமை யிந்நிலையி லடைந்தமுறை யாலே
மாயமெலாம் நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாருத சிவானுபவம் மருவிக் கொண்டே"

என்பது பதிஞேராஞ் சூத்திரத்து முதற்செய்யுள். இதன்பொருள். உயிர், கண்ணிந்திரியமானது சென்று ஒருபொருளைக் காணும்படி அதனேடு கலந்துநின்று காட்டுதலேயன்றி, அக்கண்ணெளியோடு அத்துவிதமாய்க் கலந்துசென்று அப்பொருளைத் தானும் காணுதல் செய்து உபகரிப்பதை நாமே காண்கின்ருேம்; அது போலவே, முதல்வன், உயிரானது ஒரு விடயத்தை அறிய வேண்டி, அவ்வுயிருணர்வோடு அத்துவிதமாய்க் கலந்து சென்று அவ்விடயத்தை யறியச்செய்தும் அறிந்தும் உபகரிக்கின்ருன். இவ்வுபகாரத்தால் முதல்வனுக்கு ஆகக்கடவது ஒன்றுமில்லை; உயிர்கள்பால் அவனுக்கு இயல்பாகவேயுள்ள பேரருளேயாம்; இச்செயல், எழுத்தை எழுதவறியாத சிறுகுழந்தையின் கையை அன்பும் அறிவுமுடைய தந்தையானவன் தன்கையாற் பற்றி எழுதுவித்தும் எழுதியும் செய்யும் உபகாரத்தைப் போல்வதாம். இவ்வுபகாரத்தை முதல்வன் செய்யாஞயின், "கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால், உடலி ஞர் கிடந் தூர்முனி பண்டமே"[1] என்றபடி, உயிர் அறிவு செயலொன்றுமின்றிச் சடம்போல ஒழியுமேயன்றி வேறில்லை.

1. திருநா. 204:௪. இதன்கண் உடலிஞரென்பது உடலையே யன்றி உயிர்க்கும் பொருந்த நிற்றல் கொண்டு, உயிரெனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இவ்வண்ணம் எத்தகைய கைம்மாறும் வேண்டாது உயிரது நலனென்றையே கருதி இறைவன் செய்யும் உபகாரத்தைக் கடைப்பிடித்து அறிந்து அவன் அருள்வழி நிற்கப்பெறின், அத்தொடர்பே பற்றி அவன் திருவடிகளைத் தலைப்படுதற்கண், இச்சையானது இடையறாது நிகழும்; அங்ஙனம் அறிவிச்சைகள் இரண்டும், பிறிதொன்றிற் செல்லுதலின்றி, அவ்வத்துவிதநிலை ஒன்றே பற்றி இறைவன் திருவடிக் கண்ணவாய் ஒருங்கு நிகழவே, காயமொழிந்தபின் மலம்நீங்கி ஆன்மாச் சுத்தனாய் நிற்கும்; அம்முறைமை உடலோடு நிற்கும்போதுதானே உயிர்க்குக் கைகூடப் பெறுவதால் அறிவிச்சை செயலென்னும் மூன்றனுள் எஞ்சிய செயலும் அவ்வறிவு விழைவுகளோடு ஒப்ப ஒருவழிக்கொண்டு அம்முதல்வன் திருவடியைத் தலைக்கூடப் பெற்றுச் சிவானுபவமே சுவானுபவமாகக் கொண்டு வாழும் என்பதாம்.

இனி, சாலோக சாமீப சாரூபமாகிய பதமுத்திகளின் மேற்பட்ட முத்திநிலை, பரமுத்தி யெனவும் சீவன்முத்தி யெனவும் இருவகைப்படும். இவற்றுள் பரமுத்தியாவது, மும்மலங்களும் அவற்றின் ஏதுவும் பயனுமாய வினையும் உடம்பும் நீங்கிச் சிவத்தோடு ஒன்றியுடனாயிருத்தல்; திருஞானசம்பந்தப்பெருமான் பெற்ற பரமுத்தி நிலையைச் சேக்கிழார் பெருமான், "போதநிலை முடிந்தவழிப் புக்கு ஒன்றி யுடனானார்"[1] என்று கூறியது காண்க. சீவன் முத்தியாவது சீவிக்கும்பொழுதே மும்மலமும் தொலைந்து உடலைப்பற்றிய உணர்வு சிறிதும் தோன்றாதவாறு சிவத்தோடு ஒன்றுபட்டுநிற்றல். நம் சமயகுரவன்மார்களாகிய திருஞானசம்பந்தர் முதலியோரெல்லாம்

1. பெரிய பு. திருஞானசம். கஉநுரு.

இவ்வுலகில் இருந்த இருப்புச் சீவன்முத்தியிலே யென்றே உணர்க.

இச்சூத்திரம் பத்தாஞ் சூத்திரத்தின் இறுதிக்கூறுகிய "அகலும்குற்றம்" என்பதன் ஒழிபாகக் கூறப்படும் வகையால் முக்கூற்றதாகும். ஆயினும் அம்முதற்கூறு வேறுபடவைத்து விளக்கப்படாது சூத்திரத்தோடே சேர்த்து விளக்கப்படுவதனல் இருகூறுகளே ஈண்டு விரித்துக் கூறப்படுகின்றன.

பதினோராம்சூத்திரத்தின் முதற்கூறு: "ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்" என்பது. உயிரானது கண்ணுக்குக் காட்டிக் காணுவதுபோல இறைவன் உயிருக்குக் காட்டிக் காணுதலாகிய உபகாரத்தைச் செய்கின்றான் என்பதை யறிந்து, அங்ஙனம் தெளிய அறிதலாகிய பரஞானத்தால் அன்புசெய்வார், அப்பரம்பொருளையே யுணர்ந்து நிற்ப தன்றி ஏனைப் பதார்த்தங்களைப் பார்ப்பது செய்யார்; அவை பிராரத்தவாதனை வந்து தாக்குதற்கு உரியவாகும்; அவற்றைப் பார்க்கலுறின், வரும் ஞானங்கள் தாமும் பலவாய்ச் சுட்டுணர்வின் பேதமாகவும் விந்துஞான மாகவும் பேத ஞானமாகிய பாவனைஞானமாக விருக்குமே யன்றி அனுபூதிஞானமாக இரா. இவையனைத்திற்கும் மேலுள்ள சிவஞானமொன்றே ஏனைப் பதார்த்தங்களைப் பார்க்கவாராத சிறப்புடையது; இந்த ஞானத்தைப்பெற்ற சீவன்முத்தர் சிவம் ஒன்றையே கண்டிருப்பரேயன்றி ஏனைப்பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவாதனைக்கு உள்ளாகார் என்று மேலைப் பத்தாஞ் சூத்திரத்து மூன்றாங் கூற்றின் ஒழிபு இங்கே விளக்கப்படுகிறது.

இனி, "நீரோட்டம் போல் தொடர்ந்து நீங்காது வரும்" (பிரவாக அனாதியாய் வரும்) உடல், முத்திநிலைக்

கண்ணும் நீங்காது எனவும், ஆனால் ஏனை அசுத்த உடல் போலாது நித்திய சுத்த மங்கல மயமான திப்பிய சரீரம் உண்டென்று உருவ சிவசம வாதிகள் கூறுவர். "மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல், உற்றார்க்கு உடம்பும் மிகை"[1] எனத் திருவள்ளுவனார் கூறியபடி, உடம்பு உள்ளதெனலே குற்றமாம். உளதெனவே, அதற்குக் காரணமாகிய மாயையும் அதன்கண் நிகழும் உண்டி வினைகட்கேதுவாகிய கன்மமும் அதனை விளைவிக்கும் ஆணவ மலமும் விட்டுநீங்குதல் இல்லாமையால், அவர் கூறும் உடம்பொடு கூடிய முத்திநிலை முத்திநிலையாகாதென்று தெளியப் படும். மேலும், மலநோய் தீர்த்தற்கு என வழங்கப்பட்ட உடலாகிய மருந்து அந்நோய் தீர்ந்தவழி வேண்டா மையால், உடம்பின் நீக்கம் முத்திநிலைக்கு இன்றியமையாது வேண்டப்படும் எனத் தெளிய அறியற்பாலதொன்று.

இனி, பாடாணவாதசைவர்கள், "முத்திநிலையில் ஆணவமலம் அறவே விண்டொழியும் என்பது கூடாது; அஃது அனாதியே உயிரைப்பற்றி யிருப்பதாகலின், அஃது அழியுமாயின் உயிரும் அழியும்" என்று கூறுவர். செம்பின்கண் களிம்பு அனாதியே கூடியிருப்பது; இரத குளிகை சேர்ந்தபொழுது களிம்பு நீங்குவதும் செம்பு கெடாது நிற்பதும் கண்கூடு; அதுபோல் ஆணவமல மறைப்பின் நீக்கத்தில் உயிர் கெடுமெனவும் பிறவும் கூறுவது பொருந்தாது. அன்றியும், ஆணவமலம் உயிர்க் குக் குற்றமேயன்றிக் குணமாகாது; குணமொன்றே குணியாகிய பொருள் உளதாங்காறும் உடனின்று அழியுங் கால் உடன் அழிவதாம். ஆதலால் பாடாணவாதசைவர் கூறுவது இருவழியிலும் பொருந்தாமை அறிந்துகொள்க.

1. திருக்குறள். 345.

இனி, பேதவாதசைவர் "மெய்ஞ்ஞானம் அடைந்த மாத்திரையே மலநீங்கும்; அதுவே முத்தி; இறைவனோடு கலத்தலென்பது வேண்டா" என்று கூறுவர். மெய்ஞானம் மல நீக்கத்துக்கு ஏதுவாவதல்லது பிறிதில்லை; ஞானத்தால் சிவனடியைச் சேர்ந்தபோதுதான் மலத்துக்கு வீழ்ச்சியுண்டாகும்; ஞாயிற்றோடு கண் கலந்தாற்றான் இருள்பற்றறக் கழியக் காண்கின்றோம்; அதுபோல் இறைவன் திருவடியிற் கலந்தாற்றான் மலத்துக்கு வீழ்ச்சி (நீங்குதல்) உண்டாகும் என அறிதல் வேண்டும். ஈண்டு மலநீக்கமாவது மலத்தினது மறைக்கும் ஆற்றல் (சத்தி) பற்றற ஒழிவதாகும். முத்திநிலையில் ஆணவமலம் மறைக்கும் ஆற்றல் சிறிதுமின்றிச் செயலற்றுக் கிடக்கும். அதனால் மலத்தின் நித்தியத்துக்கும் வியாபகத்துக்கும் கேடில்லையாம்.

ஈசன் உயிருக்குக் காட்டிக் கண்டிடுவன் என்பது இப்பதினோராஞ் சூத்திரத்து முதற்செய்யுளின் முதற்கூறு. எழுத்துக்களை இயக்குதற்கண் அவற்றோடு உடனாய் நிற்கும் அகரவெழுத்துப்போல, உயிருக்கு அறிவு விழைவு செயல்கள் விளங்குதற்கும் விடயங்களிற் சென்று பற்றுதற்கும், இறைவன் உயிர்களோடு கலந்துநிற்றல் இன்றியமையாததேயாம். "கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால், உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே"[1] என்ற அப்பமூர்த்திகளின் அருளுரை மீளவும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கதாம். இதன்கண் உடலினாரென்பது உயிர். காணப் படாத உயிரைக் காட்டிநிற்கும் ஒற்றுமைநயம்பற்றி, உயிர் உடலினாரென உயர்சொற் கிளவியாற் கூறப்பட்டதென அறிக.

1. திருநா. 204 : ௪.

இனி, இத்தை ஆயும் அறிவுடையனுய் அன்புசெய்ய அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே மாயமெலாம் நீங்கி அரன் மலரடிக்கீழ் இருப்பன் என்பது இப்பதினோராஞ் சூத்திரத்தின் இரண்டாங் கூறு.

பெத்தம் முத்தி என்ற இரண்டு நிலையினும் முதல்வன் நீக்கமறக் கலந்து நிற்பானுயின், அவன் எல்லா ரானும் விளக்கமாகக் காணப்பெறுதல் வேண்டுமென ஒரு கேள்வி எழுகிறது. அம்முதல்வன் தத்துவம் முப்பத் தாறுக்கும் அப்பாற்பட்டு உயிர்க்குயிராய் அதிசூக்கும சித்தாய் நிற்பன் என முன்பே கூறப்பட்டது. அதனுல் அவன் ஊனக்கண்ணுக்குத் தோன்றுவானல்லன்.[1] நான் காவது பூத தத்துவமாகிய காற்றும் நம் கண்ணுக்குத் தோன்றுதபோது முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த பொருளை அறிதல் எங்ஙனம் இயலும்? சூரியன் பக்குவ முடைய தாமரையை அலர்த்துவது போல் பக்குவ முடையவர்க்கு முதல்வன் பெருங் கருணையினுல் ஞானக் கண்ணைக்கொடுத்துச் சோதிக்குட்சோதியாய்த் தோன்று வன் என அறிக. முதல்வன் ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவம் சிவதத்துவமென மூவகைப்பட்ட முப்பத்தாறு தத்துவங்கட்கும் அப்பாற்பட்டிருப்பதை அப்பமூர்த்திகள் "அப்பாலுக் கப்பாலுக் கப்பாலானை"[2] என்றும், ஞானக் கண் கொண்டு திருவாரூரிற் கண்ட திறத்தை "ஆரூரிற் கண்டடியேன் அயர்த்தவாறே"[3] என்றும் கூறுமாற்றுல் இனிது தெளியலாம்.

இனி, இறைவன் பக்குவமுடைய உயிர்க்கு ஞானக் கண் கொடுத்து அவ்வுயிர் காணத்தோன்றுவன் என்றல்

1. பட்டி. திருவிடைமருது. உஉ.
2. திருநா. 240 : ச.
3. ,, ,, ,,

வேண்டா, வழிச்செல்வோர் தாமே மரநிழலிற் சென்று அணைதல்போல உயிர்களே போய் முதல்வனையடையும் என ஈசுர அவிகாரவாதிகள் கூறுவர். அங்ஙனமாயின், மரநிழலுக்குச் சுதந்திரமின்றிச் சென்றணைபவர்க்குச் சுதந்திரமாமாறுபோல முதல்வனை உயிர் சுதந்திரமுடன் சென்று தலைக்கூடும் என்பதாம்; உயிர் சுதந்திரமுடையதன்று; பரதந்திரியமானது; முதல்வனே சுதந்திரமுடையன் என எல்லாச் சிவாகமங்களும் கூறும். ஈசுர அவிகாரவாதி கூற்று இதற்கு முரணுதலின் பொருந்தாதென அறிக. பரிணாமவாதிகள், உயிர் கெட்டுக் கூடி அரன் அடியில் ஒன்றுப்போம் என்பர். கெட்டது ஒன்று கூடாது; கெடாதவழிக் கூடுமாறில்லை. கெடுவதே முத்தியெனில் உயிர் நித்தமென்றல் குற்றமாம். ஆகவே, எவ்வழியும் பரிணாமவாதி கூறுவது பொருந்தாதாயிற்று. கடல்நீரும் யாற்றுநீரும் சேர்ந்தாற்போல உயிர் அரன் அடியைச்சேர்ந்து அரனாகவே இயைந்துவிடும் என ஐக்கியவாத சைவர் கூறுவர். அரனும் உயிரும், அவ்விரு நீரும் போல ஒரு பொருள் அல்ல. உயிரோ களிம்பையுடைய செம்பு போன்றது. இறைவன் அக்களிம்பை நீக்கும் இரத குளிகை போல்வன். உயிரும் இறையுமாகிய இரு பொருள்களும் சித்தென்ற வகையில் ஒன்றுயினும் தம்முள் வேற்றுமையுடையன; இறைவன், அருளே வடிவாகிய சித்து; உயிர், அவ்வருளைச் சேரும் சித்து; இறைவன் பிறப்பிறப்பின்றித் தன் தாளடைந்தார்க்குப் போகமும் வீடும் நல்கும் சித்து; உயிர் பிறப்பு இறப்புக்களை அடைவதும், போக வீடுகளைப் பெறுவதுமாகிய சித்து; இறைவன் தானேஅறியும்சித்து; உயிர் அறிவிக்க அறியும் சித்து. இங்ஙனம், கண்ணொளிக்கும் ஞாயிற்றினொளிக்கும் வேற்றுமை பெரிதாயினாற்போல முதல்வனுக்கும் உயிர்க்

கும் வேற்றுமை பெரிதாதலால், இரண்டையும் நீரும் நீரும்போல ஒன்றென்பது பொருந்தாது.

இனி, சிவசமவாதிகள், மலம் நீங்கியவிடத்து இறைவனும் உயிரும் சமமாம்; ஆகவே, அவ்வாறு சமமாதலே முத்தி என மொழிவர். முதல்வன் படைத்தல் முதலிய ஐந்து தொழில்களையுடையன். "அஞ்சுகொலாம் அவர்"[1] என நாவரசர் நவில்வது காண்க. உயிர் முத்தியில் சிவத்தோடு சமமாம் எனின், உயிரும் ஐந்தொழிற்கும் உரியதென்பதுபடும்; உயிர் சிவானந்தத்தைத் துய்த்தலொன்றுக்கே உரியதன்றி முதல்வன்போல ஐந்தொழிலும் செய்யவல்லதன்று. "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர், நாழி முகவாது நானாழி"[2] என்றாற்போலச் சிற்றறிவுக்கும் சிறு தொழிற்கும் இடமாகிய உயிர் அச்சிறுமை நீங்கிய வழியும் சிறுமையுறுதற் கேதுவாகிய தன்மை நீங்காது; அத்தன்மையால், அத்தன்மை, தன்பால் சிறிதும் இல்லாத முதற்பொருள்போல் முதன்மை யெய்துவதும் ஐந்தொழில் செய்வதும் பிறவும் உயிர்க்கு ஒருகாலும் உளவாகா. எண்குணங்களையுடைய முதல்வன்பால் அக்குணங்களுள் தோய்ந்து சிவபோகம் துய்ப்பதொன்றன்றி அக்குணங்களைத் தாம் எய்துவதும் உயிர்க்கு இயலாது; அப்பமூர்த்திகள் "எண்குணத்து உளோமே"[3] என்று அருளினரேயன்றி எண்குணங்களையும் எய்தினேமே என்று கூறாமையே இதற்குச் சீரிய சான்றாதலை அறிக. இவ்வாற்றால் சிவசமவாத முத்தியும் செல்லாக்காசாய் ஒழிவது காணலாம். இவ்வியைபுகொண்டே பிற சமயிகள் கூறும் எல்லா முத்திகளும் மறுக்கத்தக்கனவே என்பதை உணர்ந்துகொள்க.

---

1. திருநா. 18, ரு.
2. மூதுரை : கக.
3. திருநா. 312 : கo.

இனி, சித்தாந்தமுத்தி வருமாறு:—காந்தம் தான் நின்றாங்கு நின்றே விகாரம் சிறிதுமின்றி இரும்பை வலிப்பதுபோலவும், இறைவன் விகாரமின்றியிருந்தே உயிரைத் தன் வழிப்படுத்தியும்; தீயானது இரும்பினிடத்துள்ள துருவாகிய கறையைப் போக்கி அவ்விரும்பைத் தன்வண்ணமாக்குவதுபோல, இறைவன் உயிரின் கண்ணுள்ள மலத்தைப்போக்கி அவ்வுயிரைத் தன்வண்ணமாக்கியும்; நீரோடு சேர்ந்த உப்பு தன்சுவை நீருக்கு ஆக்குதல்போல, இறைவன் தன் எண்குண விளக்கத்தையும் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடைய உயிர்க்கு விளங்கச்செய்தும், இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச் செய்து, தன்பாலுள்ள பொன்னியல்பாக்கும் தன்மையைக் காட்டாது அப்பொன்னை தன்னுள் அடக்கி நிற்றல்போல, தனது வியாபகத்துள் அடங்கச்செய்தும் இறைவன் இங்ஙனம் உயிர்க்கு அருளும் நிலையே சித்தாந்தம் கூறும் முத்திநிலை. இம்முத்திநிலை, கருப்பஞ்சாறு, தேன், பால், கனியின் இரதம், கற்கண்டு, சருக்கரை முதலிய சுவைப் பொருள்களெல்லாம் ஒன்றாகக் கலந்தவழி அவற்றின் சுவை வேறு வேறு பிரித்தறிய வாராமைபோல இன்னதென்று சொல்லொணாத ஆனந்த சொரூபமுடையதாகும்.

மேல் எட்டாஞ் சூத்திரத்தில் "மலரடிக்கீழ் வைப்பன்" எனவும், ஒன்பதாஞ் சூத்திரத்தில் "பாதநிழற் கீழ் நிற்க" எனவும், பத்தாஞ் சூத்திரத்தில் "ஏகனாகி நின்றிட" எனவும், இப்பதினோராஞ் சூத்திரத்தில் "அரன் மலரடிக்கீழ் இருப்பன்" எனவும் கூறப்பட்டவை முறையே, தசகாரியமுறையில் மேனிலைக்கண்ணிற்கும் சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்னும் வெவ்வேறு இயல்புகளைக் கூறுவன; ஆதலால் அது, கூறியது கூறலன்று.

இறைவன் திருவடியின்பம், இன்பமெனப்படும் எல்லாவற்றினும் தலைசிறந்தது. இதனை,

"கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"[1]

என்பது முதலிய திருவாக்குகளாற் சான்றோர் கூறுவது காண்க.

---

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

மேலே கூறிய பாசநீக்கமும் சிவப்பேறு மாகிய இருவகைப் பயனும் பெற்று உலகின்கண் சீவித்துக்கொண்டிருக்கும் சீவன்முத்தர்கள் மாட்டு நிகழும் இயல்பு இப் பன்னிரண்டாம் சூத்திரத்தால் வகுத்துக் கூறப்படுகிறது.

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடும் செறிந்திட்டு
அங்கவர்தந் திருவேடம் ஆலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப் பாடி
எங்குமியாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்குமே லானோமென் றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியார் அடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே

என்பது பன்னிரண்டாஞ் சூத்திரத்து முதற் செய்யுள். செந்தாமரை மலர்போலுமுள்ள சிவபிரான் திருவடிகளை அணையவொட்டாது மறைத்தலைச் செய்துகொண்டிருந்த மும்மலங்களும், விளக்கினது நீக்கம் பார்க்கும் இருள் போலச் சீவன்முத்தர்கள் எப்பொழுதேனும் சிவபெருமானை மறக்கின்றார்களா எனப் பார்த்து நிற்பன; அதனால்,

1. திருநா. 128 : கo.

அவற்றால் தாக்குண்டு அவற்றிற்கு இரையாகாமல் பாது காத்துக்கொள்ளுதற்குத் துணையாய் மெய்யன்பர்களோடு பயிலுவதும், அவர்களுடைய திருநீறு உருத்திராக்க முதலிய திருவேடங்களையும், சிவாலயங்களையும் சிவனெனவே கண்டு வழிபடுவதும், இருவகைச்செயலாலும் பிறக்கும் மகிழ்ச்சி மேலீட்டினால் ஆடல்பாடல்களைச் செய்வதும், இப்பேறு பெற மாட்டாத ஏனையோருடைய சிறுமை நோக்கி, எவ்விடத்தும் உள்ள தேவர்கட்கும் அரசர் முதலாயினார்க்கும் எளியராதலன்றி, திருவடியைத் தலைக்கூடப் பெற்றமையால் மேலாயினேமெனக் களிப் புறுதலும் அடியார்க்கடியராய் வாழ்தலும் செய்வர் என்பது இதன் பொருள்.

"விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை
விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையோர் பங்கனை
வலஞ்சுழி யிடமாகக்
கொண்டநா தன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
டினிதிருந் தமையாலே"[1]

எனத் திருஞான சம்பந்தரும்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"[2]

எனத் திருநாவுக்கரசரும்,

1. திருஞா. 242. உ. 2. திருநா. 312. க.

"பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே"[1]

என நம்பியாரூரரும்,

"தேவர்கோ வறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே"[2]

எனத் திருவாதவூரரும் இவ்வாறே ஏனைப் பெரியாரும் கூறியருளியவாறு கண்டுகொள்க. இவர்களனைவரும் சீவன்முத்தர்களாதலின், இங்கே இவர்களுடைய அருளுரைகள் நினைவுக்குக் கொணரப்பட்டன.

இச்சூத்திரம் மூன்று கூறுகளையுடையது. அவற்றுள் '**செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்கள்**' என்னும் முதற்கூறு சூத்திர முதற்செய்யுளாலேயே விளக்கி வலியுறுத்தப்பட்டது; அதனால், ஏனை இருகூறுகளுமே ஈண்டு வேறாக வைத்து ஆராயப்படுகின்றன.

இனி, **ஈசன் நேசரொடும் செறிந்திட்டு** என்பது இப் பன்னிரண்டாஞ் சூத்திரத்து முதற் செய்யுளின் இரண்டாங்கூறு. பெருங் காம முடையார்க்கு அத்தொடர்புடை

1. சுந்தரர். 39. கெ. 2. மாணி, 3. கெ.

யாரது சேர்க்கை அக்காமப் பயிரை வளர்க்கும் நீராதலால், அதுபற்றி அதன்கண் மிக்க விருப்பமும், அல்லாரது இணக்கம் அதனைக் கெடச்செய்யும் களையாயிருப்பதுபற்றி அதன்கண் வெறுப்பும் உண்டாவதை நாளும் காண்கின்றேம். அதுபோல, இடையருது சிவானுபவமுடையவராய்ச் சிவபெருமானுடைய செங்கமல மலர்போலும் திருவடியின் கீழ் இருக்கப்பெற்ற சீவன்முத்தர்க்குச் சிவநேயச் செல்வருடைய இணக்கம் அச் சிவானுபவமாகிய பேரின்பத்தை வளர்த்தலால் அவ்விணக்கத்தின்கண் விழைவு மிகுதியும், அதனைக் கெடுக்கும் நீர்மையுடையாரோடு கூடுதற்கண் வெறுப்பு மிகுதியும் இயல்பாகவே உண்டாம். ஈசன்பால் உள்ள அன்புடைமை ஈசன் அடியவரைக் காணும்பொழுது நிகழும் அன்பின் அளவுபற்றி அறியப்படும். ஈசன் அடியவர்பால் அன்பில்லாதார் ஈசனுக்கு அன்புடையார் போல ஒழுகுவது வெறும் நாடக மாத்திரையேயன்றி வேறில்லை.

இனி, ஈசனிடத்தில் உண்மையன்புடையார், எவ்வுயிரும் பராபரனுகிய ஈசன் சந்நிதியென்றும், இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயிலென்றும் கருதுவர்; ஏனெனில் எவ்வுயிரின்கண்ணும் அவர்கள் ஈசனைக்கண்டு இன்புறுகின்றூர்கள். உயிர் தாங்கி நிலவும் உடலனைத்தையும் அவர்கள் நடமாடுங்கோயில்கள் என்பர். அத்தொடர்பால் அச் சீவன்முத்தர்கள் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையராயிருப்பர். ஈசனுக்கு அன்பு இல்லாதவர் எவ்வுயிர்க்கும் அன்புசெய்யார்; அவ்வாறே பிற உயிர்களிடத்தும் தம்முயிரிற்போல அன்புசெய்யாதவர் ஈசனிடத்தில் சிறிதும் அன்பில்லாதவராவர்; அதனால், முடிவில் அவர்கள், தம்முயிரை மீளா நரகத்திற்கிடந்து துன்புறச் செய்தலால், தமக்கும் உறுதிசெய்துகொள்ளாத

பேதைகளாகின்றனர்; "பேதைமை யென்பதுஒன்று யாதெனின் ஏதங்கொண்டு, ஊதியம் போக விடல்"[1] எனச்செந்தமிழ்த் திருமறை யோதுவது காண்க.

இனி, ஈசன்பால் உண்மையன்புடையவர்கள், அவனுடைய அடியார்களை யடைந்து அவர்களுக்குச் செய்ய வேண்டும் தொண்டுகளை அன்புடன்செய்து அவரது உயர்வும் தமதுதாழ்வும் நோக்கிக் கூசி இன்மொழிகள் பேசி ஆடல்பாடல்களைப் புரிவர். இவ்வுண்மை,

"அரசறிய வுரைசெய்ய அப்பூதி யடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி யுடம்பெல்லாம் உரோமபுளகம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார்"[2]

"மற்றவரை எதிர்வணங்கி வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம் பெற்றாற்போல் அருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ ஓடினார் பாடினார்"[3]

என்னும் அப்பூதியடிகள் வரலாறுகூறும் திருத்தொண்டர் புராணத்தால் இனிது விளங்கும்.

இனி, அடியார் திருவேடங்களையும் சிவாலயங்களையும் சிவமெனவே கண்டு வழிபடுக என்பது பன்னிரண்டாஞ் சூத்திரத்து முதற்செய்யுளின் மூன்றாங்கூறு. சிவனடியார் சிவமேயாதல் இரண்டு ஏதுக்களால் விளக்கப்படுகின்றது. சிந்தனைக்கெட்டாதவனாகிய இறைவன் உலகத்தார் தன்னை வழிபடும் பொருட்டுத் திருநீறு உருத்திராக்க முதலிய தன் அடையாளங்களை அளித்தும் அடியார் தம்முயிருடனே சிறப்புவகையாற் கலந்தும் அவரைச் சிவமாக்குவது ஒன்று. அடியவர்கள் சிவோகம்பாவனையாலும் இதயத்

1. திருக். அ௲௪. 2. திருத். அப்பூதி. ௧௭.
3. திருத். அப்பூதி. ௧௮.

தானத்தில் ஒருவடிவில் வைத்து இறைவனைச் சிந்தித்து அவனோடு கூடுதலானும், தான் என்பதொரு முனைப்பின்றி அவனே தானேயாகிய அந்நெறி ஏகனாகி நிற்றலானும் அடியார்கள் சிவமேயாகின்றனர்; அதனால் பாசப்பற்றுடையார் அப்பற்று அறுதற்கு அவரை வழிபடுஃது இன்றியமையாதாகிறது.

இனிப் பாசங்களினின்றும் நீங்குதலேயன்றிப் பாசப் பற்றுடையார் அறிவுடைப் பொருளாயிருத்தலால், இலக்குவாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை உபாயங்களினாலும் ஈர்த்துத் தம்வழிப்படுத்தித் தம்மோடு ஒப்ப விபரீத உணர்வை அடையும் வண்ணம் செய்துவிடுவராதலின் மலத்தினும் மலமுடையார்சேர்க்கை அறவே விடப்படவேண்டும் என்க.

இனி, சிவாலயத்தைச் சிவமென வழிபடும் இயல்பு கூறப்படுகின்றது. ஆன்மாக்கள் உய்வது குறித்த சிவக் குறி (லிங்கம்) முதலிய சிவத்திருமேனிகளையே சிவமெனக் கொண்டு வழிபடும் சரியையாளர்க்கு இறைவன் ஆண்டு வெளிப்படாமல் நின்று அருள்செய்வான். அருவப் பொருளாயுள்ள சிவபெருமான் மந்திரங்களால் இச்சிவலிங்கத்தினிடத்து நிறுவப்பெற்று (பிரதிட்டை செய்யப் பெற்று) இதன்கண் அவன் எழுந்தருளியுள்ளான் என்று மந்திரங்களால் வழிபடும் கிரியையாளர்க்கு விறகைக் கடைந்தவழித் தோன்றும் தீயைப் போலவும், யோகிகள் உள்ளமெங்கணும் கோயிலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் இத்திருமேனியிலுமிருந்து பூசை கொண்டருளுகின்றான் என வழிபடும் யோகிகட்குக் கறந்தவழித் தோன்றும் பால்போலவும், அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வப்போது தோன்றி நின்று அருள் செய்வன். ஞானிகள், ஏனைக்கிரியையாளர் யோகியர்

களைப் போல ஏகதேசமாய்க் குறித்தலின்றி, எங்கணும் வியாபகனாகிய இறைவன், உலகம் உய்தற்பொருட்டு இச்சிவலிங்கத்தினிடத்திலிருந்தும் வழிபாட்டை ஏற்றுக் கொள்ளுகின்றான் என்று அன்பினால் வழிபடுவர்; அவர் கட்குக் கன்றைநினைந்தவழித் தானே யொழுகும் புனிற்றாவின் முலைப்பால்போல அவ்வன்பே தானாய் எப்போதும் சிவலிங்கத்தினிடத்து வெளிப்பட்டுநின்று அருள்செய் வன். சிவஞானச் செல்வர்களாகிய திருஞானசம்பந்தப் பெருமான் முதலியோர் பதிதோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவியதும் ஆங்காங்கு இறைவன் வெளிப்பட்டு அவர்கட்கு அருள்செய்ததும்' திருத்தொண்டர் புராணத் தால் தெள்ளிதின் அறியப்படுகின்றன.

மேலேகூறிய நால்வகைக் கருத்துக்களும் அவரவர் மாத்திரைக்கே உரியவாயிருக்கவும், சரியையாளர் போல ஞானவான்களும் வழிபடுகின்றனரே: இஃது என்னை என்றோர் ஐயம் எழுவது இயல்பு. நான்கு பாதத்தினும் நிகழும் செயல்களெல்லாம் இறைவனுடைய உண்மைப் பணிகளாகும்; மேலும் அந்த ஞானிகள் உலகிற்குக் குரவர் களுமாவர்; குரவன் கைவிடில் உலகு கைவிடும்; இவ்வாற்றால் ஞானிகள் அந்த நால்வகைத் தொழில்களையும் செய்வது கடனாகின்றது. அன்றியும், அகத்தொழில் செய்வோர் புறத்தொழிற்கும் உரியர் என்பது பற்றியும் சரியைத் தொழில் ஞானிகட்கு விலக்கன்று என்பது தெளியப் படும்.

இனி, ஞானிகளாகிய குருமூர்த்திகள் உயிர்கள் உய்தற்பொருட்டுச் செய்யும் உபகாரம் அளவிடற்கரிய தாகும். மந்திரங்களாலும் மருந்துகளாலும் சிறந்த யோகத் தாலும் பெறற்கரியது சிவனடிசேர் திருஞானம். இச் சிவஞானம் அவர்கள் அருளால் கிடைக்கத்தகுவது.

இதனை, "சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் தன் வசன, மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே—ஆர்த்த கடல், தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ, தெண்ணீர்மை யாய்! இதனைச் செப்பு"[1] என்று திருக் களிற்றுப் படியார் உணர்த்துவது காண்க.

உள்ளத்தினுள்ளே ஒளித்திருக்கும் இறைவனது கள்ளத்தைக் காட்டி வெளிப்படுத்துபவர் குருவே யாதலால், சொரூபசிவமாய் உள்ளவரும் தாபரமூர்த்த மாய் எழுந்தருளியிருப்பவரும் அறுபான்மும்மை நாயன் மார்கள் பொருட்டு ஆண்டாண்டு வெளிப்பட்டருளிய மூர்த்தங்களுமெல்லாம் குருவடிவமே எனத்தேறி அக்குரு மூர்த்திகளை வழிபடவேண்டும். அங்ஙனம் வழிபடவே, சிவபெருமான் அவரை ஆவேசித்து நின்று தம்முடைய முட்டைகளைத் தம் வண்ணமாக்குதற்கு முறையே தீண்டு தல், நினைத்தல், பார்த்தல் முதலியவற்றைச் செய்கின்ற கோழி, ஆமை, மீன் முதலியவற்றைப்போல, பரிசம், பாவனை, திருநோக்க முதலிய தீக்கைகளினாலே தாமாம் வண்ணம் செய்தருளுவர்.

பயனியல் முடிந்தது.

சிவஞானசித்தியார் ஆராய்ச்சி முற்றும்.

மெய்கண்டதேவர் திருவடிகள் வாழ்க.

1. திருக்களிறு. கூ.

# இவ்வாராய்ச்சியில் எடுத்தாண்ட நூல்கள்

திருக்குறள்
திருஞானசம்பந்தர் தேவாரம் (திருஞான. தேவாரம்)
திருநாவுக்கரசர் தேவாரம் (திருநா)
சுந்தரர் தேவாரம் (சுந்தரர்)
திருவாசகம் (திருவாச)
திருச்சதகம் (திருச்சத)
அச்சோப்பத்து (அச்சோ)
திருவிசைப்பா
திருமந்திரம் (திருமந்)
பெரிய புராணம்: திருஞானசம்பந்த நாயனர் புராணம்
—(பெரிய பு-திருஞான)
அப்பூதியடிகள் நாயனர் புராணம் (திருத்தொண்டர்-அப்பூதி)
சிவஞானபோதம்
சிவஞானபாடியம்
சிவஞானசித்தியார் அளவையியல் (சிவ. சித்தி : அளவை)
சுபக்கம் (சிவ. சித்தி. சுபக்)
பட்டினத்தடிகள் : திருக்கழுமல மும்மணிக்கோவை
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
திருவுந்தியார் (திருவுந்தி)
திருக்களிற்றுப்படியார் (திருக்களிறு)
உண்மை விளக்கம்
சேரமான்பெருமாள் பொன்வண்ணத்தந்தாதி
தாயுமானவர் : எந்நாட்கண்ணி : (எந்நாள்)
சிவபோகசாரம்
சிவசமவாதவுரை மறுப்பு
நாலடியார்
ஐங்குறுநூறு (ஐங்)
புறநானூறு (புறம்)
பௌட்கரபாடியம் பிரமாணபடலம் (பௌட். பிர)
பதிபடலம் (பதி)
சாந்தாக்கியோபநிடதம்
மிருகேந்திர விருத்தி
பிரமசூத்திரபாடியம்
மூதுரை
பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்